

க்தி

விரோதி - சித்திரை

விலை 8 அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1949
MADRAS

ஒளியில் சிறந்த நக்ஷத்திரங்கள் நடித்த

மஹாலிங்கம்
ராஜகுமாரி
ஸரோஜினி
கிருஷ்ணன்
மதுரம்

இசைச் சிகரம்

பவளக்கொடி

மதராஸ்
ப்ரபாத்.. ஸன்.. ஸரஸ்வதி
மற்றும் பல இடங்களிலும்

பொருள் அடக்கம்

மலர் 16 : இதழ் 1

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
88893
சென்னை-600 008.

○

ஆசிரியர் குறிப்பு ... ஆசிரியர் 1
உமார்க் கய்யாம் ... எஸ். வையாபுரிப் பிள்ளை 3
தவப் பயன் ... கு. அழகிரிசாமி 9
வியாபாரியின் காதல் ... ஓ. ஹென்றி 16
நிலவு ... க்வோ மோ-ஜோ 20
கிறிஸ்துவ சமயவாதிகள் ... வி. சக்கரை செட்டியார் 30
படங்கள் ... ... 33—40
என் வாழ்க்கைத் தத்துவம் ... ஐன்ஸ்டைன் 41
குட்டிக் கதைகள் ... ஐவான் க்ரிலாவ் 47
தெலுங்கு இலக்கியம் ... கே. ராமகோடீஸ்வர ராவ் 53
குழந்தை நகர் ... சி. என். வைத்தீஸ்வரன் 58
மருந்தும் மனமும் ... ஹால்போர்லண்ட் 62
புத்தாண்டு ... 'கலைவாணன்' 66
நிலம் சமூகச் சொத்து ... ஜே. சி. குமரப்பா 68
புத்தக உலகம் ... நால்வர் 70

அட்டைப் படம்: கே. முத்துராமலிங்கம், கநர்

○

m211,N36,5
N49.16.1

விரோதி சித்திரை

சக்தி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1949
MADRAS

ஒளியில் சிறந்த நக்ஷத்திரங்கள் நடித்த

மஹாலிங்கம்

ராஜகுமாரி

ஸரோஜினி

கிருஷ்ணன் மதுரம்

இசைச் சிகரம்

பவளக்கொடி

மதறாஸ்

ப்ரபாத்.. ஸன்.. ஸரஸ்வதி

மற்றும் பல இடங்களிலும்

BOOKS IN ENGLISH

●

CAPITALISM, SOCIALISM OR VILLAGISM? By Dr. Bharatan Kumarappa, preface by Gandhiji Rs. 5, ECONOMY OF PERMENENCE By Dr. J. C. Kumarappa preface by Gandhiji Rs. 2, Studies in the Psychology of Sex by Havelock ELLIS Rs. 45, Rubaiyat of Omar Khayyam Rs. 1/8, Father Brown by G. K. Chesterton Rs 1/8, Jeers by P. G. Wodehouse, Rs. 1/8, Pride and Prejudice by Jane Austen Rs. 1/8, Frevd His Dream and Sex Theoris by Joseph Jastrow Rs. 1/8, Treasure Island by R. L. Stevenson Rs. 1/8, Oliver Twist by Charles Dickens Rs. 1/8, Freedom Road by Howard Fast Rs. 1/8, Laugh with Leacock by Stephen Leacock Rs. 1/8, Four Great Comedis by Shakespeare Rs. 1/8, The Covered Wagon by Emerson Haugh Rs. 1/8, The Autobiography of Benjamin Franklin Rs. 1/8, The Great Short Storis of de Manpassant Rs. 1/8, The Good Earth by Pearl Buck Rs. 1/8, The Pocket Treasury Rs. 1/8, Decameron by Boccaccio Rs. 1/8, Merriem-webster Pocket Dictionary Rs. 1/8, India and the International crisis by Prof. K. J. M. Tharakan, M.A., As. 12, Cold Rice by K. Nagarajan Rs. 3, Five Plays by H. Chattobadyaya Rs. 1/8, Fancy Tales by Manjeri S. Isvaran Rs. 2, Angry Dust by Manjeri S. Isvaran Rs. 2, Naked Shingles by Manjeri S. Isvaran Rs. 2/8, Gandhism in the Atomic Age Rs. 2, Dedicated Life by Dr. Mrs. Muthulakhsmi Reddi As. 8, The Fourth Avatar by Manjeri S. Isvaran Re. 1, Essentials of Gandhism by V. Swaminatha Sarma As. 12.

Postage Extra.

SHAKTI KARYALAYAM

P. B. No. 660. MADRAS - 14.

உங்கள் குழந்தைக்கு புத்துயிர் அளியுங்கள்

ஜம்மியின் லிவர்க்யூர் ஒன்று தான் சிகிச்சைக்கு உள்படாது என்று கைவிடப்பட்ட குழந்தைகளின் பலவிதமான கட்டி வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது. டாக்டர்களின் முழு நம்பிக்கைக்குப்பாத்திரமாக வுள்ளது.

ஜம்மியின் லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு அற்புதமருந்து.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்

மைலாபூர், மதராஸ் (போன் நெ. 8139),

தெப்பகுளம் திருச்சினுப்பள்ளி. பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர்,

பம்பாய் 4. (போன் நெ. 41593) மற்றும்: லக்னோ, கல்கத்தா.

J. 237 Tamil

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1949
MADRAS

பார்லி வாட்டரும், கஞ்சியும் இவ்விதம் சுலபமாகத் தயாரிக்கலாம்

பார்லி வாட்டர்: பியூரிடி பார்லி இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு எடுத்துக்கொண்டு சிறிது ஜலம் சேர்த்துக் கலந்து ஒரு பைன்ட் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவிடவும். பிறகு ருசிக்குத் தக்கபடி உப்பு சர்க்கரை அல்லது எலுமிச்சம்பழ ரஸம் சேர்க்கவும்.

கஞ்சி: இதை வழக்கம்போலத் தயாரிக்கவும். ஆனல் தயாரிக்க இருபது நிமிஷ நேரம் தான் ஆகும். ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி எட்டு ஸ்பூன் சாதாரண பார்லி அரிசிக்குச் சமம் என்பது ஞாபகமிருக்கட்டும்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX-4 TAMIL

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள்:

பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12, சென்னை.

திரையிடத்தயார்!
முருகன் டாக்கீஸாரின்
ரத்னகுமார்
P.U.சின்னப்பா * P.பானுமதி * D.பாலசுப்ரமண்யம்
M.G.ராமசந்திரன் * K.P.கேசவன் M.K.மீனலோசனி
N.S.கிருஷ்ணன் * T.A.மதுரம் நடித்தது
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
ஸ்டூடியோ: நியூடோன்...
டிஸ்டிரிப்யூட்டர்ஸ்: முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
மதுரை.....பெங்களூர் சிடி.....பெஜவாடா...
MTF

விரோதி
மலர் 16

சக்தி

சித்திரை
இதழ் 1

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

ஆசிரியர் குறிப்பு

சக்தி பதினாறுவது மலரின் முதல் இதழ் உங்கள் கையில் இருக்கிறது. "பொங்கல் மல"ரிலிருந்து முற்றிலும் வெள்ளைத் தாளில் அச்சிடப் பட்டு, புதுமையும் அழகும் கலந்து வெளிவரும் இதழ்கள் உங்கள் கண்ணுக்கும் உள்ளத்துக்கும் விருந்தாகத் திகழும் என்பதில் எங்களுக் குச் சந்தேகமில்லை. தவிரவும் இதழ்களை வருஷம்தோறும் பைண்டு பண்ணி வைத்துக்கொள்ளுபவர்கள் இந்த அழகிய மாறுதலைப் பெரிதும் வரவேற்பார்கள்.

சென்ற இதழில் வெளிவந்த நாதஸ்வர வித்வான் ஸ்ரீ டி. என். ராஜரத்தினத்தின் சுயசரிதை வாசகர்களுக்கு மிகவும் பிடித்த அம்சமாக அமைந்துவிட்டது. நம் தலைமுறையில் சங்கீதக் கலையில் மேதையாக விளங்கும் ஒருவருடைய சுயசரித்திரம், எதிர் காலம் முழுவதும் சரித் திரப் பெருமைவாய்ந்த விஷயமாகத் திகழக்கூடியது அல்லவா? இதே போல், சங்கீதம் மட்டுமல்லாமல், நடிப்பு, ஆராய்ச்சி, இலக்கியம், அர சியல் முதலிய துறைகளில் தலைசிறந்தவர்களாக விளங்கும் தமிழர் களின் சரித்திரங்களையும் சக்தியில் வெளியிட ஏற்பாடு செய்துவரு கிறோம். சங்கீதத் துறையில் மேதாவிகளாக உள்ள வேறு சிலரின் சரித்திரங்களையும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

தற்போது வெளிவரும் அம்சங்களுடன் பலவகையான கிராமிய இலக்கியங்கள், ஒற்றை அங்க நாடகங்கள் முதலிய பல புதிய பிரயோஜன கரமான அம்சங்களையும் சக்தியில் தொடர்ந்து வெளியிட்டு வருவோம். தமிழ் நாட்டில் இலக்கியத் துறைகளில் செய்யும் புதிய பரிசோதனை களுக்கு வரவேற்பு அளிக்கிறோம். உலகிலும், தமிழுலகிலும் கலைத்துறை யில் அவ்வப்போது காணும் புதுமைகளை சக்தி பிரதிபலித்துக் கொண் டிருக்கும்; புதுமைகள் காண்பதற்கு உற்சாகமும் அளிக்கும். சுருங்கச் சொன்னால் உலகப் புதுமையின் அருணோதயத்தைக் காட்டும் உதய தாரகையாக சக்தி இலங்க வேண்டும் என்பதே எங்கள் லட்சியம்.

* • * * *

இத்தாலி நாட்டில் பிறந்து, தமிழகத்தில், சென்னையில், வசித்துவரும் மூதாட்டி ஸ்ரீமதி மாண்டிஸோரி அம்மையைப் பற்றி அறியாதவர்கள் கிடையாது. குழந்தையின் மனோதத்துவக் கலையில் உலகத்திலேயே இவருக்கு ஒப்பான நிபுணத்துவம் பெற்றவர்கள் யாரும் இல்லை. இவருடைய சமாதானத் தொண்டுக்கு நோபல் பரிசு அளிக்கப்போவதாகக் கூறப்படுகிறது. விரைவில் இந்த அம்மையாரின் வரலாற்றை **சக்தி** யில் நீங்கள் எதிர்பார்க்கலாம். இவருடைய புத்தகம் ஒன்று தமிழாக்கப்பட்டு "குழந்தைமை ரகசியம்" என்ற பெயருடன் நம் வெளியீடாகத் தயாராகிக் கொண்டு வருகிறது என்னும் சந்தோஷச் செய்தியையும் வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

கவிச் சக்கரவர்த்தி கம்பரின் விழா செட்டிநாட்டில் காரைக்குடியில் சமீபத்தில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. தமிழ் நாடு முழுவதிலும் ஒரு மிகப் பெரிய கலைத்திருவிழாவாக கம்பர் விழா கொண்டாடப்படவேண்டும். கம்பரை எவ்வளவு சிறப்பாகக் கௌரவிக்கிறோம், எவ்வளவு தெளிவாகப் புரிந்து கொள்ளுகிறோம் என்பதைக் கொண்டு தான் நம்முடைய கலைஞானத்தை இன்று அளவிட முடியும். அப்படிப்பட்ட மகா கலைஞனுடைய திருவிழா ஊர்கள் தோறும் நடக்க வேண்டும்; மகா கலைஞனுடைய சிருஷ்டிகள் உலகெங்கும் பரவ வேண்டும். இதற்காக ஆங்காங்கே சங்கங்கள் நிறுவி தமிழ் மக்கள் ஒன்று கூடிப் பாடுபடவேண்டும். கம்பர் கழகங்களை சென்னையிலும் பிற இடங்களிலும் நிறுவ ஏற்பாடுகள் நடந்து வருவதாக அறிகிறோம். இது ஒரு சுப சூசகம். 'கம்பர் கழகம் இல்லாத ஊரில் கம்பர் கழகத்தை நிறுவ வேண்டும்' என்பதே நம் கோரிக்கை.

உமார்க் கய்யாம் என்ற பாரசீகக் கவிஞனைப் பற்றிய அழகிய கட்டுரையை வழங்குகிறார் நம் தமிழ்ப் பேரறிஞர். கீழை நாட்டுக் கவிகளிலேயே, அதிகமாக உலகப் பிரசித்தி பெற்றவன் உமார்க் கய்யாம்தான் என்றால் மிகையாகாது.

உமார்க் கய்யாம்

எஸ். வையாபுரிப் பிள்ளை

உமார்க் கய்யாம் என்ற கவிஞரின் பெரும் புகழ் நமது தமிழ் நாட்டிலும் பரவி வருகிறது. இக் கவிஞரது பாரஸிகப் பாடலைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மொழி பெயர்த்தது நமது பாக்கியம் என்றே கூற வேண்டும். தமிழ் நாட்டில் அவர் பெயர் என்றும் மங்காது ஒளி விட்டுத் திகழும்படி செய்து விட்டார் நமது கவிமணி. ஆங்கில உலகில் பிட்ஜிரால்ட் என்ன மதிப்பைப் பெற்றுள்ளாரோ அம்மதிப்பு நம் கவிமணி அவர்களுக்கும் உரியது. இவர் மூலமாய் நமது நாட்டில் உமார்க் கய்யாம் ஓர் அற்புதமான மறு பிறவியை எடுத்துள்ளார்.

இரான் தேசத்துக் கவிஞர்களுள் உமார் ஒரு சிறந்த கவிஞர் என்று கூடச் சொல்ல முடியாது. தம் காலத்தே இவர் பீஜ கணிதத்தில் ஒரு சிறந்த மேதாவியாகவும், ஜோதிஷத்தில் ஒரு நிபுணராகவும் புகழ் பெற்றிருந்தார். இவர் அராபி மொழியில் இயற்றிய பீஜகணிதம் மிகப் பலவாய்ப் பிரதிகள் செய்யப்பட்டு பலராலும் கற்கப்பட்டு வந்தது. இவர் இயற்றியுள்ள முகமதியப் பஞ்சாங்கம் கணிதத்தில் இவருக்கிருந்த பெருந் திறமையைக் காட்ட வல்லதென்பர். இவரது ஆழ்ந்த கல்வி யறிவு எல்லாவற்றையும் தற்கால மக்கள் மறந்து விட்டார்கள். மறவாது போற்றுவது எவற்றை என்றால் வாழ்க்கையைக் குறித்தும், அது பயனின்றி வறிதாயுள்ள தன்மையைக் குறித்தும் இவர் சிந்தித்து எழுதியுள்ளவற்றைத் தான். இவை லட்சக்கணக்கான மக்களுடைய உள்ளத்திலே ஓர் அனுதாப உணர்ச்சியை உண்டு பண்ணி விட்டது.

இக் கவிஞரது உண்மைப் பெயர் இயாதுடீன் அபுல்பாத் உமார். கி. பி. 11-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிஷபூர் என்ற நகரத்தில் இவர் பிறந்தனர். இவர் தமது பெயரோடு கய்யாம் என்பதையும் தாமே சேர்த்துக் கொண்டார். கய்யாம் என்பதற்குக் கூடாரம் செய்பவன் என்று பொருள். இத் தொழில் இவரது தந்தைக்கு இருந்தது போலும். இவர் பள்ளிக் கூடத்தில் வாசித்துக் கொண்டிருக்கும் போது, இவரது பள்ளித் தோழர்களாய் இருவர் இருந்தனர். இவர்கள் தமக்குள் ஓர் ஒப்

பந்தம் செய்து கொண்டனர். தம்முள் யாரேனும் ஒருவர் உன்னத பதவியை அடைந்து செல்வர்களாய் விடுவார்களானல், அவர் மற்றை இருவருக்கும் உதவி செய்து, அவர்களைப் பதவியில் உயர்த்த வேண்டும் என்பதுதான் அந்த ஒப்பந்தம். வியக்கத் தக்க முறையில் இந்த ஒப்பந்தம் நிறைவேறியது. ஒருவர் ஒரு மாகாணத்தை ஆளும் பதவியைப் பெற்றனர். உடனே இவர் அரண்மனைச் சர்வாதிகாரப் பதவியைத் தம் தோழர்களுள் ஒருவருக்குக் கொடுத்தனர். உமாருக்கு அவரது கணிதப் பயிற்சி இடையீடின்றி நடைபெற வேண்டும் என்று கருதி, ஆண்டு தோறும் ஒரு பெருந்தொகை கொடுத்துக் கவலை யின்றி வாழச் செய்தனர்.

இவ்வாருகப் பணக்கவலையாதொன்றும் இல்லாதபடி உமார்க்கய்யாம் தம்முடைய நீண்ட ஆயுளை, கணிதம் முதலிய சாஸ்திரப் பயிற்சியில் செலவிட்டு வந்தனர். அன்றியும் மக்களுடைய இம்மை, மறுமை முதலிய பொருள்கள் பற்றி ஆழ்ந்து சிந்தித்து அற்புதமான செய்யுட்களையும் இயற்றினர். இச் செய்யுட்களுக்கு 'ருபாயத்' என்று பெயர். ருபாயத் என்ருல் நாலடிச் செய்யுள் என்று பொருள். தமிழிலுள்ள நாலடியார் என்ற நூலை இதனேடு ஒப்பிடலாம்.

இவர் சிந்தித்துக் கொண்ட முடிவு இன்ப உணர்ச்சியை விளைக்கத் தக்கதன்று. ஒரு துக்க உணர்ச்சி இவரது பாடல்களின் அடிப் படையில் அமைந்துள்ளது. இம்முறையில் வாழ்வு முடிந்ததன் பின் மறுமையைக் குறித்து யாதும் உறுதியாகக் கூற முடியாது என்ற கொள்கை தொனித்துக் கொண்டே யிருக்கிறது. இவ்வுலகத்தில் உண்பதும், குடிப்பதும், சுகித்து வாழ்வதும் தான் கைகண்ட பலன் என்று இவர் கருதினர்.

இத்துக்க உணர்ச்சி இவருடைய கவிதைகளை வாசிப்போர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் புகுந்து இடங் கொண்டு விட்டது. ஆனல், ஐரோப்பியர்கள் இத் துக்கவுணர்ச்சியில் ஈடுபடாது ஒன்றிலும் நம்பிக்கையற்றவன் இகழ்ந்து நகையாடுகின்ற சிரிப் பொலியையும், மது, மங்கையரின்பம், மதுரமான பாட்டின்பம் இவற்றை வற்புறுத்தும் உபதேச ஒலியையும் இவர் பாடல்களில் கண்டனர். என்ருலும், அங்கங்கே ஆத்மா துடிதுடித்து வருந்தும் துன்பநிலை இந்தப் பாரஸிகக் கவிஞரிடத்திலே காணப்படுதல் உண்மை.

வந்த வந்த மனிதரெல்லாம்
வளைவும் நெளிவும் கண்டென்னைச்
சந்த மில்லாப் பானையெனத்
தள்ளி வைத்துச் சென்றனரால்
அந்த நாள்அக் குயவன் கை
ஆட்டத் தாலே நேர்ந்த பிழைக்கு
இந்த நாளில் ஏழை எனை
ஏனே குறைகள் கூறுவரே.

வழியிற் குண்டு குழி வெட்டி
வலையுங் கட்டி மதுவுண்டு
விழவோர் விதியும் அந்நாளே
விதித்து வைத்தென் கேடெல்லாம்
அழியாப் பாவம் அதனலே
ஆன விளைவென் றறைவாயோ
தெளியா துலகில் என்றென்றும்
திகைத்து மறுகி நின்றேனே.

நன்மையும் தீமையும் ஒருங்கு வாழிடமாக நம்மைப் படைத்து விட்டு, நாம் செய்யும் தீமைகளுக்கு

நம்மை இறைவன் தண்டிப்பது நீதியாகுமா என்று கவிஞர் கேட்கிறார்.

யாது சொன்னாய்? இன்னமுதம்
  ஏந்தி உண்ட கலமதனை
மோதி உடைக்கும் அறிவில்லா
  மூடன் எங்கும் உண்டு கொலோ?
ஓதற் கரிய பேரருளால்
  உவந்து கண்ட உருவமதைத்
தீதென் றெண்ணிச் சினம் பெருகிச்
  சிதைக்கத் தெய்வம் துணிந்திடுமோ?

வாழ்வின் ரகஸியங்களை யெல்லாம் உமார் ஆழ்ந்து நெடுங்காலம் சிந்தித்துள்ளார். இன்பதுன்பங்களைக் குறித்து அவர் கூறுவதைக் கேளுங்கள்.

ஊனா ருடலம் இதுவீழின்
  உண்டாம் வாழ்வின் நிலையறிய
ஆனா ஆசை மிகவே என்
  ஆன்மா வினையான் வேண்டி நின்
  றேன்
நானா வுலகும் நெடுநாளா
  நாடியலைந்து வந்ததுதான்
'யானே சொர்க்கம் நரகமெலாம்'
  என்றே கூறி நின்றதுவே.

துன்பம் வருதல் ஒருதலை என்பதும் அதனைத் தடுத்தல் இயலாது என்பதும் பின் வரும் செய்யுள் காட்டுகிறது.

எழுதிச் செல்லும் விதியின்கை
  எழுதி எழுதி மேற் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
  சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
  வார்த்தை யேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீரா றெல்லாம்
  அதிலோர் எழுத்தை அழித்
  திடுமோ?

ஆனால் மரணத்தின் ரகஸியத்தையும் அதற்குப் பின், நிகழ்வதையும் குறித்து யாதும் தெரிய முடியாது என்கின்றனர்.

மண்ணை வலமாய்ச் சுற்றி வந்தேன்
  வானும் அளந்து கணக்கிட்டேன்
நண்ணும் வழியில் பல சிக்கல்
  நாடி நன்கு விளக்கி வந்தேன்
எண்ணும் மனிதர் தலையடையும்
  இறப்பும் ஊழும் இவையென்று
திண்ணமாகச் சொல்ல ஏதும்
  தெரியாதிங்கே திகைத்தேனே.

திட்டிக் கதவு தெரிந்ததடா
  திறவு கோலும் இல்லையடா
கட்டித் திரையும் கண்டதடா
  கண்ணும் மயங்கி நின்றதடா
ஒட்டிச் சிறிது நீ நானென்று
  உரைத்த உரையும் கேட்டதடா
நட்ட காலம் பின்னையடா
  நான் நீ யற்றுப் போச்சுதடா.

இவ்வாறு தெரியாததைத் தெரிந்தது போலப் பாசாங்கு பண்ணுவது உமாருக்கு வெறுப்பையே விளைத்தது. அறியாமையினாடே படாடோபமான வார்த்தைகளைப் பேசி நாம் நடிக்கிறோம். விஞ்ஞானம், தத்துவம் முதலியன எல்லாம் மறுமை பற்றிய அளவில் பயனற்றனவே.

அன்றென் இளமைப் பருவத்தில்
  அறிவிற் சிறந்த புலவரையும்
நன்று சீல முடைய பெரு
  ஞானிகளையும் அடி பணிந்து
நின்று கேட்ட வாதங்கள்
  நினைப்பின் அரிய ஆயிடினும்
சென்ற வாயில் வழியேதான்
  திரும்பி அந்தோ! வந்தேனே!

ஞானிகளாவது பிற பேரறிஞர்களாவது இதற்கு ஒரு முடிவு சொல்ல முடியுமா? முடியாது. அவர்களை இயற்கை இகழ்ந்து சிரிக்கிறது.

கொற்ற மன்னர் முடிசூடிக்
  கொலுவில் அமர்ந்த திருக்கோயில்
முற்றுங் கூகை ஆந்தையொடு
  முதுபேய் வாழும் காடாமே!

வெற்றி வில்லை ஏந்தி முனம்
  வேட்டை செய்த வேடன் கை
பற்றி நரிகள் இழுப்பதையும்
  பாரில் கண்ணால் பார்ப்போமே.

ஆனால், மனிதன் செய்யக் கூடியது ஒன்று உண்டு, மரணத்தறுவாயிலே மனத்திட்பத்தோடு, யாராலும் துணிய முடியாத அந்த மறுமையில் யாதுதான் உள்ளதென அறிய, அவன் தைரியத்தோடு செல்லக் கூடும். இவ்வாறு செல்வது அவனிடத்துள்ள தெய்வத் தன்மையை வெளிக் காட்டுகிறது.

வாழ்வைக் கடந்து மறுகரையில்
  வந்து சேர்ந்த ஒருவனைத்தன்
சூழ்விற் கண்ணால் எமன் நோக்கிச்
  சுருக்காய் வந்தோர் கிண்ணமது
ஏழை யுண்ணென் றேந்திடவே
  இன்ன மதுவென் றுணர்ந்துமவன்
கோழை யன்று குடிப்ப னெனக்
  கூறி நிமிர்ந்து நின்றனனே.*

ஆனால், இந்த மண்ணுலகத்திலே எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற உணர்ச்சி ஏன் நமக்கு உண்டாக வேண்டும்? மண்ணுலகத்திற்கு அப்பால் ஏன் அத்தனை ரகஸியம் சூழ்ந்து கொண்டிருக்க வேண்டும்? எல்லாம் வல்ல இறைவன், அவரது கருத்தை நமக்கு உணர்த்தி, நம்மையும் உடன்படச் செய்திருக்கக் கூடாதா? நாம் இந்த உலகத்தில் பிறக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டோமா? இதை விட்டு நீங்க வேண்டும் என்று சொன்னோமா? இல்லை. நம்மை எங்கிருந்தோ இவ்வுலகில் தள்ளி, இங்குமங்குமாக அலைத்து இழுத்துச் சிறிதும் இரக்கமின்றி நம்மை வெளியே ஏன் எறிந்துவிட வேண்டும்? இதை நினைத்த உடனே நமது உள்ளத்தில் துக்கம் பீறிட்டெழுகிறது.

என்னைக் கேளா தெங்கிருந்தோ
  இங்கே தூக்கி எறிந்திட்டான்
என்னைக் கேளா தின்றுமவன்
  எங்கே தூக்கி எறிவானோ?
என்ன செய்வேன்? இக் கொடுமை
  ஏழை உள்ளம் மறந்தொழிய
வன்னக் கிளியே ஒரு கிண்ணம்
  மதுவை ஊற்றித் தருவாயே.

எல்லாம் இங்கோர் சூதாட்டம்
  இரவும் பகலும் மாறாட்டம்
வல்லான் விதியே ஆடுமகன்
  வலியில் மனிதர் கருவிகளாம்
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்
  ஜோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லா தாக்கி ஒவ் வொன்றாய்த்
  திரும்ப அறையில் இட்டிடுவான்.

நாம் மக்கட் பிறப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலுங்கூட இறைவன் இதில் தலையிடாதபடி நம்மையே இந்த விவகாரத்தைத் தீர்த்துக் கொள்ளும்படி விட்டிருப்பானானால், நாம் திருப்திகரமான ஒரு முடிவைத் தேடியிருப்போமல்லவா என்று உமார் வினவுகிறார்.

அன்பே யானும் நீயும் இசைந்து
  அயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
  வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்
துன்பே தொடரும் இவ்வுலகைத்
  துண்டு துண்டாய் உடைத்துப் பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
  இடமாய்ச் செய்ய இயலாதோ.

இந் நிலையில் மனிதன் என்னதான் செய்யக் கூடும்? மதுபானம்

*** இச் செய்யுள் என்னால் பாடப்பெற்றது. மற்றச் செய்யுட்களெல்லாம் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பாடிய 'உமார்க்கய்யாம்' என்ற நூலிலுள்ளன.**

செய்து, அறிவை மயக்கி அதில் மூழ்கிக் கிடப்பதுதான் அவன் செய்யக் கூடியது. உறுதியாக ஒன்றுதான் உள்ளது. அது யாது என்றால் நிகழும் நிமிஷம்தான். வாழ்வு சிறிது காலம்தான்; முடிவு நெருங்கி வருகிறது. அந்தக் காலத்தை வீண் போக்காது இன்ப நுகர்ச்சியில் கழித்தல் வேண்டும். புகழ் வேண்டாம்; செல்வம் வேண்டாம்; அதிகாரம் வேண்டாம். இந்திரிய சுகங்களை இப்பொழுதே, சக்தி இருக்கும்வரை கைப்பற்ற வேண்டும் என்று உபதேசிக்கிறார் கவிஞர்.

ஒழிந்த பாழில் ஒரு கணமாம்
  உயிர் வாழ் உலகில் ஒரு கணமாம்
வழிந்து விண்ணின் மீன்க ளெல்லாம்
  மங்கி மங்கி மறைந்தனவே
அழிந்த பாழின் உதயங்கண்டு
  அறியச் செல்வோ ரெவருமே
எழுந்து நின்றார் கண்டிலையோ
  எழுவாய் எழுவாய் எழுவாயே.

வாராய் நண்பா வருத்த மெனும்
  வாடைக் காலப் போர்வையினை
நேரா வருமிவ் வசந்த மெனும்
  நெருப்பில் வீசி எறிவாயே
தேரா வாழ்வின் பறவையினும்
  செல்லுந் தூரம் சிறிதேயாம்
பாராய் பாராய் பறவையதோ
  பறக்கச் சிறகும் விரித்ததடா.

மண்டும் சமய வாதிகளின்
  வாயை மூடச் செய்வ தெது?
அண்டும் மனித வாழ்வினிலே
  அமர வாழ்வு தருவதெது?
கண்டு மறவாக் காட்சிகளோர்
  கணத்திற் காட்ட வல்லதெது?
உண்டு மகிழும் மதுவல்லால்
  உலகில் வேறோர் பொருளுண்டோ?

முடிவில் உனக்கு இறுதிக் காலம் வரும் பொழுது சூனியத்தைச் சந்திப்பதற்குச் செல்லலாம். இங்கே இருந்து தயங்கிக் கொண்டிருப்பவர்கள் மதுவில்லாத கிண்ணத்தைக் கவிழ்த்தி வைத்துக் கொள்ளட்டும். வாழ்வின் ரஸத்தை முழுதும் நுகர்ந்து அதைச் சக்கையாகச் செய்து விடட்டும்.

வாழ்வு பற்றிய இக் கொள்கை நம் மனதைக் கவர்கிறது. ஆனால், இது வெகு அபாயகரமாகவும் உள்ளது. உய்யும் நெறி காணாது தவிக்கின்ற ஒரு மனப்பான்மையிலிருந்து இக் கொள்கை பிறந்துள்ளது. இக் கொள்கையைப் பின்பற்றினால், உலக மக்கள் மிருகப் பிராயமாய் முடிந்து விடுவார்கள். நாகரிகமும் மக்களுடைய இன்பமும், தான் ஒத்துழைக்க வேண்டும் என்ற பொறுப்பை உணராதிருக்கும் ஒருவனது மனநிலையை அடிப் படையாகக் கொண்டு பிறப்பன வல்ல.

என்றாலும், உமார்க் கய்யாம் சில சில உண்மைகளின் அடி நிலத்

ஜோஸ்யம் பலித்தது!

டோங்சாப் என்பவன் ஒரு ஜேஸ்யன். அவனுடைய கடைக்கு ஒருநாள் மூன்று பேர் வந்தார்கள். வந்து துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி, அவனிடம் உள்ள கை கடிகாரம், தங்கமோதிரம், சுமார் முப்பது ரூபாய்—இவ்வளவையும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒரு போலிஸ்காரனிடம் கூறும் போது டோங்சாப் தெரிவித்ததாவது: 'மூன்று மணி நேரத்திற்கு முன்பு, தான் இந்த மூவரில் ஒருவன் என்னிடம் ஜோஸ்யம் கேட்க வந்தான். அவனிடம் 'அய்யா, உனக்கு வெகு சீக்கிரத்தில் பணம் கிடைக்கப் போகிறது' என்று சொன்னேன்.'

—பி. ஐ. மந்த்லி.

தைத் தொட்டு விடுகிருர். இவ்வுலகத்திலே நம்மை மயக்கி ஈடுபடும்படியாகச் செய்கின்ற அற்பப் பொருள்களுக்கு நாம் முயன்று வருவதைக் கண்டு உமார் நகையாடுகிருர். உலகத்துள்ள சமயங்கள் ஒவ்வொன்றிலும் இவ்வுண்மை வெளியிடப் பட்டுள்ளது. ஆனல், 'மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும் பொழுது இறைவனை நினைக்க மறந்து விடாதே' என்று இச் சம்பவங்கள் வற்புறுத்துகின்றன.

வாழ்க்கைத் தத்துவத்தைக் குறித்து,உமார்க்கய்யாம்கொண்டுள்ள கொள்கை எவ்வாருயினும், அவரது கலையுணர்ச்சி அதியற்புதமாக வுள்ள தென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். விஷயங்களைச் சுருக்கிக் கூறும்பொழுது உண்மையில் ஒளி பரவும்படி செய்யும் ஆற்றல், உண்மையைக் காணும் உள்ளுணர்ச்சி, பல்வேறு சிந்தனைகளை மனத்திலே குறிப்பாய்த் தோற்றுவிக்கும் பாவனு சக்தி, உலகப் பொதுமையாயுள்ள உணர்ச்சிகளும், கருத்துக்களும், தம் கருத்துக்களை எதிரேற்றுக் கொள்ளும் படியாகச் செய்யும் ஆற்றல்: இவைகளெல்லாம் உமாரின் கவித்வப் பெருமையை நன்ருக உணர்த்து கின்றன. கவி மணி தேசிக விநாயகம் பிள்ளையின் அழகிய கவிதையிலும் அப்பெருமை நன்ருகப் புலப்படுகிறது.

*

ஆபத்தில் உதவி

பெல்ஜியம் விமானம் ஒன்று பிரஸ்ஸல்ஸ் நகரிலிருந்து நியூயார்க் நகருக்குப் பறந்து சென்று கொண்டிருந்தது. நியூபவுண்ட்லண்டுக்கு நேராகப் பறந்து செல்லும்போது, அதை அனுவசியமாக இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த அசந்தர்ப்பம் நேராதவாறு தடுத்து உதவியவள் ஒரு பெண். எப்படி? விமானத்தில் உள்ள ஒரு சிவப்பு விளக்கு வெள்ளையாக மாறிக் கொண்டிருந்தது. வெள்ளையான விளக்குடன் பறக்கக்கூடாது. ஆகவே, விமானிக்கு, ரேடியோ மூலம் இதே விஷயத்தைத் தெரிவித்து ஒரு எச்சரிக்கை வந்தது. விமானத்தை இறக்கி விளக்கை சிவப்பாக்கிக் கொண்டு மறுபடியும் விமானத்தை ஓட்ட வேண்டும் என்று எச்சரிக்கை. ஆனல் விமானத்தில் சென்ற பெண் தன் உதட்டுச் சாயத்தினல் விளக்குக்குச் சிவப்பு வர்ணம் பூசிவிட்டாள். ஆகவே விமானத்தை இறக்காமலே ஓட்டிச் செல்ல முடிந்தது. —டை வெல்ட் வோச்

அபூர்வச் சட்டங்கள்!

அமெரிக்காவில்.........

வெர்மாண்ட் மாகாணத்தில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையு ம்குளிக்க வேண்டும் என்பது சட்டம்; நெப்ராஸ்காப் பகுதியில் நாவிதர்கள் வெள்ளைப் பூண்டு சாப்பிடக்கூடாது என்று சட்டம் இயற்றப் பட்டுள்ளது; இல்லினுஸ் மாகனத்தில் ஒரு நாளைக்கு ஒருவர் நூறு ரொட்டிகளுக்குமேல் சாப்பிடக்கூடாது; டகோட்டா பிராந்தியத்தில் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் சாப்பிட்டாக வேண்டும்.

—லா இல்லஸ்ட்ரே.

டீ வருமானத்தைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட நகரங்கள்.

டீ-வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு-சர்க்கார் கஜானவுக்கு வருஷமொன்றுக்கு ரூ. 13 கோடி யளிக்கிறது. உங்கள் டீ அளிக்கும் வருமானத்தைக்கொண்டு அநேக நிர்மாண திட்டங்களுக்கு பண உதவி செய்யலாம். உதாரணமாக தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தை 10 வருஷங்களில் பூர்த்தி செய்ய ரூ. 55 கோடி செலவாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதே பத்து வருஷங்களில் டீயிலிருந்து மட்டும் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் அத்திட்டத்திற்கான செலவைப் போல இரண்டத்தனைக்கு மேலாகும். ஆகவே டீ உங்களகத்தில் சுகமும் சந்தோஷமுமளிக்கும் பானம் மட்டுமல்ல, நாட்டின் ஐசுவரியத்தை விருத்திசெய்யும் ஓர் சாதனமுமாகும்.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்.

- 1945-47ம் வருஷங்களில் மொத்த டீ ஏற்றுமதி ரூ. 120 கோடி பெறுமானமுள்ள அயல்நாட்டு நாணயச் செலாவணி யளித்திருக்கிறது.
- இத்தொழிலில் 10லக்ஷம் ஆண்களும்பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.
- உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணு வரியும் ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணு வரியும் சர்க்காருக்கு கிடைக்கிறது. நாட்டு கஜானுவுக்கு வருஷ மொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்திய கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.



லிப்டன்ஸ்

என்றல்

முதல்தரமான டீ

LTX-152 TM.

ஆன்ம பக்குவத்தில் அத்வைதம் அடைய வேண்டும் என்கிறார்கள் தத்துவார்த்திகள். ஆனால், அந்த ஜீவான்மா ஸ்தூலக் கூட்டிலும் அத்வைதம் பெற்றுவிட்டது. அதற்கு ஆண்டவன் எப் பரிசளிக்கக் கூடும்? படித்துப்பாருங்கள்.

தவப் பயன்

○

கு. அழகிரிசாமி

சுவாமி நிர்மலானந்தரை ஒருநாள் மாலை திடீரென்று ஆஸ்ரமத்தில் காணவில்லை. சாயங்காலம் ஐந்து மணிக்கெல்லாம் அவர் தனியே எழுந்துஉலாவப்போவது வழக்கம். அப்போது சீடர்கள் எவரையும் அழைத்துக்கொள்ளாமல், தியானத்தில் ஆழ்ந்த வண்ணம் தன்னந்தனியாகவே நடந்து செல்லுவார். அநேகமாக பொழுது இருட்டுவதற்குள் சுவாமிகள் ஆஸ்ரமத்திற்குத் திரும்பிவிடுவார். திரும்பும்போது மட்டிலும் சிஷ்யர்கள் சிறிது தூரம் சென்று அவரை எதிர்கொண்டு அழைத்து வருவார்கள்.

அன்று நிர்மலானந்தர் சூரியாஸ்தமனம் ஆகி இரண்டு நாழிகைப் பொழுது கழிந்தும் வராததைக்கண்டு சிஷ்யர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெறும் உயர்ந்த நோக்கத்துடன் சிலரும், திருநீறும் ஆசீர்வாதமும் பெறும் சாதாரண நோக்கத்துடன் சிலருமாக ஒரு சிறு கூட்டம் வழக்கம் போல வந்து ஆஸ்ரமத்தில் அமர்ந்திருந்தது; காத்திருந்தது.

சுவாமிகளை இன்னும் காணவில்லை.

சிஷ்யர்களைவிட பக்தகோடிகள் மிகவும் அதிகக் கவலையில் ஆழ்ந்தனர்.

சிஷ்யர்களுக்கு ஓரளவு துணிச்சல் இருப்பதற்குச் சில காரணங்கள் உண்டு.

சில சமயங்களில் நிர்மலானந்தர் உலாவப் போகும் நோக்கத்துடன் ஆஸ்ரமத்தை விட்டுப் புறப்படுவார். ஆனால், ஆஸ்ரமத்தின் வேலியைத் தாண்டியதும் வெட்ட வெளியில் அப்படியே உட்கார்ந்துவிடுவார்; உடனே பகவத் தியானம் தான். அன்று அவ்வளவோடு உலாவும் காரியம் முடிந்துவிடும். தியானம் கலைந்ததும் நேரத்தைப் பார்த்துக்கொண்டு ஆஸ்ரமத்துக்குத் திரும்பிவிடுவார். இதற்கு விதி விலக்காக தியானம் கலையும் போது நள்ளிரவு ஆகிவிட்டிருந்தாலும், மேற்கொண்டும் சாயங்காலத்தைப்போலவே பாவித்து, அந்தக்காடாந்தகாரமானநிசியிலும் உலாவப் போய்வருவது உண்டு.

அன்று அவர் திருவுள்ளம் எப்படி இருந்ததோ? அவரைக் கருவி

யாகக்கொண்டு ஆட்டுவிப்பவனின் திருவுள்ளப் பாங்கு எதுவோ? அவர் அன்று எங்கே, எந்த நிலையில், எதற்காகத் தாமதித்தாரோ?

சமீபத்தில் எங்காவது இருப்பார் என்ற நம்பிக்கையும் நேரம் செல்லச் செல்ல சிஷ்யர்களுக்குக் குறைந்துவிட்டது.

பக்தர்களின் மனவியாகூலமோ சிஷ்யர்களை அமைதியுடன் அமர்ந்து காத்திருக்கும்படி விடவில்லை.

மூவர்—சிஷ்யர்கள் — புறப்பட்டார்கள். பக்தகோடிகளில் வயதான கிழவர் ஒருவரும் கூடப் புறப்பட்டார்.

நல்ல நிலா அடித்தது.

பொட்டல் வெளியில் சுவடுகள் பதியாவிட்டாலும், நிர்மலானந்தர் எந்த வழியில் சென்றிருப்பார் என்பதைக் கண்டு பிடிப்பது சிரமம் அல்ல. ஏனென்றால் ஆஸ்ரமத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் ஒற்றையடிப்பாதைதான் பரந்த வெளியை நோக்கிச் செல்லும் பாதை. வடக்குப் பாதை ஊரை நோக்கிச் செல்லுகிறது. வேறு பாதைகள் கிடையாது.

நான்கு பேரும் நடந்தனர். சமீபத்தில் எங்காவது நிர்மலானந்தர் அமர்ந்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தினால், கால் நடையில் பயபக்தி தயக்கம் கொடுத்தது. சுற்றிலும் இரையும் சிள்வண்டுகளின் ஓசையை நூலளவும் பாதிக்காதவாறு மௌனமாக, காலடி ஓசை கேட்காமல்,பாதங்கள் அடி எடுத்து வைத்தன.

இப்படி ஒருமைல் நடந்தார்கள்.

ஒரு மைலுக்கு மேலும் நடந்தாய்விட்டது.

பாதையின் வலது புறத்தில் சப்பாத்திக்கள்ளிப் புதரின் நடுவில் சிறிது மேடான ஒரு கரும்பாறை உண்டு. அது நிலவில், குழியில் விழுந்த யானையின் முதுகுபோலத் தோற்ற மளித்தது. அதன்மேல் கரும்பரப்பை வகிர்ந்துகொண்டு செந்நிறத் தூலமாக ஏதோ கிடந்தது.

பரபரப்புடன் மனம் கலங்கி நால்வரும் அந்தப் பாறையை நோக்கி ஓடினார்கள். அவர்களில் ஏழை மனம் படைத்த ஒரு சிஷ்யனின் கண்களில் கண்ணீர் திரண்டது. உடன் சென்ற கிழவரின் இரைகின்ற சுவாசம் அந்த இடத்தில் மட்டுப்பட்டு மௌனம் பூண்டது. நால்வரும் போய்ப் பார்த்தார்கள்.

காஷாயதாரியாக கருங்கல் சயனத்தில் கிடந்த நிர்மலானந்தர் 'பூரணம்' பெற்று விடவில்லை. அன்றையத் தியானம் சயன அவசத்தில் நடைபெற்றது. அவ்வளவேதான். எதிர்பார்த்தபடி, சிஷ்யர்கள் பயப்படும்படியாக, எதுவும் நடந்துவிடவில்லை. ஆனால்...

தன்னை மறந்து படுத்திருக்கும் நிர்மலானந்தரின் வாயிலும், வாயருகில் பாறையிலும், காய்ந்து சருகாகிப்போன பெயர் தெரியாத இலைகள் ஏதோ கிடந்தன. சப்பாத்திக் கள்ளியின் காய்கள் சில பக்கத்தில் இருந்தன. சுவாமிகளின் ஒரு கால் பாறையிலும், மற்றொரு கால் சப்பாத்தி புதரிலும் கிடந்தது. இடையில் சுற்றியிருந்த காஷாயத் துணியின் செம்பாதி காற்றில் பறந்துபோய் சப்பாத்தியின் மேல், ஒட்டிக் கொண்டிருந்தது.

நால்வருக்கும் நிஷ்டையைக் கலைக்கப் பயம். ஆனால் சுவாமிகளின் பரிதாப நிலையைக் கண்டு சொல்லொணாத மனவேதனை.

அந்தப் பாறையின் சரிவான ஒரு பகுதியில், சுவாமிகளின் ஸ்தானத்துக்குச் சற்று இறக்கமாக, மரியாதையுடன் உட்கார்ந்து ஈஸ்வரத் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்கள். உண்மையில் அது தியானம் அன்று; மௌனமான பிரார்த்தனையே.

எவ்வளவு நேரம் சென்றதோ?

சற்றே அபூரணம் பெற்ற அன்றைய நிலா, உச்சி வானத்தின் மைய விளிம்பைத் தொட்டது போல மேலேறி வந்துவிட்டது.

சுவாமிகளின் சரீரம் சிறிது அசைந்தது. அசைந்ததெல்லாம் இவ்வளவே: பாறையில் கிடந்த மற்றொரு காலையும் எடுத்து சப்பாத்தியின்மேல் போட்டார். தாங்கமுடியாத சுமை கீழே விழுந்தது போல, கால் 'தொப்'பென்று சப்பாத்தியில் விழுந்தது. எத்தனை முட்கள் அந்த மிருதுவான கால்களில் குத்தினவோ என்று கவலைப்படத் தொடங்குமுன்பே, நல்ல பாம்பு ஒன்று சப்பாத்திப் புதரிலிருந்து திடீரென்று சீறி எழுந்து, தன் படத்தை அகலவிரித்து, தலையைச் சாய்த்த வண்ணம் மிகவும் பலமாக சுவாமிகளின் இடது பாதத்தில் மோதிக் கடித்துவிட்டது. பாம்பு கடியினால் சுவாமிகளின் மேனியில் சிறிதாவது சலனம் ஏற்படட்டுமே!

சிஷ்யர்களின் ரத்தம் உறைந்துவிட்டது. அடுத்தவனைப் பாம்பு படம் விரித்துக் கடிப்பதை மனித வர்க்கமே கண்ணாரக் காண்பது, அதுதான் முதல் தடவையோ என்று கருதக்கூடியவாறு அவ்வளவு பிரத்யக்ஷ நிலையில் நடந்தேறிய இந்த அபாயத்தைக் கண்டு எழுந்து ஓடிய அந் நால்வரும் சப்பாத்தியிலேயே மிதித்தார்கள். ஒவ்வொரு முள்ளும் ஒரு விஷப்பல்லாகக் [illegible]த்தியது. ஆனால் பாம்பு இவர்[illegible] நோக்கி வரவில்லை. வேறு [illegible]சையில் நெளிந்துவிட்டது. பாறையின் மேல் மின்னி நெளிந்த அதன் சரீரம், பாறையில் ஏதோ விஷ ஊற்றுக் கிளம்பி வடிந்ததுபோல் இருந்தது.

இனி சுவாமிகளை எழுப்பாமல் இருந்தால் மரியாதைக்கு அர்த்தம் கிடையாது. பூவைப்போலத் தொடுவதுபோய், தரையில் புதைந்த ஆணிவேரைப் பிடுங்குவதுபோல அவ்வளவு முரட்டுத்தனமாக சுவாமிகளைத் தூக்கி உட்கார வைத்தனர்.

நிர்மலானந்தர் எழுந்து அமர்ந்தார். அவருடைய விழிகள் மலர்ந்தன. வாயிலிருந்த சருகுகளைத் துப்பினார். துப்பும்போது, பாதி மென்ற கள்ளிப் பழம் ஒன்று முறிந்த முள்ளுடன் பாறையில் விழுந்தது.

"இதுவா ஆகாரம்?" என்று பிரமித்தார் உடன் சென்ற கிழவர்.

நிர்மலானந்தரின் ஆகாரம் எதுவென்று அவருக்கு இவ்வளவு காலத்துக்குப் பின் அன்றுதான் தெரியவந்தது. காரணம் கிழவர் ஊருக்குப் புதிது.

"தங்களை விஷம் தீண்டிவிட்டது" என்று சொன்னான் ஒரு

சிஷ்யன், வாயை ஒரு கையால் மூடிக்கொண்டே.

மற்ற இருவரும், இரண்டு கால்களிலும் உள்ள சப்பாத்தி முட்களைத் தடவித் தடவிப் பிடுங்கினார்கள். அவர்களுடையகைகளில், முள் தைத்த புண்களில் கசிந்த ரத்தம் படிந்து படிந்து, மருதாணி யிட்டதுபோல மாறிவிட்டது.

"முட்களா? அவற்றை ஏன் பிடுங்க வேண்டும்?" என்று சாவதானமாகச் சொல்லிவிட்டு "எப்போது பாம்பு கடித்தது?" என்று கேட்டார் சுவாமிகள்.

கிழவர் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து விட்டார்.

நடந்த விருத்தாந்தத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்கு முன்பே, நிர்மலானந்தர் "பாரம் தாங்கமுடியவில்லை; படுக்கவேண்டும்" என்று பாறையில் சாய்ந்தார்.

பாம்பு கடித்ததின் விளைவாக நிர்மலானந்தர் மயக்கம் எய்தி, பிதற்றுகிறார் என்றே நால்வரும் நினைத்தனர். விஷம் தலைக்கேறிக் கொண்டிருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும், பாரம்விஷத்தினால்வந்ததல்ல. மாமிசபிண்டத்தைத் தூக்கிச் சுமப்பது நிர்மலானந்தர் நெடுநாளாக அனுபவித்து வரும் வேதனை; அன்று சுமக்கவே முடியாமல் போனதனால்தான் பாறையில் போய்ப் படுத்து விட்டார்.

பின்னும் காலதாமதம் கூடாது என்று, நிர்மலானந்தரை மூவரும் எடுத்துச் சுமந்து ஆஸ்ரமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். தாம் நடக்கவே சிரமப்படும் கிழவர் பரிவோடு ஒருகையினால், நிர்மலானந்தரின் சரீரத்தைச் சுமக்க முடியா விட்டாலும், தொட்டுக் கொண்டு தள்ளாடி நடந்து வந்தார்,

பாதி வழி தாண்டுமுன்பே, சுவாமிகளின் உதடுகள் ஒரு பக்கம் கோணித்திறந்தன, வாயில் கொப்பளித்த நுரை சிலந்திப் பூச்சியின் நூல்களைப்போலக் காற்றில் ஆடி அறுந்தன. நிர்மலானந்தரின் மண்ணுலகத் தொடர்பு நுரை நூலைக் காட்டிலும் இலகுவாக, அவ்வளவு அரவம் அற்று அறுபட்டது.

நிர்மலானந்தர் தம் வாழ்நாளெல்லாம் சுமந்த பாரத்தை தம் சிஷ்யர்களின் தோளிலும் தலையிலும் இறக்கிவைத்துவிட்டுப் போய்விட்டார்.

உபதேசத்துக்காகவும், ஆசீர்வாதத்துக்காகவும் வந்த ஜனங்களின் முன் நிர்மலானந்தரின் சரீரத்தைக் கொண்டு வந்து சேர்த்தார்கள் சிஷயர்களும் கிழவரும்.

மறுநாள் ஆஸ்ரமம் கல்லறையாக மாறியது.

* * *

மண்பாண்ட ஓடு உடைந்து விட்டது. மாயனார் குயவன் அந்த ஓட்டைச்சமைத்து அதன் உள்ளே வைத்து அனுப்பிய ஆன்ம அமிர்தம் திவலைகூட மண்ணுலகக் குழப்பத்தில் சிந்தாமல் சிதறாமல், கொடுத்தாலும் குறைவு படாத நித்ய பூரண வஸ்துவாய், குயவனிடமே திரும்பியது. அமிர்தம், ஆக வேண்டிய காலம் ஆகி, நன்கு பண்பட்டு, சுவையோடும் திண்மையோடும் சுவர்க்கம் புகுந்தது.

நிர்மலானந்தர் மறைந்தார்; நிர்மலானந்தம் எஞ்சியது.

எண்ணற்ற முனிவர்களின், புண்ணிய புருஷர்களின், ஆன்ம சொரூபங்கள் இன்பத்தின் பர வெளியில், அமரபோகம் துய்த்துக் கொண்டிருக்கும் அந்த தெய்வ மண்டலத்தில் நிர்மலானந்தருக்கு மரியாதை மிகுந்த பீடம் கிடைத்தது. என்றுமாய் எதுவுமாய், காலமும் தூரமும் அற்றிருக்கும் இந்த சுவர்க்க போகம் அல்ல நிர்மலானந்தருடைய நித்ய தபசின் கோரிக்கை. மண்ணுலகத்தைத் துறந்த இதயம், விண்ணுலகத்தில் அதைப் பெற்று அனுபவிக்க விரும்பவில்லை.

இன்னும் 'நான்' நசியவில்லை; 'அவன்' இன்னும் அவனாகத்தான் இருக்கிறான். 'அவன்', 'நான்' ஆகவில்லை; 'நான்', 'அவன்' ஆகவில்லை. கேவலம் தூல சரீரத்தைக் களைந்துவிட்டால் ஈஸ்வர ஐக்கியம் கிட்டிவிடுமா?

இன்னும் எத்தனை வருஷங்கள், எத்தனை வியாழ வட்டங்கள் தபசிருக்க வேண்டுமோ, அந்த அத்வைத நிலையைப் பெறுவதற்கு? நல்ல வேளையாக இங்கு காலம் என்ற பிரக்ஞை இல்லை. ஆனாலும் சுவர்க்கத்தின் போக நிலத்தில், புழுவெனத் துடித்து உபசாந்தப் பரவெளியை நோக்கித் துள்ளித் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது நிர்மலானந்தரின் ஜீவான்மா.

பரமான்மா வந்தது; பூலோகப் பஞ்சாங்கப்படி, நிர்மலானந்தரின் ஆன்மா சுவர்க்கத்துக்குப் போன பதினைந்தாம் நாளில் கடவுள் அந்தப் புதிய விருந்தைக் காண வந்தது. மோனப் பிரார்த்தனை அன்றே கடவுளுக்கு எட்டியது என்றாலும், சுவர்க்கானுபவச் சதுரங்கத்தில் நிர்மலானந்தரின் ஆத்ம விளையாட்டு வெற்றி பெறுகிறதா, தோற்கிறதா என்று பரிசோதனை செய்யத் தொடங்கியதுதான் இந்தப் பதினைந்துநாள் தாமதத்துக்குக் காரணம்.

பதினைந்து நாட்களுக்குப் பின் நிர்மலானந்தரின் முன் பிரசன்னமானார் கடவுள். வாழ்நாளெல்லாம் தபசில் கழித்த தம் பக்த சிரோன்மணிக்கு இந்தப் பதினைந்து நாளைய அனுபவம் எவ்வளவு பெரிய சுகத்தை அள்ளிக் கொடுத்திருக்கும் என்று எண்ணி ஆனந்த பரவசத்துடன் பக்தனைக் காண வந்தார். மறுதினம்தான் நிர்மலானந்தரின் கடைசித் தளையை, எஞ்சியிருக்கும் 'நான்' என்ற பிரக்ஞையை, சுட்டறுப்பது என்பது தெய்வத் திருவுள்ளம்.

தெய்வ விஜயம், பிரக்ஞையைப் போன்ற ஒரு சங்கேதத்தின் மூலம் நிர்மலானந்தருக்குத் தெரிந்தது. இறைவனின் பாதத்தில் மலர்ப்பலி இடுவதைப் போல தம் ஆத்மாவைப் பரிபூர்ணமாகச் சமர்ப்பித்தார் நிர்மலானந்தர்.

"சுவர்க்கம் பிடிக்கவில்லை போலும்! உம் கோரிக்கையை அறிந்தோம். உம் ஆத்மத் தேட்டம் விரைவில் சித்தி பெறும்" என்றார் கடவுள்.

கடவுளின் வார்த்தைகளை எல்லாம் கிரஹித்துக் கொண்டாலும், சுவர்க்கம் என்ற பதம் நிர்மலானந்தரைப் பிரமிக்கச் செய்துவிட்டது.

'சுவர்க்கம்!......சுவர்க்கம் என்றால்....அப்படியானால் தற்போதைய வாசஸ்தலம் சுவர்க்கம்

தானு?' என்ற திகைப்பு நிர்மலா னந்தரை ஊமையாக்கிவிட்டது. எழுதாக் கிழவிக்கு நாயகனுக இலங்குபவனுக்கு பேசாத சிந்தை, தாய் மொழியைப் போலப் பரிச்சயப்பட்ட வஸ்து. நிர்மலானந்தரின் திகைப்பு அவருக்குப் புரிந்தது.

"சுவர்க்கம் இல்லாமல் வேறு என்ன? நரகம் என்று நினைத்தீரா?"

கடவுள் சிரித்தார்!

"எதுவும் நினைக்கவில்லை. சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் பேதம் காணும் அந்த சரீர பரிசோதகன் என்றோ சாம்பலாகிவிட்டான் என்பது தாங்கள் அறியாதது அல்லவே. மண்ணுலகிலும் கூட மலருக்கும் முள்ளுக்கும், மலருக்கும் விஷப் பல்லுக்கும் வேற்றுமை கண்டறியாதிருந்த ஜீவன் இப்போது ஐம்பொறிக் கூட்டை உதறிவிட்ட பிறகு, சுவர்க்கத்தை எங்ஙனம் உணரும்? நரகத்தை உணர்வதும் எங்ஙனம்?"

* * *

மாயனுர் எத்தனையோ லட்சோப லட்சம் மண் பாண்டங்களை வனைந்து கொண்டிருக்கிறூர். அவற்றில் எத்தனை பங்கப்படாமல், விதித்திருக்கும் காலவரையறை வந்து சந்திக்கும் வரையிலும் பயன்பட்டு, விளைபயன்களை விண்ணுக்கு அனுப்புமோ? எத்தனை மண் பாண்டங்கள் கூத்தாடிக் கூத்தாடி தம்மையே உடைத்துப் பாழாக்கிக் கொள்ளுமோ? மண் பாண்டங்கள், பற்பல உருவில், பற்பல வர்ணங்களில் தயாராகிக் குவிந்திருக்கின்றன.

மாயனுர் ஒரு சிறு பாண்டத்தை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறூர். அது பூவுலகில் ராஜ குமாரனுக வந்து பிறக்குமோ, ஒரு முனிவனுக அவதரிக்குமோ தெரியவில்லை. ஆனுல் பாண்டம் உருப்பெருமல் குலைந்து சரிந்து கொண்டிருந்தது. வேறு பல கலவைகளைச் சேர்த்துக் குழைத்துப் பாண்டத்தை உருவாக்க முயன்றூர் மாயனுர். பழையபடியும் அது கருவிலேயே சிதைவுற்றது. மற்றும் பல கலவைகளைக் கலந்து திரும்பவும்......

கடவுள் நையாண்டிச் சிரிப்புச் சிரித்தார்.

"மாயக் குயவரே! பாண்டத்தின் உருவ அமைப்பைச் சிதையாமல் நிறுத்திவைக்கும் பிரதானமான கலவை என் அடைக்கலத்தில் உள்ளது. நெருப்பின்றி விளக்கேற்ற முடியுமா?"

கைசோர்ந்துபோய் வணக்கத்துடன் திரும்பிப் பார்த்தார் மாயக் குயவர்.

"ஜீவான்மா ஒன்று மண்ணுலகிலிருந்து விடுதலை பெற்று துறக்கம் பெற்றது. பிரம்ம ஐக்கியம், இரண்டறக் கலக்கும் அத்வைத நிலை—இதுதான் அதன் இன்றையக் கோரிக்கை. அந்த ஆன்மாவும், அதன் கோரிக்கையும் அந்தரத்தில் நிற்கும்போது பாண்டத்தை உருவாக்குவது எப்படி?"

மௌனமாக இருந்தார் மாயக் குயவனுர்.

"மண்ணுலகில் அது மலருக்கும் முள்ளுக்கும் பேதம் காணவில்லை; புலன்களைச் சுட்டறுக்கும் தபசை மேற்கொண்டுவிட்டது.

சுவர்க்கம் எய்தியது.

சுவர்க்கத்தின் தன்மை அந்த ஜீவனைத் தீண்டக்கூட இல்லை. சுவர்க்கத்தில் இருக்கிற பிரக்ஞை யாவது இருக்கட்டுமே! இன்று அதை நரகத்துக்கு அனுப்பினாலும் இன்றைய நிலையை இழக்காத பக்குவத்துடன் அது இருக்கிறது.

அது வேண்டுவது பிரம்ம ஐக்கியம்; பராமாத்ம—ஜீவாத்ம சங்கமம். அது கிட்டினால் அந்த ஆத்மா மாறுதல் பெற்றுவிடுமா? இன்ப துன்பத்தை உணராத பேரின்ப உபாசகனாக இருந்த அந்த ஆத்மா எம்மோடு அத்வைத நிலையில் இருந்தால் என்ன, ஆஸ்ரமத்தில் சந்நியாசியாக இருந்தால் என்ன? இரண்டும் ஒன்றுதான்.

இன்ப துன்பத்தை உணராத தபசென்றாலும்கூட இந்தத் தபசு பயங்கரத் தபசு. சுவர்க்க, நரக பேதங்களையும், அத்வைத வெளியையும் ஆஸ்ரம வெளியையும் ஒன்றாக்கும்படியான இந்தப் பயங்கரத் தபசு சுவர்க்கத்திலும் சுகம் காணவில்லை; பரப் பிரம்மத்திலும் சுகம் காணப்போவதில்லை. மரத்துப்போனது, செத்தது, எங்கே கிடந்தால் என்ன? முக்தியும், முதல்வனும் சாலையோரச் சத்திரங்களாகிவிட்டன; லட்சிய ஸ்தானங்களாக இல்லை. அந்த ஆத்மாவுக்கு இனி எந்த வழியைக் காண்பிப்பது?

தபசிற்குப் பலனாக, சுகமான வாழ்க்கையை, உணர்ந்து துய்க்கும் ஒரு பிறப்பை, பழையபடியும் அதே பூலோக வாழ்க்கையை, அதற்குச் சுட்டிக் காட்டுவதை விடச் சிறந்த பிரதி உபகாரம் வேறு எதுவும் இல்லை. அதற்குச் செய்யும் பேருதவியும், பரிகாரமும், பிராயச்சித்தமும் அதுவே.''

நிர்மலானந்த சுவாமிகள் காலமான பதினாறும் நாளில், ஆஸ்ரமத் தோட்டத்தின் நடுவில் சிவலிங்கம் வைத்துக் கட்டப்பட்டு இன்னும் ஈரம் உலராது இருக்கும் அவருடைய சிமிண்ட் சமாதியின் தென் புறத்தில், அன்றுதான் பிறந்த ஒரு அணில் குஞ்சு, மண்ணுலகை முதல் முதலாக ஸ்பரிசித்துக் கொண்டிருந்தது. அதன்மேல் படும் காலை இளவெய்யில் அதற்குச் சுவர்க்க போகமாக இருந்தது. தன்னை மறந்து, அந்த இன்பத்தில் ஆழ்ந்து, அதில் இரண்டறக் கலக்கவும் செய்தது அந்த அணில் குஞ்சு.

சிக்கனம் வேண்டும்

நீங்கள் (தாராளமாகப்) புசியுங்கள்; பருகுங்கள். எனினும் (அவற்றில்) அளவுகடந்து வீண் செலவு செய்யாதீர்கள். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் அளவுகடந்து (வீண்) செலவு செய்வோரை நேசிப்பதில்லை.

—குர்ஆன்

இரண்டு தவறுகள்

தன் மனைவி விபசாரம் பண்ணுகிறாள் என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒருவன் வேறொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால், அவன் தான் தவறு செய்வதுடன், அவள் விபசாரம் பண்ணவும் காரணமாக இருக்கிறான்.

—ஏசுநாதர்

ஓ. ஹென்றி (1862—1910) ஒரு அமெரிக்கக் கதாசிரியர். ஓ. ஹென்றி என்ற பெயர் அவருடைய புனை பெயர்தான்; அவருடைய இயற்கைப் பெயர் வில்லியம் ஸிட்னி போர்ட்டர் என்பது. இவர் கதை சொல்வதில் சமர்த்தர்; ஆழம் நிறைந்த கருத்தை எதிர்பார்க்க முடியாவிட்டாலும் அதிசய மான முத்தாய்ப்பு வைப்பதில் வல்லவர். இவரது கதைத் தொகுதிகள் மட்டுமே பதினைந்து வெளிவந்திருக்கின்றன. வியாபார உலகம் ஒரு யந்திரம்; அதில் மனிதனின் நினைவு கனவுகளுக்கு இடமில்லை. உணர்ச்சியற்ற உலகத்தைப் பற்றிக் கதை கூறும் முடிவைப் படித்துப் பாருங்கள்! அது வேறு உலகம்தான்!

வியாபாரியின் காதல்

○

ஓ. ஹென்றி

ஹார்வி மாக்ஸ்வெல்லின் காரியா லயத்தில், மிஸ்டர் பிச்செர் அந்தரங்ககாரியதரிசி. அன்றுகாலை யில் வழக்கத்துக்கு விரோதமாக, முதலாளி மாக்ஸ்வெல் ஒன்பதரை மணிக்கே தமது சுருக்கெழுத்தாளி யுவதியுடன் உள்ளே நுழைவதைக் கண்டார். இந்த விஷயம் அவ ருக்கு ஆச்சரியத்தை விளைவித்தா லும், முகத்தில் வழக்கம் போல் பிரதிபாவமற்ற தன்மைதான் இருந்தது. 'வணக்கம் பிச்செர்!" என்று யந்திரம்போல் சொல்லி விட்டு, தமது இடத்துக்குச் சென் றார் மாக்ஸ்வெல். மறுகணம் மேஜை மீது அன்று வந்து குவிந்து கிடந்த தந்திகளிலும் தபால்களி லும் முங்கி மூழ்கிவிட்டார்.

அந்த யுவதி மாக்ஸ்வெல்லிடம் கடந்த ஓராண்டுகாலமாய் சுருக் கெழுத்தாளி வேலை பார்த்து வந் தாள்; அழகானவள்தான்; அந்தப் புகழ்ச்சி சுருக் கெழுத்தைப்போல் குறுகியதில்லை. அவள் சகல ஆடம் பராதிகளையும் கடந்தவள்; சங்கி லியோ, வளையலோ, டாலரோ அணி வதில்லை. விருந்துக்கு அழைத்தால் கூட இன்முகங் காட்டி ஏற்பாளா என்பது சந்தேகம். அவள் சாம் பல் நிறத்தில் சாதாரண உடை அணிவாள். எனினும் அந்த உடை அவள் உடம்பைப் பிடித்து விட் டாற்போல் கச்சிதமாகவும் இருக் கும். அவளது கறுத்த குல்லாயில் மரங்கொத்திப் பறவையின் தங்க வர்ணத்தூவி ஒன்றும் இருக்கும். அன்று காலை அவள் முகத்தில் அமைதியும் நாணமும் கலந்த ஒரு பிரகாசம் ஒளிவிட்டுக் கொண்டிருந் தது. அவளது கண்கள் கனவு நிலைக் கதிரொளி பரப்பியது

½ கப் கோதுமைமாவு, 1 கப் மைதாமாவு, ருசிக்குத் தகுந்தபடி உப்பு இவைகளை கலக்கவும். 3 தேக்கரண்டி டால்டாவை மாவுக்கலவையில் தேய்த்து, பூரிக்கு தயாரிப்பதுபோல் பிசைந்த மா செய்து சிறிய பந்துகளாக உருட்டிக்கொள்ளவும். பந்துகளை 3 அங்குலம் குறுக்களவுள்ள வட்டவடிவமாக பரத்தி இருபாதியாக துண்டிக்கவும். ஒவ்வொரு பாதியையும், விளிம்புகளை தண்ணீரால் நனைத்து ஒன்றோடொன்று பொருத்தி திருகோணமாகச் செய்துகொள்ளவும். மசாலா சேர்த்து பொடி செய்த உருளைக்கிழங்கும் பயறுமோ அல்லது சிறு மாமிசத் துண்டுகளோ, இந்த திருகோணத்தினுட் திணித்து மூடி பொருத்தவும். சூடான டால்டாவில் சமோசாக்களை சிறு சிவப்பாகும் வரை நன்றாக பொரித்து எடுக்கவும்.

வடித்த கஞ்சி ஒரு உணவா?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1.

HVM. 96-50 TM

கேசரியின்

மூன்று பிரசித்த மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய நிவாரணி

மலடு, சங்காதோஷம், கீல்வாயு, தூக்கமின்மை, ஆஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல்குலைக் கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரீ குடீரம் லிட்,

ராயப்பேட்டை, மதருஸ் 14.

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீணாத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

கன்னங்கள் கதுப்பேறிச் சிவந்திருந்தன. அவள் முகபாவனே எதையோ எண்ணி உள்ளுக்குள் கிறுகிறுத்து மகிழும் ஒரு எக்களிப்பைப் புலப்படுத்தியது.

அவளது அன்றைய நடப்புக்கைகளில் ஏதோ புதுமையான மாறுதலே பிச்செர் கண்டு அதிசயித்தார். அவள் பக்கத்து அறையிலுள்ள தன்னிடத்துக்குப் போகாமல் வெளியே தயங்கினுள். பிறகு மெதுவாக மாக்ஸ்வெல்லின் பக்கம் சென்று அவருடைய கண்ணில் படும்படி குணங்கி நின்ருள்.

மாக்ஸ்வெல் அப்போது மனிதனுக இல்லே; அந்த யந்திரம் இரைச்சலிடும் யந்திரச் சக்கரங்களோடு ஒன்றி உழைக்கும் வியாபார யந்திரமாக மாறியிருந்தது!

"என்ன—ஏதாவது காரியமுண்டா?" என்று சட்டென்று கேட்டார், மாக்ஸ்வெல். அன்று வந்த தபால் மட்டும் மேஜை மீது ஒரு வெள்ளிப் பனிவரை மாதிரி குவிந்து வழிந்து நின்றது. அவருடைய கூரிய கருங்கண்கள் அவளேப் பார்ப்பதற்குக்கூடப் பொறுமையற்றிருந்தன.

"ஒன்றுமில்லே" என்று உதட்டில் குறுநகைபூக்கச் சொல்லிவிட்டு சிறிது ஒதுங்கினுள் அவள்.

பிறகு அவள் பிச்செசை நெருங்கி, "மிஸ்டர் பிச்செர்! வேஞெரு சுருக் கெழுத்தாளியை நியமிக்கும் விஷயமாக மிஸ்டர் மாக்ஸ்வெல் தங்களிடம் ஏதாவது சொன்ஞரா?" என்று கேட்டாள்.

"ஆமாம்?, சொன்னுர். நேற்று மாலேயில் நான் ஏஜெண்டிடம் சொல்லி சில நபர்களே அனுப்பும்படிச் சொன்னேன்—ஆனுல், மணி 9-45 ஆகியும் இன்னும் எந்தச் சிங்கார ஒய்யாரியையும் வரக்காணுமே" என்ருர் பிச்செர்.

"சரி, வேறு ஆள் வருமட்டும் நானே வேலே செய்கிறேன்" என்று சொல்லி விட்டு, தன்னிடத்துக்குச் சென்ருள்...பிறகு வழக்கம்போல் இறகு முளேத்த தனது குல்லாயை ஸ்டாண்டில் மாட்டி விட்டு, உட்கார்ந்தாள் அவள்.

கெடுபிடி வியாபாரத்தில் மூழ்கி முக்குளித்து ராக்ஷஸ வேலேப் பார்க்கும் ஒரு வியாபாரியைக் காணத் தவறியவன் மனிதப் பிராணியின் சரித்திராசிரியனுக விளங்க முடியாது என்பது என் அபிப்பிராயம். "மகத்தான வாழ்க்கையின் நெருக்கடிவேளே!" என்று கவிஞர்கள் பாடலாம். ஆனுல் ஒரு தரகு வியாபாரியின் நேரம் நெருக்கடியானது மட்டு மல்ல; ஒவ்வொரு நிமிஷமும் விநாடியும் சகல விஷயங்களின் கடிவாளத்தையும் கையில்கொண்டு திணறிக்கொண் டிருக்கும்.

அன்று ஹார்வி மாக்ஸ்வெல்லுக்கு மிகவும் அவசரமான தினம்; கட்டுகளே அவிழ்த்து அவிழ்த்துப் பார்ப்பதே வேலே; மேஜை மீது இருந்த டெலிபோன் ஏதோ காக்காய் வலிப்பு வந்த மாதிரி அடிக்கொரு தடவை கனேத்துக் கொண்டிருந்தது. மனிதர்கள் அங்கு கூட்டம் கூட்டமாய் வந்தார்கள். சந்தோஷத்துடன், விரைப்புடன், பரபரப்புடன்—எப்படியெல்லாமோ வந்தார்கள்-ஆபீஸ்பையன் செய்திகளேயும் தந்திகளேயும் உள்ளே கொண்டு வருவதும்,

பதில் கொடுக்க வருவதுமாகவே இருந்தான். பிச்செர் முகத்தில்கூட மனித சுபாவம் போய்க்கொண் டிருந்தது.

டெலிபோன் எக்ஸ்சேஞ்சு முழு வதும் வியாபாரிகளின் படை யெடுப்பால் அலறிக்கொண்டிருந் தது. மாக்ஸ்வெல் தமது நாற் காலியை சுவரோடு சாய்த்துப் போட்டு, ஏதோ விரல் முனையில் கூத்தாடும் வித்தைக்காரனைப் போல, தமது வேலைகளைக் கவனித் துக் கொண்டிருந்தார். பீரோவி லிருந்து டெலிபோனுக்கும் உள் ளேயும் வெளியேயும் திரிந்து பா பரத்து வேலைசெய்தார்.

இந்தக் கெடுபடி வேலைகளுக்கு மத்தியிலும், அடுத்த அறையில் தங்கச் சிகை கொண்டு ஒரு பெண் மணி இருப்பதைக் கண்டு கொண் டார். கழுத்திலே ஒரு கருகமணிப் பாசிச் சரம்; அதில் ஒரு வெள்ளி இதயப் பதக்கம்....அவளைக் கண் டார்; பிச்செரும் அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொண் டார்.

"ஏஜெண்டிட மிருந்து சுருக் கெழுத்தாளி வேலைக்கு வந்திருக் கிறாள்" என்று ஆரம்பித்தார்— பிச்செர்.

"வேலையா?" என்று முகத் தைச் சுழித்துக் கேட்டார் மாக்ஸ் வெல்.

"ஆமாம்—இன்று காலையில் யாரையாவது வரச்சொல் என்று நேற்று நீங்கள் என்னிடம் சொன் னீர்கள்" என்று சொன்னார் பிச்செர்.

"என்ன பிச்செர், உனக்கு மூளை புரண்டு விட்டதா? எதற்காக இன்னொரு ஆள்? அப்படி நான் சொல்ல வேண்டிய காரண மில்லையே? மிஸ் லெஸ்லிதான் கடந்த ஒரு வருஷ காலமாக மிக வும் திருப்திகரமாக வேலை செய்து வருகிறாளே? அவள் இஷ்டப் படும் வரை இங்கேயே இருக்க லாம். மற்றபடி, இங்கு வேலை காலியில்லையே! பிச்செர், ஏஜெண் டிடம் சொல்லி இனிமேல் இந்த மாதிரி எதுவும் பண்ண விடாம லிருக்கச் சொல்" என்று சொன் னார் மாக்ஸ்வெல்.

அந்த வெள்ளி இதயம் கோபத் தோடு விசுக்கென்று விரைந்து வெளிச் சென்றது.

பிச்செர் அங்கிருந்த குமாஸ்தா விடம் வரவர முதலாளி ஞாபகப்பிச காய் நடந்துகொள்கிறார் என்றவிஷ யத்தைச் சொல்லிவிட்டு சென்றார்.

அந்த இடத்தின் ராக்ஷஸக் கெடுபிடி வரவர அதிகமாயிற்று. கீழ்க் கிடங்கில் அதிகப்படியான பங்கு உள்ள ஷேர் மார்க்கெட் சாமான்கள் இருந்தன. விற்பதற் கும் வாங்குவதற்கும் உத்தரவுகள் சிட்டுக்குருவி வேகத்தில் பறந்து கொண்டிருந்தன. மாக்ஸ்வெல் அசுர வேகத்தில் செல்லும் ஒரு யந்திரம் போல, காலத்தோடு போட்டி போட்டு முந்திக்கொண்டு உழைத்துக் கொண்டிருந்தார். அடவோலைகள், பத்திரங்கள், கடன், சேம நிதி, கையிருப்பு— இத்தியாதி கலந்த பொருளாதார உலகம் அது; அதில் இயற்கை உலகுக்கும், மனித உலகுக்கும் இடம் கிடையாது.

சாப்பாட்டு வேளை வந்ததும் அந் தக் கெடு பிடி ஓரளவு சமனப் பட்டது. மாக்ஸ்வெல் கைநிறை

யத் தந்திகளேயும் பாரங்களேயும் ஏந்திக்கொண்டு, காதில் சொருகிய பவுண்டன் பேனுவுடன், தலைமயிர் கலைந்து சிதறிய நெற்றியில் புரள, தம்மிடத்தைவிட்டு எழுந்திருந்தார். அந்த அறையின் ஜன்னல் திறந்திருந்தது; அதன் வழியில் வசந்தத்தின் பூங்காற்று சிலுசிலுத்து வீசிற்று.

அந்த ஜன்னல் வழியாக, ஒரு சுகந்த மணம் மிதந்து வந்தது; மாக்ஸ்வெல் ஒரு கணம் அதை அனுபவித்தார். அந்த சுகந்த மணம் மிஸ் லெஸ்லி இருந்த இடத்திலிருந்து தான் வந்தது; லெஸ்லியிடமிருந்துதான் வந்தது.

அந்த சுகந்த மணம் அவருக்கு அவள் நினைப்பை யூட்டியது. பொருளாதார உலகம் கிறக்கம் இழந்துநிற்க ஆரம்பித்தது. அவள் அடுத்த அறையில்தான், இருபதடி தூரத்தில்தான் இருந்தாள்.

"இப்போதே அதைச் செய்து விடுகிறேன். இப்போதே அவளைக் கேட்டுவிடவேண்டியதுதான். இதையேன் நான் முன்னமே செய்யவில்லை?" என்று தனக்குத் தானே பேசிக்கொண்டார் மாக்ஸ்வெல்.

திடீரென்று அவர் லெஸ்லியின் அறைக்குள் பாய்ந்து சென்று அவள் மேஜைமுன் நின்றார்.

அவள் சிறு புன்னகையுடன் அவரை நிமிர்ந்து பார்த்தாள். கன்னத்தில் சிவப்புக் கூடிக் குவிந்தது; கண்கள் அன்பு மொழிந்தன. மாக்ஸ்வெல் முழங்கையை அவள் மேஜைமீது ஊன்றினர். அவருடைய காதில் பேனு அப்படியே இருந்தது; கையிலும் காகிதக் கற்றை இருந்தது.

"மிஸ் லெஸ்லி! ஒரு நிமிஷம் தான் உன்னேடு பேசமுடியும். அதற்குள் பேசிவிடவேண்டும். நீ என் மனைவியாகி விடுகிருயா? எனது அவசரத்தில் உன்னேடு காதலாட நேரமில்லை; எனினும் உன்னை நான் காதலிக்கிறேன். சீக்கிரம் சொல். யூனியன் பஸிபிக் எனக்காகக் காத்துக்கொண் டிருக்கிறது!" என்று படபடத்தார்.

"என்ன பேச்சு பேசுகிறீர்கள்?" என்று கண்களை அகல விழித்துக்கொண்டு திமிறியெழுந்தாள் லெஸ்லி.

"சொல்வது புரியவில்லையா? நீ என்னை மணம்புரிவாயா? லெஸ்லி, உன்னை நான் காதலிக்கிறேன். உன்னிடம் நான் சொல்லவேண்டுமென்று நினைத்தேன். நேரமில்லை. அதோ எனக்கு போன் வந்துவிட்டது...பிச்சேர், இதோ வந்துவிட்டேன். லெஸ்லி! சீக்கிரம் பதில் சொல்!" என்று அவசரப்பட்டார் மாக்ஸ்வெல்.

அவள் திகைத்துப் போனுள். மறுகணம் தனது திகைப்பைச் சுதாரித்துக்கொண்டாள். அவள் கண்களில் கண்ணீர் பொலபொலவென்று வழிந்தது. அவளுடைய ஒரு கரம் மாக்ஸ்வெல்லின் கழுத்தில் விழுந்து வளைந்தது.

"இப்போதுதான் புரிகிறது; இந்தப் பாழாய்ப்போன வியாபாரம் தான் தங்கள் புத்தியை இப்படிச் சிதறடித்து விட்டது. முதலில் நான் பயந்தே போய்விட்டேன். உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா, ஹார்வி! நேற்று மாலை எட்டு மணிக்கு, அந்த மூலையில் இருக்கும் தேவாலயத்தில் நாம் மணம் புரிந்து கொண்டோமே!"

க்வோ மோ—ஜோ ஜீவியவந்தரான சீன எழுத்தாளர். எந்தக் கட்சிப் பற்றும் அற்றவர்; எனினும் மக்கள் பக்கம் நின்று உழைப்பவர். சோவியத் ருஷ்யாவுக்கும் ஒரு தடவை சென்று திரும்பியவர். பல நூல்கள் எழுதியிருக்கிறார். இவர் பண்டைச் சீன சரித்திர ஆராய்ச்சி நிபுணர்.

சாக்ரடீஸ் சாகும்போது தாம் கடன்பட்ட சேவலை காணிக்கை செலுத்தி விடும்படித் தெரிவித்துக்கொண்டார். இந்தக் கதையில் வரும் எழுத்தாளன் தனக்குப் பணம் கிடைத்த போது என்ன செய்தான்?

நிலவு

○

க்வோ மோ—ஜோ

குழந்தையைப் புதைத்து அடக்கம் செய்தாயிற்று. இந்த வேலையில் அவனுக்கு உதவி செய்த அந்த இரண்டு ஆட்களும் தங்கள் மண்வெட்டிகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போய் விட்டார்கள். வானம் இருண்டிருந்தது. கிழக்கே அடிவானத்தில்தான், நிலா உதயமாகப் போவதால் ஒளி படர்ந்து கொண்டிருந்தது. சுற்று முற்றும் காற்றோ அரவமோ கிடையாது. அவனைச் சுற்றியிருந்த மரங்களும், செற்பயிரும் வெப்பத்திலிருந்து தப்பிப் பிழைத்து விட்டன என்றாலும், தாராளமாக மூச்சு விட்டுக் கொள்ளக் கூடிய பலத்தை இன்னும் பெறவில்லை,

'என் குழந்தைகளுக்கு முன்னாலேயே நான் செத்துப் போய் விடுவேன்' என்று எப்போதும் நினைத்துக் கொள்வான் ஈ—யௌவ். ஆனால் க்ஷயரோகத்தினால் அரிக்கப்பட்ட அவனுடைய தேகம் யுத்த காலக் கஷ்டங்கள் நிரம்பிய ஒரு வருஷ காலத்துக்கு அதிகமாகவே உயிர் பெற்று நடமாடிக் கொண்டிருக்கும்போது, ஏதோ ஐந்து நாள் அசௌக்கியத்தினால் அந்தப் பச்சிளம் தளிர் வாடிக் கருகி விட்டது. என்னே விசித்திரம்!

மண் போட்டு மூடியிருக்கும் சவக்குழியின் மேட்டருகே, தலையைக் கைகளில் புதைத்து, புல்லின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தான் ஈ—யௌவ். அந்தச் சிறு மண் மேட்டின் அருகில் பெருத்த ஆகிருதியுடன் அவன் அமர்ந்திருப்பது "சமாதிச் சிங்கத்தைப்" போலத் தோற்றமளித்தது.

மேகத்திலிருந்து விடுபட்டுக் கிளம்பினான் சந்திரன்; அநேகமாகப் பூரணசந்திரனைப் போலவே இருந்தது நிலா. அதற்கு எதிர்ப்புறத்தில் மேகங்கள் கூடி அடர்ந்திருந்தன. நிலாக்கிரணங்கள்

அவற்றை ஊடுருவிப் பாய்ந்து ஒளி வீசிக் கொண்டிருந்தன.

வண்டினங்கள் 'பாடிப் பார்ப் போமே' என்று எண்ணிப் பாடி யதுபோல கங்குல் கீதத்தை இசைக்கத் தொடங்கின.

சல்லடைபோல் பின்னிக் கிடந்த மூங்கில் கூட்டத்தின் வழியாகப் பாய்ந்த நிலா ஒளி, சிங்கத்தைப் போலத் தோற்ற மளிக்கும் ஈ—யௌவ்வின் தலையில் விழுந்தது.

ஈ—யௌவ் மெதுவாகத் தலையைத் தூக்கி, தன் வெண் ணிறத் தொப்பிக்குக் கீழாக நிலா வொளியைப் பார்த்தான். அவ னுடைய குழிவிழுந்த கண்கள் சிவந்துபோயிருந்தன. கன்னங் களின் எலும்பு வெளியே துருத் திக் கொண்டிருந்தது. அவ னுடைய முகமெல்லாம் வெளுத் துப் போயிருந்தது. உதடுகளை அடிக்கடி இறுக்கி மூடிக்கொண் டிருந்தான்.

தான் கொண்டுவந்த மூங்கில் கழியை நிதானமற்று படபட வென்று தேடினான்; தேடி எடுத் துக் கொண்டான். சிரமப்பட்டு எழுந்து நின்றான்.

ஈ—யௌவ் சுமாரான உயரம் உள்ளவன். அவனுடைய தொப்பி யின் நிறத்திலேயே அவனுடைய உடைகளும் இருந்தன. இந்த இரண்டையும் பார்த்தால், இவை ஐந்து வருஷகால யுத்தத்தைப் பார்த்திருக்கின்றன என்பதும், அவன் தன் சொந்த ஊருக்கு, இடைக்கால்த் தலை நகரிலிருந்து வந்த வரைக்கும், அவன் சென்ற விடமெல்லாம் அவனை விட்டு இணைபிரியாமல் இருந்திருக் கின்றன என்பதும் தெளிவாகத் தெரிந்தன.

நிலவொளி முதுகில் படும்படி யாகத் திரும்பிக்கொண்டு மண் மேட்டைப் பார்த்தான்.

"ஈ—யோ! சுகமாகத் தூங்கு. க்ஷயரோகம் பிடித்த உன் அப்பா வின் பக்கத்திலோ, மெலிந்து இளைத்த உன் அம்மாவின் பக்கத் திலோ படுத்துத் தூங்குவதைவிட இங்கே படுத்துத் தூங்குவது உனக்கு எவ்வளவோ சௌகரிய மாக இருக்கும். உனக்குக் கஷ்டம் கொடுக்க இங்கே கொசுக் கள் இல்லை; நோய் நொடிகளோ, பசியோ, குளிரோ கிடையாது. என் குழந்தாய்! சுகமாகத் தூங்கு......

"ஈ—யோ! வெகு காலமாக உன் அப்பாவினால் உன்னைக் கவ னித்துப் பராமரிக்க இயலாமல் போய்விட்டது. உன்னை அவன் கவனிக்காமல்தான் இருந்துவிட் டான். உன் அம்மா மெலிந்து வாடிப் போய்விட்டாள். யுத்தம் வந்தபிறகு, உன்னைப் பெற்ற அம்மா மூன்று தடவை கர்ப்பிணி யாகி யிருக்கிறாள். நாங்கள் நாங்கிங் கிலிருந்து ஹூஹான் நகரத்துக்கும் ஹூஹானிலிருந்து சுங்கிங்குக்கும் ஓடி யிருக்கிறோம். இந்த மூன்று வருஷ காலத்தில் அவள் ஒருத் தியேதான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளும்படி நேரிட் டது. இப்போதோ அவள் உன் நோயாளித் தகப்பனையும் கவனித் துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. உனக்கு அம்மாவின் மேல் பிரியம் என்று எனக்குத் தெரியும். ஆகவே, சுகமாகத் தூங்கு. இனி தூங்கப்பண்ணுவதற்காக உன்

அம்மா வந்து உனக்கு விசிற வேண்டும் என்ற அவசியம் உனக்குக் கிடையாது.''

ஈ—யௌவ்வுக்குக் கண்ணீர் வரும் போல இருந்தது; ஆனால் வரவில்லை. மழை பெய்வதுபோல் தோன்றி வெறும் மின்னலுடன் நின்றுவிடுவதில்லையா?

இந்தச் சமயத்தில் அடர்ந்த புகையைப் போல மேகங்கள் 'விறு விறு' என்று மேலே கிளம்பி வெகு வேகமாக நாலா பக்கமும் சிதறிவிட்டன. நிலவு ஜெயகீதம் பாடியது.

மெலிந்து ஒடுங்கிய அந்த மனிதன் வயல்புறத்தின் ஓரமாக மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தான்; தனக்குப் பின்னால் விழுந்து கிடக்கும் நீளமான தன் நிழலையும் இழுத்துக் கொண்டு, நடந்தான்; அது பட்டினியினால் வாடிய ஒரு குதிரை பெரிய பீரங்கியை இழுத்துக் கொண்டு மலையின் மேல் ஏறுவதைப் போல் இருந்தது. அவன் கையிலிருந்த மூங்கில் கழி, "சரி சரி, சரி சரி, இந்த மனிதனைக் கடைசிவரைக்கும், ஆதரிக்க வேண்டும் நாம்'' என்ற அர்த்தத்தில் கத்துவதுபோல் தவளைகள் கத்தும் சப்தத்தை எதிரொலித்துக் கொண்டிருந்தது.

வயலிலிருந்து தன் நிழலை ஓர் ஆற்றங்கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தான். அங்கிருந்து கரையை ஒட்டியே சென்று, பிறகு ஒரு கற்பாலத்தின் வழியாக நிழலை இழுத்து வந்தான். அப்புறம் மற்றொரு வயல் எதிர்ப்பட்டது; அதையும் தாண்டிப்போய் கிழக்கே பார்த்துள்ள ஒரு முற்றத்தில் நுழைந்தான். இங்கே அவன் நிழல் அவனுக்கு முன் பக்கத்தில் விழுந்தது. அது, இதுவரையிலும் இழுத்து இழுத்து அலுத்துப் போய்விட்டது; இனி நிழலைப் பின்னால் தள்ள வேண்டும், என்று அவன் தீர்மானத்தைப் போல இருந்தது. கடைசியாக, அந்த முற்றத்தின் வலது பக்கத்தில் இருந்த ஒரு கட்டடத்துக்கு வந்து சேர்ந்தான். அந்தக் கட்டடத்தின் நிழலில் அவன் தன்னுடைய நிழல்-பாரத்தை ஒரு வழியாக இறக்கி வைக்க முடிந்தது.

அதுதான் ஈ—யௌவ்வின் வீடு. தொப்பியை எடுத்துவிட்டு, சட்டைக் கைகளால் நெற்றியைத் துடைத்தான். சிறிதுநேரம் அங்கேயேநின்று மூச்சு வாங்கினான்.

வீட்டினுள்ளே வெளிச்சம் இல்லை. வாசல்படியில் காலெடுத்து வைக்கும்போது, வலப் புறத்தில் இருந்த உள் அறையிலிருந்து ஈனஸ்வரத்தில் அழும் குரல் கேட்டது. அந்த அறையை நோக்கி வேகமாகச் சென்றான். அந்த இடம் பின்னும் அதிக இருட்டாக இருந்தது. உள்ளே என்ன இருக்கிறது, என்ன இல்லை என்று ஒன்றுமே தெரியவில்லை. வாசல் நிலைக்குச் சற்று உள்ளே தள்ளி, மூங்கிலால் செய்த ஒரு கட்டில் கிடந்தது. கட்டில் காலில் தட்டினாலும் தடுக்கி விழுந்துவிடாமல், எப்படியோ அதைச் சுற்றிக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

அறையின் மறுகோடியில் இருக்கும் பெரிய படுக்கையிலிருந்து அழுகை ஒலிகேட்டது. அறையில் நிறைந்து கிடக்கும் தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் கடந்து கட்டிலின் பக்கம் போனான்.

இப்போது அவனுக்கு இருட்டு பழகிப்போய்விட்டது. அதனால், தனக்கு முன்பாக என்ன நடக்கிறது என்பதை அவனால் அறிந்து கொள்ள முடிந்தது. அவனுடைய மனைவி சின்னஞ்சிறிய மூங்கில் நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து, முன்னால் கிடக்கும் படுக்கையில் சாய்ந்துகொண்டு, தன் மகளின் முதுகைச் சொறிந்து கொண்டிருந்தாள். படுக்கையின் மற்றொரு கோடியில், அவர்களுடைய கடைக் குட்டிக் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது. அதற்கும் உடல் நிலை சரியாக இல்லை. படுக்கையின் மேல் தன் மூங்கில் கழியைச் சாத்தி வைத்துவிட்டு குழந்தையின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். குழந்தைக்கு இன்னும் ஜுரம் பொரிந்து கொண்டிருந்தது. அது தன்மேல் ஒரு மெல்லிய சட்டையைத்தான் போட்டுக் கொண்டு தூங்கியது. அதனால், மற்றொரு துணியை எடுத்து அதன்மேல் மூடினான்.

"மூடி என்ன பிரயோஜனம்? பழையபடியும் அதைக் கீழே தள்ளி விடும்" என்று துக்கம் ததும்பும் குரலில் சோர்ந்து போய்ச் சொன்னாள் அவன் மனைவி. அவள் சொன்னபடியே தான் நடந்தது. குழந்தை துணியை இழுத்து அப்பால் போட்டுவிட்டது.

அவன் சிறிதுநேரம், அனுதாவானநிலையில் அங்கே நின்று கொண்டிருந்தான். பிறகு தன் மனைவியைப் பார்த்துக் கேட்டான்:

"நீ இன்னும் சாப்பிடவில்லை போலிருக்கிறதே!"

"இப்போது என்னால் எதையும் சாப்பிடமுடியாது" என்றாள் மனைவி. பிறகு அவள் கூறினாள்:

"கொஞ்ச நேரத்துக்கு முன்பு ஈ—யேரிடம் அழைத்துக்கொண்டு போகும்படி சென்—யேர் என்னை நச்சரித்துவிட்டாள். கடைசியில் ஒரு பிஸ்கோத்தைக் கொடுத்து அந்த விஷயத்தை மறக்கப் பண்ணினேன்."

ஈ—யேர் சாகும் வரையிலும் அவள் அவனுடன் ஆஸ்பத்திரியில் இருந்தாள். அன்று மத்தியானம்தான் அவன் போய் அவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, சவ அடக்கத்தைக் கவனிக்கச் சென்றான்.

ஈ—யௌவ்வோ அன்று இடைவேளை சிற்றுண்டிகூட அருந்தவில்லை. கொசுக்களை விரட்டுவதற்குப் போட்டிருந்த புகை சுவாசத்தை அடைத்தது.

மனைவியைப் பார்த்து, "நீயும் போய்ப் படுத்துக்கொள். இந்தப் புகையினால் ட்சூன்—யேருக்குச் சங்கடமாகத்தான் இருக்கும்" என்று சொல்லிவிட்டு தீப்பெட்டியை எடுத்து, மேஜை மேலிருந்த விளக்கெண்ணெய்த் தீபத்தை ஏற்றினான்.

மனைவி மௌனமாகப் போய்ப் படுக்கையில் சாய்ந்தாள். கொசுக்களை வீசித் துரத்திவிட்டு படுக்கையைச் சுற்றியுள்ள திரையைத் தொங்கவிட்டாள்.

ஈ—யௌவ் மூங்கில் கழியையும், தொப்பியையும் ஸ்டாண்டில் மாட்டினான். கோட்டைக் கழற்றி அதையும் அதில் தொங்கவிட்டுவிட்டான். பிறகு படுக்கைக்குக்

கிழே கொசு உபத்திரவத்துக்காகப் போட்டிருந்த புகை மூட்டத்தை அணைத்தான்.

மேஜையின் மேல் புத்தகங்கள், காகிதங்கள் மருந்துப் புட்டிகள், 'சாய்ப்'பால் * புட்டிகள் முதலியவை இருந்தன. மேஜையில் கிடந்த கடிதக் கட்டு அவன் கவனத்தைக் கவர்ந்தது. தினம் தோறும் காலையில் அப்படிப்பட்ட கடிதக் கட்டு ஒன்றை அவன் வேலை செய்யும் காரியாலயத்திலிருந்து அவனுக்கு அனுப்பி வைப்பார்கள். அவன் மிகவும் ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருப்பது சுங்கிங்கிலிருந்து வரும் பத்திரிகைகளைத்தான். அவை பிற்பகலில்தான் இங்கு வந்து சேரும். ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தைப்பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளுவதில்தான் அவனுக்கு அக்கறை. அடுத்தபடியாக, இலக்கிய சம்பந்தமாக ஆங்காங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ளுவதில் ஆர்வம் உண்டு. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் பத்திரிகையை எடுத்து ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, இரண்டு கடிதங்களையே முதலில் கையில் எடுத்தான். அந்த இரண்டில் ஒரு கடிதம் மிகவும் கனமாக இருந்தது. அதைத் திறந்து, உள்ளே இருந்த கரன்ஸி நோட்டுகளின் கட்டை வெளியில் எடுத்தான். அந்த நோட்டுகளைச் சுற்றி வைத்திருந்த ஒரு காகிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது.

"ஈ—யௌவ்,

எழுத்தாளர் நிதிக் கமிட்டி இன்று அனுப்பிய ஆயிரம் டாலர்களை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். இது தங்கள் வைத்தியச் செலவுகளுக்காக அனுப்பப்பட்ட சகாயநிதி. இந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு ரசீது அனுப்புங்கள். தங்கள் நண்பர்களுக்கெல்லாம் தங்கள் உடல் நிலைபற்றிய ஒரே கவனம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதனால்தான் தங்கள் சேவையைப்பற்றிய பாராட்டுடன், இந்த சகாயத் தொகையையும் தங்களுக்குக் கமிட்டி அனுப்பியிருக்கிறது. இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுவதால், தங்கள் புகழுக்குச் சிறிதும் மாசு ஏற்படப் போவதில்லை; ஆகவே இதை ஏற்றுக்கொள்ள மறுக்காதீர்கள். என்றும் தங்கள் க்ஷேமத்தையே நாடுகிறேன்.

குழந்தைகளின் உடல்நிலை குணமாகிவிட்டதா?

துங்—பெங் ஜூலை, 7."

இந்த சகாயநிதி வந்தது, அவனுக்கு எதிர்பாராத ஆச்சரியமாக இல்லை. ஏனென்றால், அவனுடைய நண்பன் சிறிதுகாலமாகக் கமிட்டியிலிருந்து சகாயத்தொகை வாங்கி அவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று யோசித்துக் கொண்டே இருந்தான்; ஆனால் ஈ—யௌவ் பணத்தை வாங்கிக் கொள்ளமாட்டானே என்று தயங்கிக் கொண்டும் இருந்தான். சமீபத்தில், ஈ—யௌவ்வின் குழந்தைகளுடைய தேக அசௌக்கியத்தைக் கேள்விப்பட்டதும் கமிட்டி

---

* சீனாவிலும், ஜப்பானிலும் ஒருவகைப் பீன்ஸ் பருப்பிலிருந்து தயாரிக்கப்படுவது 'சாய்ப்'பால் என்பது.

யில் பணம் வாங்கி அனுப்பத் தலைப்பட்டார்கள்.

துங்—பெங் கௌரவமுள்ள ஒரு நண்பன்; ஈ—யௌவ்வின் டிவிஷனில் அவன்தான் தலைவன். ஒரு வருஷ காலமாக ஈ—யௌவ் நோயாளியாக இருந்து வந்தாலும், அவனுடைய உத்தியோக ஸ்தானத்தை அவனுக்காக அவர்கள் இன்னும் காலியாக வைத்துக் கொண்டு காத்திருந்தார்கள். அவன் செய்யவேண்டிய வேலையை அவனுடைய நண்பர்கள் செய்து வந்தார்கள். இந்த விதமான காரணங்களால், தன் ஸ்தாபனத்திடம் விஸ்வாசமும், துங்—பெங்கிடம் நன்றியறிதலும உடையவனாக இருந்தான் ஈ—யௌவ். இந்த நிலையில் ஈ—யௌவ், துங்—பெங்கின் சொல்லை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று நினைத்தான். ஆனாலும், அது விஷயத்தில் இவன் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆகவே, கடிதத்தையும் கரன்ஸி நோட்டுக்களையும் ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு, மற்றொரு கடிதத்தைக் கையில் எடுத்தான்.

அந்தக் கடிதம், ஒரு சர்வ கலாசாலை நூல் நிலையத்திலிருந்து வந்தது. அந்த நூல் நிலையத்திலிருந்து அவன் இரண்டு வருஷங்களுக்கு முன்பே, ஆறு புத்தகங்களைப் படிக்க எடுத்துக்கொண்டு வந்திருந்தான். துரதிர்ஷ்டவசமாக, அவன் வேலைசெய்து வந்த இடத்தில் குண்டு விழுந்ததினால் அந்த ஆறு புத்தகங்களும் அவனுடைய சொந்தப் புத்தகங்களும் நாசமாகி விட்டன. ஆனால் புத்தகங்களைக் கேட்டு வந்திருக்கும் கடிதத்தை அவனால் அசட்டை செய்ய முடியவில்லை; அது அவன் கடமை உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. "எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அனுப்பி வைப்பீர்கள் என்று நம்புகிறோம். அந்தப் புத்தகங்களுக்குப் பதிலாக அந்தப் புத்தகத்தின் வேறு பிரதிகளை இப்போது திருப்பி வாங்கி வைக்க வேண்டுமென்றாலும், அந்த புத்தகங்கள் இப்போது கிடைக்கவில்லை. சில ஆராய்ச்சிக் குறிப்புகளுக்காக அந்தப் புத்தகங்கள் இப்பொழுது மிகவும் அவசரமாகத் தேவைப் படுகின்றன."—இப்படி இருந்தது கடிதத்தின் வாசகம். இனி என்ன செய்வது? கடைகளில் அந்தப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றால் எப்படி அந்தப் புத்தகங்களை இனி நூல் நிலையத்துக்கு அனுப்ப முடியும்? கண்களை உருட்டி கரன்ஸி நோட்டுக் கட்டைப் பார்த்தான்.

பழையபடி உள்ளே முனகல் ஒலி கேட்டது. அந்தப் பக்கம் திருப்பிப் பார்த்தான். அப்போது கொசு வலையில் அவனுடைய நிழலைக் கண்டான். கண்டதும், "எப்படி இளைத்து மெலிந்து போய் விட்டேன்!" என்று எண்ணி திடுக்கிட்டான்.

படுக்கையில் தலைக்குமேலாக தொங்கிக் கொண்டிருந்த கயிற்றுச் சுருளைப் பார்க்கும் போது, அவன் உள்ளத்தில் துன்பகரமான ஒரு எண்ணம் தோன்றியது. அது பொட்டணம் கட்டக்கூடிய கயிறுதான்; அது கனமான கயிறாக இல்லை; மெல்லியதாகவே இருந்தது. எழுந்து சென்று அந்தக் கயிற்றைத் தொட்டுப் பார்த்தான்.

பிறகு கொசுவலையை மெல்லத் தூக்கி உள்ளே படுக்கையை எட்டிப் பார்த்தான். அவன் மனைவி உட்கார்ந்து, குழந்தையின் வயிற்றைத் தடவிக் கொடுத்துக் கொண்டு வழக்கம்போல கண்ணீர் சிந்திய வண்ணம் இருந்தாள்.

பழையபடியும் கொசு வலையைக் கீழே தொங்க விட்டான்; அங்கிருந்து திரும்பி வந்து படுக்கையில் சாய்ந்து கொண்டு, அந்த ஆயிரம் டாலரையும் எந்தெந்தச் செலவுகளுக்கு ஈடுகட்டுவது என்று யோசித்துக் கணக்குப் போட ஆரம்பித்து விட்டான்.

பணம் உண்மையில் சரியான சமயத்தில் தான் வந்திருக்கிறது; ஆகவே அதைப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அவன் கெட்டுப் போக்கிய அந்த ஆறு புத்தகங்சளும், கிடைத்தற்கரிய அபூர்வமான புத்தகங்கள் என்று சொல்ல முடியாது. யுத்தத்துக்கு முன்னால், அதிகமாகப் போனால் அவற்றின் விலை பத்து டாலருக்குள்ளாகத் தான் இருக்கும். இப்போது இருநூறு அல்லது முந்நூறு டாலர் இருக்கும். அவசியம் அந்தப் புத்தகங்களுக்கு உரிய விலையைக் கொடுத்துவிட வேண்டியதுதான். நூல் நிலையத்திற்கு முந்நூறு டாலர்களை அனுப்பி விடவேண்டும்.

புத்தகங்கள் மதிப்பு வாய்ந்த பொருள்கள். அந்தப் புத்தகங்களை முழுதும் படிக்காதிருந்த காரணத்தினால் ஒரு சமயம் அவன் தன் நண்பர்கள் சிலரிடம் தவறான கருத்துக்களை வெளியிடும்படி நேரிட்டது.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால், பந்தாட்டக் காரர்களாகிய வாலிபர்களின் முன்னிலையில் அவன் ஒரு பிரசங்கம் செய்தான். அப்போது கீழ்க்காணும் இரண்டு வரிகளைச் சொல்லும்படி நேரிட்டது.

> கியாங்னனிலிருந்து தாமரை விதைகளைக் கொணர்ந்தார்கள்.
> தாமரை இலைகள் எப்படி முளைத்தன தெரியுமா? 'டியன் டியன்.'

இந்தப் பாட்டில் 'டியன் டியன்' என்ற இரண்டு பதங்களுக்குத் தப்பான உரையைச் சொல்லிவிட்டான். இப்போது சமீபத்தில் ட்சூ யுவான் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கும் போது சந்தர்ப்ப வசமாக ஓரிடத்தில் மேற்கண்ட பதங்களின் பிரயோகம் ஒன்று தென்பட்டது. அந்தப் பதங்களுக்குச் சுயமாக யாதொரு அர்த்தமும் கிடையாது என்பதையும், தாமரை இலைகள் அமோகமாக முளைத்தன என்பதைச் சுட்டிக் காட்டும் வெறும் ஒலிக் குறிப்புத் தான் அந்தச் சொற்கள் என்பதையும் இப்போதுதான் அவன் தெரிந்து கொண்டான். முன்னால், தான் தப்பாக யாரிடம் பொருள் கூறினானோ அவர்களுக் கெல்லாம் உண்மையான பொருள் தென்படும் படிக்கு, ட்சூ யுவான் புத்தகப் பிரதிகளை வாங்கி ஆளுக்கு ஒன்றாக அனுப்பி வைக்க வேண்டும் என்று தீர்மானித்தான் ஈ-யெளவ். அந்த வகையில் மேற்கொண்டும் ஒரு இருநூறு டாலர்கள் செலவாகும். நிற்க.

ஈ—யேர் இறப்பதற்கு முன்னால் அவனை ஒரு சிறுவர் பாடசாலையில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்திருந்

தான். இப்போது ஈ-யேர் செத்துப் போனாலும் கூட, அவனைச் சேர்த்துக் கொள்ளச் சம்மதித்த பாடசாலைக்கு தன் நன்றியைச் செலுத்தத் தீர்மானித்தான். ஈ-யேர் உயிருடன் இருந்திருந்தால், அவனுக்குத் துணி மணிகளும், மற்ற சாமான்களும் வாங்கியிருக்க வேண்டும் அல்லவா? அதற்காக குறைந்த பக்ஷம் ஒரு ஐந்நூறு டாலராவது செலவாகியிருக்கும். 'இப்போது, ஈ-யேர் உயிருடன் இருப்பதாகவே பாவித்து, அந்த ஐந்நூறு டாலரைப் பாடசாலைக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டால் என்ன?' என்று தீர்மானித்தான்.

ஆயிரம் டாலர்களை இப்படிச் செலவழித்தும் கூட, ஒரு நானூறு டாலர் கடனை அடைப்பதற்கு வழியில்லாமல் போய்விட்டது. ஈ-யேரின் சவ அடக்கத்துக்காக ஈ-யௌவ் தன் வீட்டுச் சொந்தக்காரனிடம் நானூறு டாலர்கள் கடனாக வாங்கியிருந்தான்.

கடைசியில் துங்-பெங்கின் உதவியை நாடவேண்டியதுதான். இந்த ஆயிரம் டாலர்களை எப்படி எப்படிச் செலவழிக்க வேண்டுமோ, அப்படி அப்படிச் செலவழிக்கும்படி அவனிடம் கொடுத்து விட்டு, மீதியுள்ள இந்த நானூறு டாலர் கடனை அடைக்கும்படியாகவும் துங் பெங்கைக் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தான். இதைத் தவிர வேறு வழி ஒன்றும் அவனுக்குப் புலப்படவில்லை.

சிரமப்பட்டு எழுந்து, மேஜையருகே போனான். அங்கிருந்த ஒரு வெள்ளைத்தாளை எடுத்தான். பித்தளை மூடி போட்ட பிரஷ் ஒன்று பக்கத்தில் கிடந்தது. அதை எடுத்து மையில் தோய்த்துக் கொண்டு, பின் வரும் கடிதத்தை அழகாக முத்து முத்தான எழுத்துக்களில் எழுதினான்:

"துங்-பெங் ஹ்ஸியன்-ஷெங்

நான் தங்களிடம் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். தாங்கள் கூறிய பிரகாரமாக நான் ஆயிரம் டாலர்களைப் பெற்றுக் கொண்டேன். ஆனால் தங்களிடம் வேறு சில கோரிக்கைகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1. ஒரு வருஷத்திற்கு முன்னால்—சர்வகலாசாலை நூல் நிலையத்திலிருந்து நான் ஆறு புத்தகங்களை எடுத்துக் கொண்டு வந்திருந்தேன். நாம் நகரத்தில் இருந்த போது, குண்டு வீச்சினால் துரதிர்ஷ்ட வசமாக அந்த ஆறு புத்தகங்களும் நாசமாகி விட்டன. இப்போது அந்தப் புத்தகங்கள் அவசியம் தேவை என்று நூல் நிலயத்தார் அவசரப் படுத்துகிறார்கள். (அங்கிருந்து வந்த கடிதத்தையும் இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்) ஆனால், அந்தப் புத்தகங்களுக்குப் பதில் வேறு புத்தகங்களை வாங்கி அனுப்ப இயலாமல் இருக்கிறேன். ஆகவே, தாங்கள் புத்தகங்களுக்குப் பதிலாக, இந்த ஆயிரம் டாலர்களில் முன்னூறு டாலர்களை எடுத்து நூல் நிலயத்திற்கு அனுப்பி விடும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

2. நான் நோய் வாய்ப்படாதிருந்த சமயத்தில், பந்தாட்டக்காரர் கூட்டத்தில் நான் தொடர்ந்து பிரசங்கங்கள் செய்தேன். அப்போது ஒரு பிரசங்கத்தில்,

"கியாங்னனிலிருந்து அவர்கள் தாமரை விதைகளைக் கொணர்ந்தார்கள்.

தாமரை இலைகள் எப்படி முளைத்தன தெரியுமா? 'டியன் டியன்.'"

என்ற வரிகளில் உள்ள 'டியன் டியன்' என்ற பதங்களுக்கு நான் தப்பாக அர்த்தம் சொல்லிவிட்டேன். இந்த நினைவு அன்றிலிருந்து என் உள்ளத்தை விட்டு அகலவில்லை. தாங்கள் அந்தப் பந்தாட்டக்காரர்களுக்கு இருநூறு டாலரை அனுப்பி, அவர்களைட்சுயுவான் புத்தகத்தை ஆளுக்கு ஒன்றை வாங்கிக் கொள்ளும்படி செய்யுங்கள்.

3. ஈ—யோ் இன்று காலையில் தான் செத்துப் போய்விட்டான். அதனால் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காகத் தாங்கள் செய்திருந்த ஏற்பாட்டை அவனால் பயன்படுத்திக்கொள்ள இயலாது போய்விட்டது. ஆனாலும், ஈ—யோ் சாகாமல் இருந்திருந்தால் நான் என்ன செய்திருப்பேனோ, அதை இப்போதே செய்ய விரும்புகிறேன். பாடசாலையினரின் பரந்த மனதுக்கு நன்றி செலுத்தும் முறையில், அவர்களுக்கு ஐந்நூறு டாலர்களை அனுப்பிவிடும்படி தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

4. ஈ—யேரின் சவ அடக்கத்துக்காக என் வீட்டுச் சொந்தக்காரரிடம் நானூறு டாலர்கள் கடன் வாங்கும்படி நேரிட்டது. என்னிடத்திலோ இப்போது தம்பிடிக் காசுகூட கிடையாது. அதனால், எனக்காக அந்தக் கடனைத் தீர்க்கும்படியாகத் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பொறுப்புக்களைத் தங்கள் மீது சுமத்துவதற்காக என்னை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன். என் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தங்களுக்கு என்றும் ஆரோக்கியமும் ஆனந்தமும் கிட்டுமாக!

ஈ—யெள, நள்ளிரவு, ஜூலை 27"

கடிதத்தை எழுதி முடித்ததும் அதை ஒரு பெரிய உறைக்குள் போட்டு, அத்துடன் பணத்தையும் ஆபீசுக்கு அனுப்ப வேண்டிய மற்ற சரக்குகளையும் வைத்தான். உறையின் வெளிப்புறத்தில் தூங் பெங்கின் விலாசத்தை எழுதினான்.

முன்னால் கயிற்றைப் பார்க்கும் போது ஏற்பட்ட அந்தத் துன்பகரமான எண்ணம், திக்கற்ற நிலையில் இதுதான் கதி என்று மோசமான முடிவில் குதிக்கப்போகும் அந்தத் துன்பகரமான எண்ணம், திரும்பத் திரும்ப அவன் உள்ளத்தில் கவிந்தது. அதைப்பற்றி கடிதத்தில் ஒன்றும் குறிப்பிடவில்லை என்றாலும்கூட, கொசுவலையில் நிழல் விழுந்தது எவ்வளவு தெளிவாகத் தென்பட்டதோ, அதே போலக் கடிதத்தில் அந்த எண்ணம் மறைபொருளாக நின்று பிரதிபலித்தது.

இதுவரையில் பார்த்திராத அந்த விஷயத்தைப்பற்றி அவன் எண்ணமிட்டுக் கொண்டிருந்ததோடு நின்று விடவில்லை; தன் மனைவியையும், எஞ்சியிருக்கும் தன் குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் செல்வது பற்றியும்

எண்ணமிட்டுக் கொண்டிருந் தான்.

"நீங்கள் போய்த் தூங்குங்கள். பழையபடியும் உங்கள் உடம்புக்கு அசௌக்கியம் ஏற்பட்டால் எங்கள் கதி என்ன?" என்றாள் அவன் மனைவி.

பழையபடியும் அவனுக்கு அழுகை வரும்போல இருந்தது. ஆனால் கண்களில் முன்போலவே ஒரு சொட்டுக் கண்ணீர்கூட இல்லை; வறண்டு காய்ந்து போயிருந்தது.

தன் கால் சட்டையின் பையில் கடிதத்தை வைத்துக் கொண்டு, விளக்கை அணைத்துவிட்டுப் படுக் கையில் போய்ப்படுத்தான்.

மனைவி உறங்கும் வரையிலும் காத்திருக்கலாம் என்று அவன் நினைத்திருந்தான். ஆனால் அவனு டைய அலுத்த உடல் தூக்கத்தைக் கோரியது.

கூறையில் பதித்திருந்த ஜன்னல் வழியாகப் புகுந்து அறைக்குள் நிலவு பிரகாசித்தது. முதலில் துணி மணிகளைப் போட்டிருக்கும் ஸ்டாண்டில் நிலவொளி விழுந் தது; பிறகு உயிருள்ள ஜீவனைப் போல நகர்ந்து வரத் தொடங் கியது.

வெகு நேரம் ஆய்விட்ட பிறகும் ஈ—யௌவ் ஆடாமல் அசையாமல் அப்படியே படுத்துக் கிடந்தான். அவனுடைய மனைவி எழுந்தாள்; கொசு வலையை மெல்ல எடுத்து அவனைச் சுற்றிலும் தொங்கவிட் டாள். அப்பொழுதும் அவன் கண் விழித்து எழுந்திருக்கவில்லை.

கொஞ்சம் கூட நிறுத்தாமல், ஓரேயடியாக நாலா பக்கங்களிலும் கொசுக்கள் இரைந்து கொண்டே இருந்தன.

*

அவர்களும் மனிதர்களே

உலகில் உயர்ந்த காரியங்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் மனிதர் கள். அவர்கள் உன்னையும் என்னையும் போன்றவர்களே. ஆண்மை மாத்திரமிருந்தால் நம்மைப்போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும். எனவே தைரியத்தை மேற்கொள்! எழுந்திரு! விழித்திரு! கருதிய கருமம் கைகூடும்வரை உழைத்திடு. —விவேகானந்தர்

வட்டி வாங்குதல்

வட்டி (வாங்கித்) தின்கிறவர்கள், பேய் பிடித்துப் பித்தங்கொண்ட வர்கள் எழும்புவதுபோலன்றி (வேறுவிதமாக மறுமையில்) எழும்பமாட் டார்கள். அல்லாஹ் வட்டியை அழித்துத் தர்மங்களை வளர்க்கிறான். வட்டியில் (இதுவரை வாங்கியது போக) மீதமிருப்பதை (வாங்காமல்) விட்டுவிடுங்கள். —குர் ஆன்

நாஸ்திகம்

கடவுளிடம் நம்பிக்கையில்லாதவனை நாஸ்திகன் என்று பழைய மதங்கள் கூறின. ஆனால் தன்னிடத்தில் நம்பிக்கை யில்லாதவனையே நாஸ்திகன் என்று புது மதம் கூறுகின்றது. இந்தத் தன்னம்பிக்கை சுய நலத்தை நாடும் எண்ணம் அன்று. இந்த நம்பிக்கை எல்லோரிடமும் வைக்கவேண்டிய விசுவாசத்தையே குறிக்கும். —விவேகானந்தர்

இதுவரையிலும் கி. மு. சகாப்தத்தில் நடந்தேறிய தத்துவ மாற்றங்கள் சொல்லப்பட்டன. கிறிஸ்துவ சமய வாதிகள் வந்த பிறகு சில தத்துவ மாற்றங்கள் நடைபெற்றன. அவை இங்கே விவரிக்கப்படுகின்றன.

கிறிஸ்துவ சமயவாதிகள்

வி. சக்கரை செட்டியார்

1. ஆதிகாலம் *

கிறிஸ்து பெருமான் பிறந்த நூற்றுண்டிலும், பின்னுலும், பழைய தத்துவங்கள் முற்றிலும் மறக்கப்படவில்லை. ஆயினும் பற்பல மாறுதல்களும், நூதன நோக்கங்களும் பழைய தத்துவங்களில் புகுதலாயின. இதுவரை தத்துவ ஆசிரியர்கள் சமயக் கொள்கைகளையும், பொதுமக்கள் சமய அவசியங்களையும் பொருட்படுத்தாமல் தர்க்க வழியிலேயே சென்றனர். இதன் விளைவாக சமயவாதிகளுக்கும் தத்துவ சாஸ்திரிகளுக்கும் நடுவே ஒரு பிளவு காணப்பட்டது. படித்தவர்கள் கடவுளர்களையும், சடங்கு ஆசார தத்துவங்களையும் கேவலமாக எண்ணிவந்தனர். சாதாரண மக்கள் தத்துவங்களை அறியக் கூடாமல் பழைய துறைகளில் சென்றனர். பழைய இதிகாச புராணங்களை நம்பி வந்தனர். இப்பொழுது தத்துவாசிரியர்கள் சமயத் துறைகளிலும் புகுந்து பழைய புராணக் கதைகளும் தத்துவங்கள் புகட்டுவதாகப் பொருள் படுத்தினர். கடவுளரும் மனிதர்களோடு உறவாடின நிகழ்ச்சிகளை நம்பினதாகக் கூறினர். இதனுல் பழைய சமயங்களுக்குப் புத்துயிர் உண்டாயிற்று என்று சொல்லலாம். கிறிஸ்து தோன்றிய காலத்தில் மக்களில் பெரும்பான்மையோர் இத் துன்பம் நிறைந்த வாழ்க்கையை விட்டு பேரின்பம் வேண்டுமென்றும், இறந்தபின்னர் மேலுலகத்தில் இறவாத வாழ்வு கிடைக்க வேண்டுமென்றும் வாஞ்சித்தார்கள். மனிதர்களின் மனம் இருளில் அலைந்து உண்மை ஒளியைக் காண ஆவல் கொண்டது. இந்த அவசரங்களுக்குத் தக்கவாறு தத்துவங்களும் மாற்றப்பெற்றன. இக்காலத்தில் யூதர்களின் (Jews) கொள்கையாகிய ஒரே கடவுள் என்ற உண்மை பரவலாயிற்று. அவர்களில் ஒரு பண்டிதனுகிய பிலோ (Philo) என்ற யூதன் அலக்சாந்திரியாவில் (Alexandria in Egypt) தோன்றினுன். அவனும் யூதர்களுடைய சமய நூற்களில் (பழைய ஏற்பாடு என்ற பைபிளில்) உள்ள கருத்துக்களை எல்லாம் ஞானமார்க்கமாய் மாற்றினுன். கிரேக்கருடைய தத்துவங்களுக்கு

---

* Primitive Christianity.

இசைய முக்கியமாக பிளேட்டோ வின் கொள்கைகளுக்கு இசைய, வியாக்கியானம் செய்தாள். இதன் விளைவாக அநேக கிரேக்கர்கள் யூதமதக் கொள்கைகளை நம்பி யூத தெய்வத்தின் பக்தர்களானார்கள். பிளேட்டோவின் சிஷ்யர்களும் தங்கள் கொள்கைகளைச் சிறிது மாற்றி, விளக்கி, புதியன புகுத்தி பழையன கழித்து புதிய பிளேட் டோனிஸம் என்று வழங்கினார்கள். இந்த புதிய பிளாட்டோனிஸம் தான் கிறிஸ்து மதத்தில் புகுந் தது. இதுவே அம் மதத்திற்கு எதிரியாகப் போராடச் செய்தது. இதுவே இக் காலத்தில் நடந் தேறிய தத்துவ மாறுதலாகும்.

கிறிஸ்துவ சமயம் பாலஸ்தின நாட்டிலிருந்து கிரேக்க நாடுகளில் புகுந்த காலத்தில் தத்துவ ரீதியாக இணைக்கப்படவில்லை. அஃது சரித்திர வழியாகப் பிறந்தது. இயேசுகிறிஸ்து அவதார புருஷ ராகத் தோன்றி மனிதர்களுக்கு ஆத்ம இரட்சிப்பை உண்டு பண்ணினார். இக் கொள்கை யெல்லாம் கிறிஸ்துவ வேதமாகிய புதிய ஏற்பாட்டிலுள்ளது என்று கூறினர். கிரேக்கர் இதை ஏற்றுக் கொண்டு தங்களுடைய தத்துவக் கொள்கைகளை அதில் நுழைத்து விட்டார்களாம். சரித்திர ரீதி யாகவே மதமிருக்க முடியாது; அதற்குக் கவசமாகத் தத்துவ ஞானமும் வேண்டுமென்று கிரேக்க ஞானத்தை சிறிது மாற்றியும் திருத்தியும் ஒப்புக் கொண்டனர். இதை முதல் முதலாக விளக்கிக் காட்டினவர் களுள் பேர் பெற்றவர் ஜஸ்டின் (Justin Martyr) என்பவர். இவ ருடைய நூல்களில் (முக்கியமாகக் கிரேக்கத் தத்துவப் பண்டிதர்க ளோடு வாது செய்த விவரங்களில்) இதைத் தெளிவாக வெளியாக்கி னர். இந்தக் கொள்கை மிகவும் முக்கியமானதால் இங்கு சிறிது விளக்கினால் பெரும் பயன் விளை விக்கும். சமயத்தின் முக்கிய இலட்சியம் உண்மையான கடவுளை அறிந்து அவ் வறிவினாலோ அவ ருடைய அருளினாலோ விடுதலை யடைவதே. இந்த அறிவு மனித னுடைய சொந்த வல்லமையினால் அறிய முடிவதில்லை. இப் பேரறிவு கடவுள் அருள் பெற்ற ஞானிகளால்தான் நமக்குக் கிடைக் கப் பெறும் என்று உறுதி கொண்டனர். முற்காலத்தில் சாகரடீஸ் முதலாகிய ஞான பண்டி தர்களையும் இறுதி நிச்சயமான பிரமாணக் கர்த்தாக்களாகக் கொண்டாரில்லை. அவர்களுடைய சொல்லுரைகளும் ஆதாரமாகவே வியந்தோதினர். இக் காலத்தில் மாறுபடாத கடைசியான பிரமாண வேத வாக்கியம் வேண்டுமென்ற ஆர்வம் உண்டானது. பண்டைய காலத்து ஞானிகளைத் தெய்விக பிரமாணங்களாக எடுத்தோதினர். தாங்கள் செய்யும் நூல்களையும் அவர்கள் பெயரால் அமைத்துக் கொண்டனர். பித்தோகோராஸ் முதலான பெரியார்கள் கீழ்த்திசை சென்று பாரத நாட்டின் ஞானத் தையும், எகிப்து நாட்டு வித்தையை யும், பாரசீக நாட்டுக் கல்வியையும் கற்றுவந்தனர் என்று கூறலானார் கள். யூத சமயத்தினர் பைபிளில் உள்ள பழைய ஏற்பாட்டு பாகத் தைத் தங்களது வேதப் பிரமாண மாகக் கொண்டனர். தங்கள் கடவுள் தங்களுக்கு தீர்க்கதரிசிகள்

மூலம் அருளிய வேதம் என்று அதைக் கொண்டார்கள் யூதர்கள். இக் கருத்தை கிறிஸ்தவ சமயத்தவர்களும் கொண்டு—புதிய ஏற்பாட்டையும்—அதாவது கிறிஸ்துவின் சரித்திரம் போன்ற பல சித்தாந்த நூல்களையும் சேர்த்துத் தங்களது வேதப் பிரமாணமாகக் கொண்டனர்.

பழைய நூல்களில் தாங்கள் நூதனமாகக் கண்ட எண்ணங்களையும் கருத்துக்களையும் நுழைத்தனர். இச் செருகல்கள் பலவாயின. இது நிற்க. பழைய இதிகாசங்கள் புராணங்கள் தெய்வங்களின் நடத்தைகள் இவைகளையெல்லாம் நவீனமாகக் கொண்டாடிப் பொருள்படுத்தினர். இவைகளுக்கு ஞானார்த்தமுண்டென்று சொல்லி பொதுமக்களை சாந்தி செய்து பழைய தேவர்களையும் தேவதைகளையும் நம்பச் செய்தனர்.

அக் காலத்திய கிரேக்க ஞானிகளும் கிறிஸ்துவ சமயிகளும் கடவுளது அறியும் சக்தி (Reason) மனிதனுக்குள்ளும் இருக்கிறது, ஆகையால் சிலர்—சாக்ரடீஸ், பிளேட்டோவைப் போன்றவர்—கடவுளுடைய அறிவு சக்தியை அதிகமாகப் பெற்று வந்தனர் என்று நம்பினார்கள். கிறிஸ்துவ சமயிகளும் இதை ஒப்புக்கொண்டு தங்களுடைய ஆண்டவனும் குருவும் ஆகிய கிறிஸ்து சொன்ன வாக்கியமே உண்மையானது; அதுதான் பாபமற்றது; மற்றவர்கள் பாப சகிதர்களானபடியால் பரம்பொருளின் உண்மையை அறிந்து கொள்வதில்லையென்றனர். இந்த வாதத்தின் முடிவாகப் பல கொள்கைகள் பரவலாயின. ஒருசாரார் (கிறிஸ்துவ வேதாந்திகளுக்குள்ளே) கிரேக்க ஞானமும் கடவுளும் கிறிஸ்துவ மார்க்கத்திற்கு வழிகாட்டியாயிருந்தன என்றனர். அது உயரிய சத்தியமன்று என்று கூறி மனிதர்களை கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொள்ளத் தயாரித்தனர் இன்னொரு சாரார். அஃதன்று வேறு சமயங்கள், பொய்ச் சமயங்கள்; பேய்களினால் ஏற்பட்டவை; மனிதர்களை ஏமாற்றும் புரட்டுக்கள் என்று வாதித்தார்கள் மற்றொரு சாரார். மனித ஞானத்தினால் கடவுளை அறிய முடியாது; கடவுளே வந்து மக்களுக்கு ஞானத்தைப் புகட்ட வேண்டுமென்றும் கூறினர். அனுமானத்தினாலும் யுக்தியினாலும் பரம் பொருளை அறிய இயலாது என்ற கொள்கையிலே சமயவாதிகளுக்கும் தர்க்க வாதிகளுக்கு மிடையில் ஒரு பெரிய பேதமுண்டாயிற்று. சுய அறிவினாலே எல்லாம் வல்ல இறைவனைக் காணலாம்; பெறலாம் என்றனர் ஒரு சாரார். மற்றொரு சாரார், இது முற்றும் முடியாத முயற்சி; கடவுளது வாக்கே நமது ஆதாரம் என்றார்கள். இவ்விதமாக அறியப்பட்ட தேவ ஞானம் புத்திக்கு எட்டாததும் புத்திக்கு எதிராகவுமிருக்கிறது. இதன் வாயிலாக கிறிஸ்து சமயத்தில் இதுகாறும் அறிவுக்கும் கடவுளால் உண்டான வெளிப்படுதலுக்கும் (Reason and Revelation) பெரிய பேதமுண்டாயிருக்கிறது. ஆகையால் கடவுளால், அவரால் ஏவப்பட்ட ஞானிகளால், சொல்லப்பட்ட வாக்கே முக்கிய பிரமாணம்.



படம் : எ. எஸ். ஆர். மூர்த்தி, பங்களூர்

பதைபதைத்து நுரைகக்கி பதறியுடல் சோரும்
பால் நிலவு முத்திடவே பஞ்சைமனம் தேறும்

படம்: எ. எம். ஹுஸ்சேன், சென்னை

வருங்காலம்

படம்: கே. முத்துராமலிங்கம், கரூர்

நிகழ் காலம்



அலகாபாத் கமலா நேரு ஆஸ்பத்திரியில், பீகம் ஆஜாத் பகுதியைத் திறந்து வைத்த போது, ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியும் ஸ்ரீ ஜீவராஜ் மேத்தாவும்.



ஆஜ்மீர் மேயோ கல்லூரி பரிசளிப்பு விழாவில்
ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி

ராய்ட்டர் ஸ்தாபன நல்லெண்ணத் தூதுவருடன்
ஸ்ரீ படேலும், பண்டித நேருவும்

பண்டித நேருவும், பீரார் இளவரசரும்



ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

சமீபத்தில் கணித சாஸ்திர மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டைனுடைய 70-ம் ஜென்ம தினத்தைக் கொண்டாடினார்கள். அவருடைய சொந்தமான வாழ்க்கைத் தத்துவம் என்ன என்பதை இக் கட்டுரையில் விரிவாகக் கூறுகிறார். எதிர்ப் பக்கத்தில் உள்ளது ஐன்ஸ்டைனுடைய முன்னாள் உருவப்படம்

என் வாழ்க்கைத் தத்துவம்

○

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

நம் உலக வாழ்க்கையே ஓர் அதிசயம்தான். நம்மில் ஒவ்வொருவரும் குறைந்த கால தாமசத்துக்கே இவ்வுலகுக்கு வருகிறோம். நாம் எதற்காக வருகிறோம் என்பதைத் தெரியாமல்தான் வருகிறோம். ஆனால் சில சமயங்களில் நாம் தெய்வீகச் செயல் புரிவதாகக் கூட நினைக்கிறோம்.

நம்முடைய அன்றாட வாழ்க்கைக் கண்ணோட்டத்தைக்கொண்டு பார்ப்போமானால் ஒன்றுமட்டும் நமக்கு நன்றாகத் தெரிகிறது. அதாவது மனிதன் மற்றவர்களுக்காகத்தான் வாழ்கிறான். அதிலும் நாம் யாருடைய புன் முறுவலிலும், நல்வாழ்விலும் சுகம் காண்கிறோமோ அவர்களுக்காகத்தான் நாம் வாழ்கிறோம். மேலும் ஒருவருக் கொருவர் உதவி செய்யும் இந்த அன்புப் பிணைப்பினால் கட்டுண்டிருக்கும் மற்ற எண்ணற்ற மக்களுக்காகவும் தான் நாம் வாழ்கிறோம்.

ஒரு நாளில் பல தடவைகள், நான் என்னுடைய அக வாழ்வும் புற வாழ்வும் பிறருடை உழைப்பை எவ்வளவு தூரம் சார்ந்திருக்கின்றன என்பதைப் பற்றி நினைப்பதுண்டு. அவர்களிடம் இருந்து பெறும் நன்மைகளுக்குப் பிரதியாக அரும்பாடுபட்டு நான் திருப்பித் தரவேண்டும் என்று எண்ணுவதுண்டு. நான் பிறருடைய உழைப்பை நிறையக் கடன் வாங்கிவிட்டேன் என்பதை எண்ணுந்தோறும் என் மனம் சஞ்சலப்படுகிறது; என் மன அமைதி குலைந்துவிடுகிறது.

தத்துவரீதியில் நாம் சுதந்திரத்தோடு வாழலாம் என்று எண்ணுவதற்கும் முடியாது. ஏனெனில் புற உலகக் கட்டு திட்டங்களுக்கு மட்டுமன்றி நம்முடைய சொந்த அத்தியாவசியங்களைப் பொறுத்தும் நாம் செயல் புரிகிறோம்.

'மனிதன் எதைச் செய்ய நினைக்கிறானோ அதைச் செய்யக் கூடும்; ஆனால் தான் எதை விரும்புகிறான் என்பதைத் திட்டமிட்டுக் கூறத்தான் முடிவதில்லை' என்ற சோபனேரின் வாக்கு என் இளம்பிராயத்திலேயே என் மனத்தில் நன்றாகப் பதிந்து விட்டது. வாழ்க்கையின் கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவிக்க நேர்ந்த பொழுதும், காண நேர்ந்த பொழுதும் எனக்கு

அம்மொழிகள் ஆறுதல் அளித்தன. இந்த எண்ணம் பொறுமையின் பிறப்பிடமாக இருந்து வருகிறது. ஏனெனில் இது நம்மைப் பற்றியோ பிறரைப் பற்றியோ பிரமாதமாக எண்ணத் தூண்டுவதில்லை. மேலும் இது ஹாஸ்ய ரசனையைத்தான் வளர்க்கிறது.

சதா சர்வகாலமும் மனித ஜன்மத்தின் அர்த்தத்தையும் மனித வாழ்வின் அவசியத்தையும் பற்றிய விசாரத்தில் இறங்குவது, காரியார்த்தமாகப் பார்க்கப் போனால், சர்வ முட்டாள்தனமாகத்தான் படுகிறது. இருந்தும் ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று சில லட்சியங்களை வைத்திருக்கிறான். அதன்படியே தன் அபிலாஷைகளையும் தன் தீர்ப்புகளையும் உருவாக்கிக் கொள்கிறான். நன்மை, அழகு, சத்தியம் முதலிய லட்சியங்கள்தான் என்முன் என்றைக்கும் பிரகாசித்துக் கொண்டு என் வாழ்க்கையை இன்பமயமாக்குகின்றன. வசதியான வாழ்க்கையையும் சந்தோஷமான வாழ்வையும் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. இதை அடிப்படையாக கொண்டிருக்கும் திட்டம் ஆடு மாடுகளுக்குத்தான் பொருத்தமானது.

கலை, விஞ்ஞான ஆராய்ச்சி முதலிய சாதனைகளில் ஈடுபட்டிருக்கும் மனப் போக்கு உடையவர்களுடன் சேர்ந்து பழகும் எண்ணம் இல்லாமலிருந்திருந்தால் என் வாழ்க்கை சூன்யமாகியிருக்கும். என்னுடைய குழந்தைப் பிராயத்திலிருந்தே, மனித அபிலாஷைகளுக்கு விதிக்கப்படும் சாதாரண கட்டுப்பாடுகளையும் நான் வெறுத்தே வந்திருக்கிறேன். பொருள்களைச் சேகரிப்பது, உலகத்தோர் மதிக்கும் கீர்த்தி, விளம்பரம், டாம்பீக வாழ்க்கை முதலியன எனக்குப்பிடிப்பதே இல்லை. சாதாரண, படாடோபமற்ற வாழ்க்கைதான் உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்ததாயிருக்கிறது என்று நினைக்கிறேன்.

சமூக ஞாயத்திலும் சமூகப் பொறுப்பிலும் எனக்கு உள்ள தீவிரமான ஆர்வம், ஆண் பெண்களுடன் நேரடியாகப் பழகும் விருப்பமற்ற என் நிலைக்கு நேருக்கு மாறாகவே இருந்து வந்திருக்கிறது. நான் தனி நுகத்தடியில் பூட்ட வேண்டிய குதிரை; கூட்டத்தோடு சேர்ந்து வேலை செய்ய லாயக்கற்றவன். நான் எந்த நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் என் நண்பர் குழாத்துக்கும் என் குடும்பத்துக்குக் கூட உரியவன் என்று நான் மனப்பூர்வமாக நினைத்தது கிடையாது. மேற்சொன்னவற்றுடன் சேர்ந்திருப்பது ஒரு பிரிவு உணர்ச்சியையும் உண்டு பண்ணுகிறது. நான் என்னுடனேயே இருக்கவேண்டும் என்கிற விருப்பம் காலத்தோடு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்தத் தனிமையான வாழ்க்கை சிலசமயங்களில் கசப்பாக இருக்கும். ஆனால் பிறமனிதர்களுடைய சகிப்புத் தன்மையிலிருந்தும் விட்டுக் கொடுக்கும் சுபாவத்திலிருந்தும் விடுபட்டிருப்பதைப் பற்றி நான் கவலைப் படுவதில்லை. தனி வாழ்க்கையில் நான் சிலவற்றை இழக்கிறேன். ஆனால் நிச்சயமாக பிறருடைய பழக்க வழக்கங்கள்,

அபிப்பிராயங்கள், விருப்பு வெறுப்புகள் முதலியவற்றினால் பாதிக்கப்படாமல் நான் சுதந்திரத்தோடு வாழமுடிவதால் நான் அந்தக் குறைக்குத் தக்க ஈடு பெறுகிறேன். மேலும் அடிக்கடி மாறுகின்ற அந்த விஷயங்களில் என் மன அமைதியைச் செலவழிக்க விரும்பவும் இல்லை.

என்னுடைய அரசியல் லட்சியம் ஜனநாயகம்தான். ஒவ்வொருவரும் மதிக்கப்பட வேண்டும். ஆனால் ஒருவரையாவது நாம் கடவுளாக ஆக்கிக் கோயில் கட்டிப் போற்றக் கூடாது. வேண்டப்படாத, தகுதியற்ற, புகழையும் பெருமதிப்பையும் எனக்குக் கொடுக்கிறார்கள். இதுவே வாழ்க்கையின் விநோதம் போலும்! மற்றவர்கள் இப்படிப் போற்றுவது, என்னுடைய அற்ப சக்தியைக் கொண்டு நான் கண்டு பிடித்துள்ள விஷயங்களைத் தாங்களும் கண்டுபிடிக்க வேண்டும் என்கிற தங்கள் நிறைவேறாத விருப்பங்களிலிருந்து தான் உண்டாகியிருக்கவேண்டும்.

என்னுடைய திட்ட வட்டமான நோக்கத்தைக் கைவரப்பெற ஒரு மனிதன் நன்றாக சிந்தனை செய்ய வேண்டும்; அதற்கான முழுப் பொறுப்பையும் சிரமேல் கொள்ள வேண்டும். தலைவனுக்குக் கீழ்ப் படிந்து நடக்கிறவர்களை விரட்டக் கூடாது. அவர்கள் தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதி அளிக்க வேண்டும். சமூகத்தில் உள்ள வகுப்புப் பிரிவினைகள் அத்தனையும் பொய். அதைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ச்சி செய்தோமானால் அந்தப் பிரிவினை அத்தனையும் பலாத்காரத்தைத் தான் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது தெரிய வரும். பலாத்கார ஆட்சி அழியும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனெனில் பலாத்காரம் ஒழுக்க ஹீனர்களைத் தன்பால் இழுக்கும். கொடுங்கோல் மன்னர்களுக்குப் பிறகு பதவிக்கு வந்தவர்கள் அயோக்கியர்கள்தான் என்பதை காலம் நமக்கு நிரூபித்திருக்கிறது.

இந்தக் காரணத்திற்காகவே ருஷ்யா, ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் நடக்கும் அரசாங்கத்தை நான் தீவிரமாக எதிர்த்து வந்திருக்கிறேன். ஐரோப்பிய நாடுகளில் நடக்கும் ஜனநாயகம் தூற்றப் படுவதற்குக் காரணம் அந்த ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவமல்ல; இத் தத்துவத்தை சிலர் தவறு என்று சொல்லுகிறார்கள்; ஆனால், இதற்குக் காரணம் நமது அரசியல் தலைவர்களின் தடுமாற்றமும் கட்சிப் பித்தும்தான்.

நம்முடைய ஓய்வொழிச்சல் இல்லாத வாழ்க்கையில் நாம் மதிப்பிடக் கூடிய விஷயம் நமது தேசமல்ல. ஆனால் ஆக்க சக்தி நிரம்பியவர்களும் விஷயங்களைக் கிரகிக்கிறவர்களும்தான் நம் மதிப்புக்குரியவர்கள். அவர்களே கண்ணியமான, மேன்மை தங்கிய, பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அதே சமயத்தில் சாதாரண மனிதக் கூட்டம் ஒருவித எண்ணச் சுழற்சியுமில்லாமல் உணர்ச்சியற்று இருக்கிறது. மனித மந்தையின் உள்ளத்திலே உதிக்கின்ற கீழ்த்தரமான எண்ணத்தைப் பற்றி எண்ணத் தூண்டுகிறது. ராணுவ அணிவகுப்பில் பாட்டுக்கு ஏற்ப அடி எடுத்து

வைத்து நடக்கும் மனிதன் என்னுடைய உதாசீனத்துக்கு ஆளாகிறான். அவன் தவறுதலாக அந்த அறிவைப் பெற்றவன். ஆகவே, அவனுக்கு முதுகெலும்பே அவசியத்திற்கும் மேற்பட்ட ஒன்றாகிறது. பிறரைப் பணியவைப்பதில் உள்ள வீரமும், அர்த்தமற்ற பலாத்காரமும் தேசபக்தி என்று படாடோபப் படுத்துவதை நான் எவ்வளவு வெறுக்கிறேன், தெரியுமா! யுத்தமென்பது வெறுக்கத்தக்க ஒரு கீழ்த்தரமான விஷயம். என்னைத் துண்டு துண்டாக வெட்டினாலும் இந்த யுத்தத்தில் பங்கெடுத்துக்கொள்ள மாட்டேன்.

மனித வர்க்கத்தின் மீதுள்ள அப்படிப்பட்ட கறையை தாமதமில்லாமல் துப்புரவாகத் துடைத்து அகற்ற வேண்டும். நாட்டைப் பற்றிய அறிவு, பத்திரிகை வாயிலாகவும் கட்சிகளின் மூலமாகவும் வியாபார ஆசையினாலும் அரசியல் காரணங்களுக்காகவும் களங்கப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது இல்லாவிட்டால் நெடு நாட்களுக்கு முன்னமேயே அந்தக் கறை அகற்றப்பட்டிருக்கும் என்று நான் திண்ணமாக எண்ணுகிறேன்.

சூக்ஷ்ம சக்தியை அனுபவிப்பதில்தான் உண்மையான அழகைக் காண்கிறோம். யாரிடத்தில் இந்த உணர்ச்சி வேகம் இல்லையோ, இதைக்கண்டவுடன் ஆச்சரியத்தினால் மூக்கின் மேல் விரல் வைத்து ரஸிக்க வில்லையோ அவன் இருந்தும் இறந்தவனே; அவன் கண்கள் மூடியிருக்கின்றன. இந்த வாழ்க்கையின் அற்புதத்தை உணராத மனிதனின் உள்ளத்தில், பயமும் சேர்ந்துவிடவே அவன் கடவுள், மதம் என்றெல்லாம் உண்டாக்கி விட்டான். நம்முடைய மங்கிய அறிவைக் கொண்டு நாம் காணும் உலகத் தோற்றமே வளர்ச்சி பெறாத ஆரம்ப ஸ்திதியில்தான் இருக்கிறது. இந்த அழகைப் பிரமாதம் என்று நாம் ரசிக்கிறோம். ஆனால் மனித அறிவுக்கு எட்டாத அதிஅற்புத சக்தியை பகுத்தறிய செய்யும் முயற்சி தான் உண்மையான சமயநெறி. இந்த அர்த்தத்தில்தான் நான் பக்தி வாய்ந்த சமய நெறியுடையவனாகிறேன்.

தம்முடைய படைப்பாகிய மக்களைத் தண்டிப்பவரும் போற்றிப் பரிசளிப்பவரும் ஆன கடவுளை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. கடவுள் என்பவர் சுருங்கச் சொன்னால் மனிதனுடைய தடுமாற்றத்தின் பிரதிபிம்பம். மனிதனுடைய உடல் அழிந்தவுடன் அவனுடைய ஆன்மா நிலைத்திருக்கிறது என்பதை நான் நம்பவில்லை. சிலர் பயத்தினாலோ அல்லது, தான் என்கிற அகங்காரத்தினாலோ அவ்வாறு எண்ணுகிறார்கள். மனித வாழ்வின் சூக்ஷ்ம சக்தி யுகம் யுகமாக இந்த அற்புதப் பிரபஞ்சத்தின் அமைப்பில் பிரதிபலிக்க பாடுபடுவதைப் பற்றிச் சிந்திப்பதே என் வேலை.

பின் குறிப்பு

சில நாட்களுக்குப் பிறகு, இப்போது, மேற்கண்டவரிகளை மீண்டும் படிக்கும்பொழுது எனக்கு இரண்டு நேர்மாறான எண்ணங்கள் தோன்றுகின்றன. நான் என்ன எழுதியிருந்தேனோ அது சாராம்சத்தில் எப்பொழுதும் உண்மையாகவே தோன்றுகிறது. இருந்தும்

நெடுங்காலத்துக்கு முன் எழுதியது போலவும் புதிதாகவுமிருக்கிறது. எப்படி இருக்கமுடியும்? உலகம் அவ்வளவா மாறிவிட்டது! அல்லது நான் வயது முதிர்ந்துவிட்டதனால் என் கண் பார்க்கும் பொருள்கள் யாவும் மாறுபாட்டோடு ஒளி குன்றித் தோன்றுகின்றனவோ? மனித வர்க்கத்தின் சரித்திரத்தில் இந்த வருஷங்கள் எம்மாத்திரம்? மனித வாழ்க்கையைத் தீர்மானிக்கும் அந்தச் சக்திகள் இந்த குறைந்த கால அளவில் நிரந்தரமாக இருந்தன என்று சொல்லக்கூடாதா?

இத்தனை வருஷங்களில் என் உடலில் ஏற்பட்டுள்ள மாறுதல் நான் வாழ்க்கையைப் பற்றிக் கொண்டுள்ள கருத்து மாறுபடும்படியாகச் செய்து விட்டதா? வாழ்க்கையில் எழும் பிரச்னைகளைத் தீர்க்கும் விதத்தில் இந்த மாறுதலை பகுத்து அறிய இத்தகைய விசாரங்கள் தேவைப்படாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இந்த விநோதமான மாறுதலின் காரணங்களை என்னுடைய புற வாழ்வின் சந்தர்ப்ப விசேஷங்களினால் நிர்ணயிக்க முடியாது என்பதை நான் அறிவேன். ஏனெனில் இந்த விஷயங்கள் என்னுடைய விஷயத்தில் பிரதானம் வகித்ததில்லை.

இல்லை; வேறு ஏதோ இருக்கிறது. இந்த இடைக்காலத்தில் மனிதவாழ்வின் நிரந்தரத் தன்மையில் உள்ள நம்பிக்கையும், மனித வாழ்வின் அடிப்படையும் அநேகமாக மறைந்து ஒளிந்துவிட்டன. மனிதனுடைய கலாசாரப் பிதிரார்ஜித சொத்து அழிக்கப் படுமோ என்கிற பயம்மட்டு மல்லாமல் மனிதன் எந்தக்காரணம் பற்றியும் காப்பாற்ற நினைக்கும் விஷயங்களின் மதிப்புக் கூட குறைந்திருக்கிறதையும் மனிதன் உணருகிறான்.

சுய உணர்வு உள்ள மனிதர்கள் எப்பொழுதுமே வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் என்றும், சாக்காட்டிலிருந்து தப்பிக்க எப்பொழுதும் செய்யும் முயற்சி என்றும் நினைக்கிறார்கள். இந்த அபாயங்களில் ஒரு பகுதி புற உலகில் தான் உண்டாகிறது. ஒருவன் மாடிப் படியிலிருந்து விழுந்து கழுத்தை முறித்துக் கொள்ளலாம்; வாழ்க்கையில், சம்பாதிக்கும் திறமையை இழந்தும் இருக்கலாம், தான் ஒன்றும் அறியாதவனாயிருந்தாலும் அவன் இன்று பாதிக்கப்படுகிறான். சமூக வாழ்வில் வாழ்வதென்றால் பல இன்னல்கள் இருக்கின்றன.

ஆனால் இந்த அபாயங்களெல்லாம் சந்தர்ப்ப வசத்தால் ஏற்படுகின்றவை மனித சமுதாயம் நிலைபெற்றிருப்பதைப் போல் தோன்றுகிறது. மனிதனின் விருப்பு வெறுப்புகளைக் கொண்டும் லட்சிய ஒழுக்கங்களைக் கொண்டும் சமுதாயத்தின் மதிப்பைக் கவனித்தால் சமுதாயம் எவ்வளவு அபூரணமானது என்பது தெரியும். ஆனால் மொத்தமாகப் பார்க்கும் போது அதில் பல்வேறு விபத்துக்கள் இருந்த போதிலும் மனிதன் சௌகரியமாக வாழ்கிறான். அதனுடைய காரியார்த்தமான குணங்களை நாம் திட்டவட்டமாக உணருகிறோம். மனிதகுல ஒழுக்க அளவுகோல்கள், அபிலாஷைகள், பிரத்தி

யக்ஷ உண்மை முதலியவற்றை நம்முடைய பாரம்பரிய சொத்தைப் போலவே கருதுகிறார்கள்.

இந்த உலக மகாயுத்தம் நம்முடைய பாதுகாப்பு உணர்ச்சியைத் தகர்த்தெறிந்துவிட்டது. வாழ்க்கையின் புனிதத்துவம் மறைந்து ஒழிந்துவிட்டது. தனி மனிதன் தன் இஷ்டம்போல் எதையும் செய்யமுடியாது. தான் விரும்பிய இடத்திற்குப் போக முடியாது. இந்த ஈன வாழ்வை அரசியல் கருவி என்று உயர்த்தி விட்டார்கள். யுத்தமென்பது புற உலக விஷயம்; மனித ஸ்மரணைக்கு அப்பாற்பட்டது; மனிதன் திட்டமிட்டு செய்யாதது என்று கருதுகிறார்கள்; மனிதனுடைய சாதாரண வாழ்வில் ஏற்படும் ஒரு தடங்கல் என்றும் கருதுகிறார்கள். ஆனாலும் மனிதகுல நோக்கங்களும் மதிப்பீடுகளும் அநேகமாக பாதிக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி வில்சனுடைய தூண்டுதலினால் கூடிய சர்வதேச மகாநாடுதான் மனித குலத்தை உய்விக்க எடுத்துக் கொள்ளப்பட்ட முதல்படி. பிறகு பாஸிஸ அரசாங்கங்கள் உடன்படிக்கைகளைத் தகர்த்தெறிந்ததும், மனித வர்க்கத்தின் மீதும் பல மற்ற நாடுகளின் மீதும் எடுத்துக் கொண்ட பலாத்கார நடவடிக்கைகளும் பின்தொடர்ந்தன. ஐக்கிய பாதுகாப்புத் திட்டம் அட்டை வீட்டைப் போல விழுந்து உரு மாறிப் போய்விட்டது. அந்த அழிவின் விளைவுகளை நாம் இன்று கூட அளவிட்டுவிட முடியாது. இவ் விளைவுகள் பாதிக்கப்பட்ட நாடுகளின் தலைவர்களுடைய கையாலாகாத்தனத்தின், பொறுப்பற்ற தன்மையின், எடுத்துக் காட்டுகளாகும். மேலும் அவைகண்மூடித்தனமான சுயநல ஜனநாயக ஆட்சியின் பலவீனத்தையும்காட்டுகின்றன. ஐரோப்பாவில் ரைன் நதிக்குக் கிழக்கேயுள்ள நாடுகளில் அறிவு இயக்கம் இடம் பெறவில்லை; ஜனசமுதாயம் பதவியிலிருக்கும் சில குண்டர்களின் கொடுங்கோலாட்சியில் அடங்கி இருக்கிறது. இளைஞர்கள் கட்டுப்பாடாகப் பரப்பும் பொய்யினால் களங்கப்படுத்தப்படுகிறார்கள். அரசியல் வாதிகளின் போலி வெற்றி உலகத்தவர் கண்களைக் கூசவைக்கிறது. தனி மனித சுதந்திரத்திற்காக நடக்கும் போராட்டங்களிலும் பெரிய தியாகங்களிலும் வெற்றி பெறுவதற்கு வேண்டிய சக்தியும் திறமையும் இந்தத் தலைமுறைக்கு இல்லை; சென்ற தலைமுறைக்கு இருந்தது எனக் கருதுகிறார்கள்.

தற்காலத்தில் பரவியுள்ள மனப்போக்கு மனிதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் பலவிதமாக மாற்றி விடுகிற போதிலும், தற்கால நிலைமை மனிதனுக்குக் கற்பனைக்கும் எட்டாத அல்லல்களைக் கொடுத்த போதிலும், மனிதன் மாறுவது மிகமிகக் கொஞ்சம் தான். சரித்திரத்தில் உள்ள சில பரிதாபகரமான பக்கங்கள் வருங்கால இளைஞர்களுக்கு அவர்களுடைய மூதாதையர்கள் செய்த முட்டாள்தனங்களைப் படம் பிடித்துக் காட்டும்.

*

ஐவான் க்ரிலாவ் என்ற ருஷ்ய எழுத்தாளன் 18-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிறந்தவன். இவனுடைய தந்தை ஒரு ராணுவ தளகர்த்தன். "ருஷ்ய மக்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் க்ரிலாவைப் படியுங்கள்" என்கிறார்கள் ருஷ்ய எழுத்தாளர்கள். இவனுடைய வாழ்நாளிலேயே இவனுக்குப் பெரும்புகழ் கிடைத்தது. ருஷ்யாவின் சக்கரவர்த்திகளும் சக்கரவர்த்தினியும் இவனுக்கு ராஜோபசாரம் செய்து வந்தார்கள். பிற்காலத்தில் இவன் அரண்மனையின் செல்வப் புதல்வனாகவே வாழ்ந்து வந்தான்.

ஆபாசமான உடை அணிந்து, கோரமாக இருப்பானும் க்ரிலாவ். க்ஷவரம்பண்ணி, குளித்து, சுத்தமான உடை அணிந்துவிட்டால் இவனை அடையாளம் கண்டு கொள்ளுவதே சிரமமாம்! இவனுடைய ஞாபகார்த்தச் சிலை லெனின் கிராடு நகரில் உள்ளது.

குட்டிக் கதைகள்

ஐவான் க்ரிலாவ்

உபதேசம் பிரமாதம்!

ஒரு குடியானவன் வீட்டில் ஒருநாள் ஒரு திருடன் புகுந்து, கைக்கு அகப்பட்டதை எல்லாம் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டான். இரவு படுக்கும்போது செல்வந்தனாகப்படுத்த குடியானவன், காலையில் விழித்து எழும்போது பிச்சைக்காரனாக எழுந்தான். ஆகவே, சிநேகிதர்களின் உதவியை நாடிப் போனான். ஒவ்வொருவரும் இந்த ஏழைப்பட்ட மனிதனுக்கு அழகு அழகான உபதேசங்கள் செய்யத் தலைப்பட்டார்கள்.

"ஐயோ! என் அப்பா பழம் பெருமைகளை இன்னும் டம்பமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறாய்? அதனால் என்ன பிரயோஜனம்?" என்றான் ஒருவன்.

மற்றொருவன், "இனிமேல் நீ உன் வீட்டின் வாசல் கதவோரம்தான் படுத்து உறங்கவேண்டும்" என்றான்.

மூன்றாமவன் ஒருவன், "எப்போதுமே நல்ல நாய் ஒன்று வீட்டில் இருக்கவேண்டியது அவசியம்" என்று கூறினான். மேலும், "என்னிடத்தில் இரண்டு நாய்க்குட்டிகள் இருக்கின்றன. வேண்டுமானால் அவற்றில் ஒன்றை உனக்கு இனாமாகக் கொடுக்கிறேன். வீணாக அதைத் தண்ணீரில் அமுக்கிக் கொல்லுவதைவிட உனக்குக் கொடுத்தாலும் பிரயோஜனம் உண்டல்லவா?" என்று சொன்னான்.

இத்தனை நண்பர்களிலும் ஒருவனாவது குடியானவனுக்கு உதவி செய்ய முன் வரட்டுமே!

அதுவும் போச்சு!

ஒருவன் தன்னுடைய மில்லில் உள்ள யந்திரங்களை ஓட்டுவதற்கு ஜல சக்தியைப் பயன்படுத்தி வந்தான். ஜலசக்தியைப் பெறுவதற்காக, ஒரு அணைக்கட்டு கட்டி, அதன்மூலம் ஜலத்தைத் தேக்கி வைத்திருந்தான். ஒரு நாள் அணைக்கட்டில், ஓரிடத்தில், இலேசாகக் கசிவு கொடுக்க ஆரம்பித்தது; இருக்க இருக்க, கீறல் பெரிதாகி தண்ணீர் ஏராளமாக வடிய ஆரம்பித்தது; வேகமாகவும் பாயத் தொடங்கியது. இதைப் பார்த்தவர்கள், மில்காரனிடம் வந்து, "ஐயா! உம்முடைய அணைக்கட்டில் தண்ணீர் உடைப்பெடுத்துக்கொண்டு ஓடத் தொடங்கியிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்தாகவேண்டும்" என்று சொன்னார்கள்.

மில்காரன் ஒரு சோம்பேறி. அதனால், கொட்டாவி விட்டுக்கொண்டே வந்தவர்களிடம், "பிரமாதம்! என்ன மோசம் போய்விட்டது! எனக்கு அவ்வளவு தண்ணீர் தேவையும் இல்லைதான். கொஞ்சம் குறைந்தால் குறைந்துவிட்டுப் போகிறது. மீதியுள்ள தண்ணீரே என் வாழ்நாளெல்லாம் சரியாய்ப் போகும்," என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டான்.

மில்காரன் சுகமாகப் படுத்து உறங்கினான். தண்ணீர் உடைப்பு மிகவும் பெரிதாகிக் கட்டுக்கடங்காமல் பாயத் தொடங்கியது. தண்ணீர் முன்பைவிட இப்போது குறைந்து விட்டதனால், மில்லில் உள்ள யந்திரங்கள் சரியாக வேலை செய்யவில்லை.

பிறகுதான் மில்காரனுக்கு உணர்வு தட்டியது. கூட்டிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். அணைக்கட்டைப் போய்ச் சுற்றிப் பார்த்தான். இனிமேல் தண்ணீர் பாய்வதைத் தடுப்பது எப்படி என்று அவனுக்குத் திகைப்பாகிவிட்டது. அப்படி அவன் திகைத்து நின்றுகொண்டிருக்கும்போது அவனுடைய கோழிகள் வந்து ஓடுகிற தண்ணீரைக் குடிக்கத் தொடங்கின. இதைப் பார்த்ததும் மில்காரனுக்குப் படுகோபம் வந்துவிட்டது.

"மிச்சம் உள்ள தண்ணீரும் கொஞ்ச நஞ்சம்தான். அதையும் குடித்துக் காலியாக்கப் பார்க்கிறீர்களா?" என்று கோபத்துடன் சொல்லிக்கொண்டு ஒரு தடியைக்கொண்டு அவற்றை எல்லாம் அடித்தான்.

கடைசியில் மில்காரனுக்கு மில்லும் போய்விட்டது; கோழிகளும் போய்விட்டன.

பணக்காரன்

ஒரு நகரத்தில் ஒரு பணக்காரன் வசித்துவந்தான். அவனிடத்தில் லக்ஷக்கணக்கான ரூபாய் இருந்த போதிலும் ஏழைகளுக்கு ஒரு தம்பிடி கூடக் கொடுக்கமாட்டான். அவனுடைய கஞ்சத்தனத்தைப்பற்றி எல்லோரும் கடிந்து பேசிக்கொள்ளுவார்கள்.

ஒரு நாள் அவன் ஊராரிடம் நல்ல பேர் எடுக்க வேண்டும் என்று நினைத்து ஒவ்வொரு சனிக்கிழமை சாயங்காலமும் ஏழை ஜனங்களுக்கெல்லாம் விருந்து நடத்தப் போவதாகத் தெரிவித்தான்.

இந்த செய்தி ஊரெங்கும் பரவியது. பணக்காரனுடைய வீட்டு வாசலுக்குள் யாரும் நுழைந்தது செல்லத் தக்கவாறு, அது எப்போதும் திறந்து கிடந்தது. இதைப் பார்த்த அண்டை வீட்டார் "பாவம்! பயலுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது" என்று சொல்லிக் கொண்டனர் உண்மையில் இது பைத்தியக்காரத்தனமான அனுதாபமே! ஏனென்றால்......

விருந்து நடப்பதாகச் சொன்ன தினங்களில் எல்லாம் பணக்காரன் தன் வீட்டு வேட்டை நாய்களை அவிழ்த்து விட்டுவிட்டான். சாப்பாடு

கிடைக்கும் என்று நம்பி வந்த பிச்சைக்காரக் கூட்டம், இந்த வேட்டை நாய்களிடமிருந்து தப்பிப் பிழைத்தால் போதும் என்ருகி விட்டது.

ஆனல், இன்னும்கூட ஒவ்வொருவனும், பணக்காரன் தாராளஸ்தன் தான் என்றும், ஆனல் அவனுடைய நாய்கள்தான் அவன் செய்யும் தான தர்மங்களைக் கெடுக்கின்றன என்றும் பேசிக்கொள்ளுகிருன்.

ஏமாந்த எறும்பு

முன் ஒரு காலத்தில் ஒரு எறும்பு இருந்தது. அதற்கு அசாத்தியமான தேகபலம் உண்டு. இரண்டு சோள மணிகளை அது அனுயாசமாகத் தூக்கிவிடும் என்று ஒரு சரித்திர ஆசிரியரே சொல்லுகிருர். அதனுடைய அசுர பலத்தை உலகமெங்கும் புகழ்ந்தார்களாம். அந்த எறும்பு, பூச்சி புழுவைக் கண்டாலும்—ஏன், சிலந்திப் பூச்சியைக் கண்டாலும்கூட-அப்படியே கடித்துக் கொன்றுவிடும். அது வசித்துவந்த புற்றில் அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றியே எந்நேரமும் பேசிக்கொள்வார்கள். இதைக்கண்டு மனம் மகிழ்ந்த எறும்பு பட்டணங்களுக்கும் சென்று புகழ் தேட ஆசைப்பட்டது.

ஒரு நாள் ஒரு நகரத்திற்குச் செல்லும் வைக்கோல் வண்டியில் அந்த எறும்பு ஏறிக்கொண்டது. இந்த ராஜபவனியிலேயே எறும்பு சந்தைக்குப் போய்விட்டது. ஆனல், பாவம், எறும்பு மிகவும் ஏமாந்துபோய் விட்டது. சந்தையில் யாரும் எறும்பின் கெட்டிக்காரத்தனத்தைப் பார்க்க ஓடி வரவில்லை. எல்லோரும் இந்தத் துக்காணி எறும்பை ஏறிட்டுப் பார்க்காமல், தங்கள் தங்கள் காரியங்களையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

எறும்பு என்னவெல்லாமோ செய்து பார்த்தது. ஒரு இலையை எடுத்தது; அதை விரித்து அதிலிருந்து கீழே குதித்தது; பிறகு பழையபடியும் தரையிலிருந்து அந்த இலையில் குதித்தது. அப்போதும்கூட அதை ஏறிட்டுப் பார்ப்பார் யாரும் இல்லை.

கடைசியில் எறும்புக்கு சிரிப்பும் விரக்தியும் வந்துவிட்டது. உடனே அது பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்த நாயைப் பார்த்து மிகவும் மனக் கசப்புடன் பின்வருமாறு சொன்னது.

"நாயாரே, இது என்ன ஊர்! இந்த ஊர் ஜனங்களுக்குப் புத்தியே கிடையாது. ஒரு மணி நேரமாக நான் என் தேக பலத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தேன். என் திறமையை யாரும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. என்னை மெச்சவும் இல்லை. நான் இருக்கும் எறும்புப் புற்றில் என்னைப் பாராட்டாதவர்கள் கிடையாது."

எறும்பு ஏமாந்த சோணகிரியாய் தன் சொந்த ஊருக்குத் திரும்பியது.

மியூஸியம்* பார்த்தவன்

"நமஸ்காரம்! வாருங்கள்! எங்கிருந்து வருகிறீர்களோ?"

"மியூஸியத்துக்குப் போயிருந்தேன் மூன்று மணி நேரத்தை அங்கேயே கழித்தேன். என்னென்னவெல்லாம் அங்கே இருக்குமோ அவற்றை எல்லாம் பார்த்துவிட்டேன். ஆகா! எப்பேர்ப்பட்ட அபூர்வமான ஜீவராசிகள் எல்லாம் அங்கே இருந்தன, தெரியுமா? சின்னஞ்சிறு பூச்சிகள், புழுக்கள்! அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம்! பவழத்தைப் போல ஒன்று இருந்தால் மற்ருென்று மரகதத்தைப் போல இருக்கும். குண்டூசித் தலையைவிடச் சிறியதாக இருக்கும் பூச்சிகளைக் கூடப் பார்த்தேன்."

"மியூஸியத்தில் யானை பார்த்தீர்களோ?"

"யானையா? அங்கே யானை ஏது?"

* மியூஸியம்—காட்சிச்சாலை

"இதென்னய்யா ஆச்சரியம்! அங்கே மலையைப்போலப் பிரமாண்டமான யானை ஒன்று இருக்கிறதே!"

"அப்படியா? நான் பார்க்கவில்லை."

நட்பு!

இரண்டு நாய்கள் நன்ருகச் சாப்பிட்டு விட்டுவந்து வீட்டுக்கு வெளியே காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தன. இந்த இரண்டு சோம்பேறிகளும், மிகவும் அத்யந்தமான சிநேகிதர்கள் பேசிக்கொள்ளுவதைப்போல அவ்வளவு அன்போடும், உரிமையோடும் பேசிக்கொண்டிருந்தன. நாய்களின் சிரம ஜீவனம், எஜமானர்களின் குணுகுணங்கள், தாராள மனேபாவம் உள்ள சமையல்காரர்கள், அவர்களிலேயே உள்ள அற்பப் பயல்கள்—எல்லா சமாச்சாரங்களேப்பற்றியும் நாய்கள் பேசிக்கொண்டிருந்தன.

"ஆகா! நம்முடைய சிநேகிதமே சிநேகிதம்! சிநேகிதத்தைவிட உயர்ந்தது ஒன்று உண்டா? நாம் இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்து, ஒரே வாசலைக் காவல் காத்து, ஒரே இடத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேம். நமக்குள் சண்டை என்ருல், அது நன்ருக இருக்குமா? நாம் என்றென்றைக்கும் இப்படியே நெருங்கிய நண்பர்களாக இருப்போம் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுவோம்! அவசியமான சந்தர்ப்பங்களில் பரஸ்பரம் உதவி செய்துகொண்டும், கிடைக்கிற லாபங்களைப் பங்கு போட்டுக் கொண்டும், சண்டை சச்சரவோ, பொருமை பொச்சரிப்போ இல்லாமலும், வாழ்க்கையை நடத்துவோம்!"

மேற்கண்டவாறு ஒரு நாய் கூறியது. மற்ருென்று உடனே பேச ஆரம்பித்தது.

"இப்படிப்பட்ட சிநேகிதத்தைக் காப்பாற்றுவதாக நான் சத்தியம் செய்து கொடுக்கிறேன். இனிமேல் சண்டையும் கிடையாது; சச்சரவும் கிடையாது. நாம் இருவரும் சகோதரர்கள்."

இந்த நேரம் பார்த்து சமையல்காரன் ஜன்னல் வழியாக வெளியே ஒரு எலும்புத் துண்டை விட்டெறிந்தான். உடனே 'பளீ'ரென்று நாய்கள் எலும்பை நோக்கிப் பாய்ந்தன. 'எலும்பு யாருக்குச் சொந்தம்?' என்ற விஷயத்தில் போட்டி வந்துவிட்டது. உடனே இரண்டும் ஒன்றைப் பார்த்து ஒன்று உறுமின; குரைத்தன; கடித்து உதறின.

நட்பும் சகோதரத்துவமும் மலை ஏறிவிட்டன!

தாராளஸ்தன்!

ஒரு குடியானவன் சந்தைக்குப் போய் ஒரு பசுவும், பால் கறப்பதற்காக ஒரு வாளியும் வாங்கிக்கொண்டு வந்தான். வரும்வழியில் ஒரு வழிப்பறித் திருடன் அவனை வந்து மறித்துக் கொண்டான். குடியானவனிடம் இருந்த சகல சாமான்களையும் பறித்துக்கொண்டான் திருடன். குடியானவன் பரிதாபகரமான நிலையில் திருடனைப் பார்த்துப் பின் வருமாறு கூறிஞன்:

"ஐயா! இந்த ஏழையிடம் கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள். இந்தப் பசுவை வாங்குவதற்கு, நான் காலமெல்லாம் உழைத்து, அரும்பாடுபட்டு பணத்தை மிச்சம் பிடித்தேன். அந்தப் பணத்தைக்கொண்டு வாங்கிய இந்தப் பசுவை நீங்கள் அபகரித்துக்கொண்டீர்கள்"

உடனே திருடன் பதிலுக்குக் கீழ்க்கண்டபடி சொன்ஞன்:

"ஓய்! என்னைக் கல் நெஞ்சக்காரன் என்று நினைத்துக்கொள்ளாதேயும். இதோ இந்த வாளியை உமக்குத் திருப்பித் தந்துவிடப் போகிறேன். இந்தப் பசுவை உடனே கொண்டு போய் விற்றுவிடப் போகிறேன். எனக்கு எதற்கு வாளி?"

நாயும் குதிரையும்

ஒரு பணக்காரன் வீட்டில் ஒரு நாயும் ஒரு குதிரையும் வெகுகாலமாக ஊழியம் புரிந்து வந்தன. ஒருநாள் இந்த இரண்டுக்கும் வாக்கு வாதம் வந்துவிட்டது. இருவரிலும் யார் அதிக ஊழியம் புரிந்திருக்கிறுர்கள், என்ற விஷயத்தில்தான் வாக்குவாதம்!

நாய் சொன்னது:

"அடச் சீ! சும்மா இரு! நான் நினைத்தால் உன்னை வீட்டைவிட்டே துரத்த முடியும். தெரியுமா? நீ ஏதோ வேலை செய்கிறுய் என்பது வாஸ்தவம் தான். உழுவதற்கும், வண்டி இழுப்ப தற்கும் போகிறுய். அவ்வளவுதானே. அதில் பீற்றிக்கொள்ள என்ன இருக் கிறது? என்னைப் பார், நான் செய் யும் வேலைகளைப்போல உன்னுல் செய்ய முடியுமா? என்னேடு உன்னை ஒப்பிடத்தான் முடியுமா? எனக்கு இர வும் பகலும் ஓய்வு ஒழிச்சல் கிடை யாது. பகல் முழுவதும் வயல்காட் டில் ஆடுமாடுகளுக்குக் காவல் காக் கிறேன். இரவிலோ வீட்டுக்காவல்."

குதிரை சொன்ன பதில்:

"நீ சொல்லுவது சரிதான். ஆனுல் நான் கலப்பை இழுத்து உழாவிட் டால், நீ காவல் காப்பதற்கு ஒரு வஸ்துவும் இராதே!"

விளக்குமாறு

ஒரு நாள் ஒரு குடிகாரன் குடிவெறி யில், ஒரு விளக்கு மாற்றை எடுத்து தன் எஜமானின் உடைகளைத் துடைத் துச் சுத்தம் செய்யத் தொடங்கினுன்.

எஜமானின் உடைகளைச் சுத்தம் செய்கிறேம் என்றநினைப்பில், விளக்கு மாற்றுக்கு அசாத்தியமாக கர் வம் பிறந்துவிட்டது. ஆகவே, தன்னுல் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அழுத்தமாக உடைகளைத் துடைத்துச் சுத்தம் செய்ய ஆரம்பித்தது.

விளக்குமாறோ ஒரே அழுக்குக் களஞ்சியம். அதன்மேல் எல்லாம் ஒரே தூசி துப்பட்டை. அதனுல் அது அழுத்தித் தேய்க்கத் தேய்க்க துணிகள் ஆபாசமாகப் போய்விட்டன.

யானையின் ராஜாங்கம்

ஒரு காலத்தில் ஒரு யானையை மிருகங்களுக்கெல்லாம் ராஜாவாக நியமித்தார்கள். யானை மகா புத்தி சாலி என்று எல்லா மிருகங்களும் நினைத்துவிட்டன. ஆனுல்......

ஒரு நாள் செம்மறியாடுகள் பயந் தடித்துக் கொண்டு யானையின் சமூ கத்துக்கு ஓடிவந்தன. ஓநாய்களின் உபத்திரவம் தாங்க முடியவில்லை என்றும், அவை தங்கள் மேல் தோலை உரிப்பதாகவும் தெரிவித்து, அபாயத் திலிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் விண்ணப்பித்துக் கொண்டன.

உடனே, யானை ஓநாய்களைக் கூப்பிடவிட்டது. ஓநாய்கள் வந்தன.

"அயோக்கியப் பயல்களே! செம் மறியாட்டுத் தோலைக் களவாடுவதற்கு உங்களுக்கு அனுமதி கொடுத்தது யார்?" என்று பயங்கரமாக உறுமிக் கொண்டு கேட்டது யானை.

ஓநாய்கள் பேசத் தொடங்கின:

"மகாராஜா! விஷயம் இன்னது என்று முதலில் சொல்லுகிறேம். குளிர்காலம் வந்துவிட்டதால், எங்க லால் குளிர் தாங்க முடியவில்லை. அதனுல் உடம்பைப் போர்த்திக் கொள்ளுவதற்கு செம்மறியாட்டின் கம்பளி வேண்டியிருந்தது. தங்கள் கருணைகடாக்ஷத்தால், ஒவ்வொரு செம்மறியாட்டின் உடம்பிலிருந்து ஒரே ஒரு தோலை மட்டும்தான் உரித்துக் கொண்டோம். அப்படி யிருக்க இந்தச் செம்மறியாடுகள் இப்படி எங்களைப் பழிதூற்று கின்றன!"

யானை தீர்ப்புச் சொன்னது:

"பேஷ்! அது சரி! ஆனுல் ஒரு விஷயம், நான் நீதிக்குப் புறம்பாக

88893
M211,N36:L
N49.16.1
சென்னை 600 008.

நடப்பவனல்ல. அதனால் உங்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்: நீங்கள் ஒவ்வொரு செம்மறியாட்டின் உடம்பிலிருந்தும் ஒரு தோலைத்தான் உரித்துக் கொள்ளலாம். ஒரு தோலுக்குமேல் உரிக்கவே கூடாது.''

வியாபார யோக்கியதைகள்

ஒரு வியாபாரி தன் மருமகனை அழைத்தான்.

"ஐவான்! இங்கே சீக்கிரம் வா. உனக்கு ஒரு அருமையான சமாச்சாரத்தைச் சொல்லப் போகிறேன். கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் ஒரு சரக்கை விற்றேன். என்னுடைய வழியைப் பின்பற்றினால் நீயும் வெகு சீக்கிரத்தில் பணக்காரனாகி விடலாம்.

"நம்முடைய இருப்பில் இருந்த போலந்துத் துணி உனக்குத் தெரியும் அல்லவா? அது ரொம்ப நாளாக நம்மிடம் கிடந்தது. அவ்வளவும் நனைந்து, கட்டுக்கிடையாகி, கெட்டுப் போய் விட்டது. அதை எல்லாம் அருமையான புதுச் சரக்கென்று சொல்லி, அதிக விலைக்கு விற்றுவிட்டேன். இதோ பார் நூறு ரூபிள் நோட்டு. சரியான முட்டாள் வந்து அகப்பட்டான்!''

வியாபாரி பேசி முடித்ததும், மருமகன் சொன்னதாவது:

"மாமா! இப்போது யார் முட்டாள் என்பது சந்தேகத்துக்கு இடமாகிவிட்டது. நீங்கள் சரக்கை விற்று, வாங்கிய இந்த நோட்டு கள்ள கோட்டாச்சே! இது எதற்கு ஆகும்?''

※

புரட்சிச் சித்திரம்

ஒரு சித்திரக்காரர் ஊருகுளத்தில் காந்திஜியிடம் கொட்டாங்கச்சி ஒன்றைப் பரிசளித்தார். அதில் தேசத்தலைவர்களின் படங்கள் வரையப்பட்டிருந்தன. அதைக் கண்ட காந்திஜி "இது யார், சரோஜினி தேவியா?'' என்றார்.

"ஆம்'' என்றார் சித்திரக்காரர்.

"அப்படியா? இப்படி அவளை நான் பார்த்ததே இல்லையே,'' என்றார். பிறகு இன்னொரு படத்தைக் காட்டி. "இது யார்?'' என்றார்.

"திலகர்'' என்றார் சித்திரக்காரர்.

"நீர் ஒரு புரட்சிக்காரர். யாராவது ஒரு வக்கீலைப் பிடித்து உம் மீது வழக்குத் தொடரவேண்டியதுதான்!'' என்றார் காந்திஜி.

நம் கையில் தான்

தன்னுடைய சம்மதம் இல்லாமல் எந்த மனிதனும் கௌரவத்தையும், சுயமரியாதையையும் இழப்பது கிடையாது. நம்முடைய கௌரவத்தையும் சுயமரியாதையையும் (நம்மைத் தவிர) மற்றவர்களால் காப்பாற்ற முடியாது.

—மகாத்மா காந்தி

அங்கு கேட்பது

சுவர்க்க வாசலில் உன்னுடைய ஜாதி, மதம், சொத்து முதலியவற்றைப்பற்றிக் கேட்கமாட்டார்கள். பூமியில் நீ என்ன செய்தாய் என்பதையே கேட்பார்கள்.

—அரேபியப் பழமொழி

'சுந்தரத் தெலுங்கு' என்று போற்றப்படும் தெலுங்கு மொழியின் வரலாற்றையும் வளர்ச்சியையும் கூறுகிறது கட்டுரை. கட்டுரையாளர் திரிவேணி என்னும் சிறந்த ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர். சென்னை அ. இ. ரேடியோவில் ஒலிபரப்பப்பட்ட ஆங்கிலக் கட்டுரை நிலையத்தாரின் அனுமதியுடன் இங்கே சுருக்கித் தமிழாக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு இலக்கியம்

○

கே. ராமகோடீஸ்வர ராவ்

கோதாவரி நதிக்கரையில் கீழ்த் திசை சாளுக்கிய மன்னனான ராஜராஜன் (அல்லது ராஜ மஹேந்திரன்) காலத்தில் தெலுங்கு மொழியின் ஆதி காவியம் அரங்கேற்றப்பட்டது. ஆந்திர மகா பாரதம் என்ற அந்நூலை நன்னயப் பட்டாரகா என்பவன் எழுதினான். இது நடந்து ஆயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. சந்தர்ப்பவசமாக தற்காலத் தெலுங்கு இலக்கியம் அதே இடத்தில் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வீரேசலிங்கம், லக்ஷ்மிநாராயண சிம்ஹம், வாசுராய கவி முதலியவர்களால் ஆரம்பிக்கப் பெற்றது. அன்று ராஜ மஹேந்திரபுரியில் அவர்கள் ஏற்றிவைத்த திருவிளக்கு இன்றும் ஆந்திர தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒளிசெய்கிறது.

இந்தச் சகாப்தம் கெல்லூர் வேதம் வெங்கடராய சாஸ்திரி, இரட்டைப் புலவர்களான மசூலிப் பட்டணம் வேங்கட சாஸ்திரி, திருப்பதி சாஸ்திரி, விஜய நகரம் குரஜாடா அப்பாராவ் முதலிய பெருந் தலைகளைப் பிறப்பித்தது. இவர்களே புதிய சகாப்தத்தின் முன்னோடிகள். வீரேசலிங்கமே தற்காலத் தெலுங்கு வசனத்துக்கு மெருகு ஊட்டினார். அந்த வசனத்தில் நவீனங்களையும் விமர்சனங்களையும், வாழ்க்கை வரலாறுகளையும் எழுதினார். சிலகமார்த்தி லக்ஷ்மிநரசிம்மன், கோமராஜு லக்ஷ்மணராவ், சிலுக்குரி வீரபத்திரராவ், உன்னவே லக்ஷ்மிநாராயணா, மல்லம்பள்ளி சோமசேகர சர்மா முதலியவர்களுக்கும் வீரேசலிங்கமே பாதை வகுத்துக் கொடுத்தார். காலம் சென்ற பஸவராஜு அப்பாராவ், நந்தூரி சுப்பாராவ், ஆதிவி பாபிராஜு முதலிய தற்காலக் கவிஞர்களுக்கு குரஜாடா அப்பாராவே வழிகாட்டி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலக்கியம் அடைந்து வந்த க்ஷீணதசையிலிருந்து தெலுங்குக் கவிதையைக் காப்பாற்றியவர் திருப்பதி வெங்கட கவி; கவிதா தேவியை பிரபுக்

களின் சபையிலிருந்தும் பண்டிதக் குழாத்திலிருந்தும் விடுவித்து, விழிப்படைந்த ஆந்திர மக்களிடம் ஒப்படைத்தார். அதன் மூலம் ராயப்புரோலு அப்பாராவ், டி. வி. கிருஷ்ண சாஸ்திரி, விஸ்வநாத சததியநாராயணு, பிங்கலி லக்ஷ்மி காந்தம், கத்தூரி வேங்கடேசராவ் முதலிய கவிஞர்களின் கவிதா வர்ஷத்துக்கு வழி கோரினார்கள். இவர்களில் லக்ஷ்மிகாந்தமும் வேங்கடேசராவும் தமது குருமார்களைப் போலவே ஒத்த மனம் படைத்த இரட்டைப் புலவர்கள்.

1905-ம் வருஷத்து தேசிய இயக்கத்தையும் அதை ஒட்டிய பங்கிம் சந்திரர், ரவீந்திர நாதர் முதலியோர் கிருஷ்டிகளில் உள்ள வங்கமொழி செலவாக்கையும் தெலுங்கர்களே தென்னிந்தியாவின் மற்ற எல்லோரையும் விட அதிகமாக உணர்ந்தார்கள். வீரேசலிங்கத்தின் இளம் பரம்பரை பதினேழு பத்தொன்பதாம் நூற்றுண்டுகளுக்கு இடைப்பட்ட ஆங்கில இலக்கிய மோஸ்தரில் வளர்ந்து வரும்போதும், கற்பனைக்கு சமஸ்கிருத காவியங்களை நாடி வந்த போதும் ராயப்புரோலு அப்பாராவின் பரம்பரை 19, 20 நூற்றுண்டின் முற்பகுதிக்காலம் இவற்றின் இடைப்பட்ட ஐரோப்பிய இலக்கியத்தாலும், வங்காள ஆசிரியர்களின் சிறந்த சாதனையாலும் கவரப் பெற்றது. ஸ்ரீரங்கம் சீனிவாசராவ், ருக்மிணி நாத நாஸ்திரி முதலிய இளம் பரம்பரை ஆசிரியர்கள் ருஷ்யாவின் யுத்தப் பிற்கால இலக்கியத்தாலும், எதார்த்தக் கற்பனை (Surrealism) இலக்கிய மரபிலும், தன்வயக்கற்பனை (Impressionism) யிலும் ஈடுபட்டார்கள். ஆனால் இந்தப் பரம்பரையின் சகல எழுத்தாளர்களும் சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் பாண்டித்யம் பெற்றிருந்தார்கள்.

மகாயுத்தத்தின்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் 1912-32 இடைப்பட்ட காலத்தில் நல்ல இலக்கியங்களைச் சிருஷ்டித்தார்கள். இந்த இருபது வருஷ காலமும் மகத்தானது; இங்லாந்தில் எலிசபெத் காலத்திலும், ஏதென்ஸில் பெரீக்லெஸின் காலத்திலும், இந்தியாவில் போஜன், கிருஷ்ணதேவராயர் காலத்திலும் நிகழ்ந்த இலக்கிய மறுமலர்ச்சியோடு இந்தக் காலமும் ஒப்பிடத்தக்கது. இந்த அபிப்பிராயத்தையும் பல்வேறு துறை இலக்கிய சாதனைகளின் மூலம் (தனிப் பாடல், கற்பனைப் பாடல், நாவல், சிறுகதை, நாடகம், முதலியன) நான் வலியுறுத்த முடியும். இவையெல்லாம் மற்ற இந்திய மொழிகளைப் போலவே தெலுங்கிலும் சமீப காலத்திய வளர்ச்சி நிலைகளே. தன்வயமான கவிதைகளை உணர்வதற்கு பௌராணிக பக்தர்களின் தெய்விகப் பாடல்களும், ஜாதகமாலைகளுமே பயன்படும். சமஸ்கிருதம் அல்லது வேறு எந்த இந்திய மொழிக்கவிதை மரபிலும் உள்ள வாசகனின் ஈடுபாட்டை இக்கவிஞரின் சுவானுபூதி குலைப்பதில்லை. தன்னைச் சுற்றித் திரியும் சிந்தனைகளை, உணர்ச்சிகளை உணர்ந்து, அதனால் தன்னுள் நிகழும் இன்ப துன்பங்களை வெளியிடுவதே தற்கால இலக்கியத்தின் புதிய வழியாகும்.

மானுடக் காதலின் பரிபூரணத் துவத்தை, அந்த மானுடக் காதல் காதற் கோயிலுக்கு தன்னந் தனியே வழிம்தடித் திரிவதை விவரிப்பதே இன்றைய கவிஞர்க ளின் ஆரம்ப பாடமாக இருந்து வந் தது. அவர்களுக்குபெண்என்பவள் ஒரு தெய்வப்பிறவி. அவர்களுக்கு அவள் ஒரு மின்னல் கீற்று; பனி படிந்த உஷாக் காலம்; வெள்ளலைக் கரங்களில் துள்ளும் வெண் ணுரை. காதற் பொருளை லட்சியமாகக் கொண்டு, சதைக் கோளத்தின் இனக்கவர்ச்சியைவிட ஆத்மார்த்த உள்ளோட்டங்களைக் கூறும் விவ ரணப் பாணியின் மூலம், அவர்கள் தெலுங்கு இலக்கியத்தை மேம் படுத்தினார்கள்.

ராயப்புரோலு சுப்பாராவ் இந்த வகை எழுத்தாளர்களுக்கு தலைவ ராக விளங்கினார். எனினும் சாஹித்ய சமிதியின் ஸ்தாபகரான சிவசங்கர சாஸ்திரிதான் இவரை யும் இன்னும் பலரையும் இம்மாதிரி யான இலக்கியமரயில் இழுத்து விட்டவர் என்று சொல்ல வேண் டும். நாலைந்து மொழிகளில் பாண் டித்தியம் பெற்றிருந்தாலும், தற்கால ஆங்கில இலக்கியங்களை யும், தற்கால இந்திய இலக்கியங் களையும் வரன் முறையோடு கற் றிருந்ததாலும்,இவரே இந்த எழுத் தாளர்களுக் கெல்லாம் மூத்தவராக விளங்கினார். இலக்கியத்தைத் தாய் மொழியான தெலுங்கிலேதான் எழுத வேண்டும் என்ற இயக் கத்தை ஆரம்பித்தவர் கிடுகு ராமமூர்த்தி பந்துலுதான். இயக் கத்தை வெற்றிபெறச் செய்ததில் சாஹித்ய சமிதிக்குப் பங்கு உண்டு. இந்தக் கால் நூற்றாண்டுக் காலத்தில்—இரண்டாவது உலக யுத்தம் வரை—முன்னேறி வந்த தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு சாஹித்ய சமிதும், அதன் அன்பர்களும், அடியார்களுமே பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களை வாழ்க்கையினின்று தப்பிவிட எண்ணுபவர்களாக (Escapists)க் கருதிவிடக் கூடாது.

செய்யுள் எழுதத் தெரிந்தவர் கள் இருந்துங்கூட, அவர்கள் சாகித் யம் எழுத விரும்பினார்கள். இன்று நடந்ததுபோல் இருந்தாலும்—சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு பஸவராஜு அப்பாராவும், நந்துனி சுப்பாராவும்—இருவரும் சென்னை சட்டக் கல்லூரியிலும் ராஜதானிக் கல்லூரியிலும் படித்து வந்தார்கள். அவர்களுக்கு குர்ஜடா அப்பாராவின் பாடல்கள் மீது அபார மோகம். அவற்றை உணர்ச்சி பூர்வமாகப் பாடுவார்கள். தமது சகமாணவர்களுக்குப் பாடிக் காட்டி அவர்களை உணர்ச்சி வசப் படுத்துவார்கள். அப்பாராவ் 'ஒவ் வொருவரும் துன்பவயப்பட்டால் தான் இதயம் மெதுவாகும், இள கும்; தான் என்ற அகந்தையும் ஒழியும்' என்பார்.

அதிவி பாபிராஜு என்னும் எழுத்தாளர்—அவர் ஒரு சைத்திரி கர், கவிஞர், சாஹித்யகர்த்தா—பிற்காலத்தில் கதைகளும் நாவல் களும் எழுதியே பிரபலம் பெற்று விட்டார். அவரை ஆகர்ஷித்தது அப்பாராவல்ல; ஆனால் ராஜ மஹேந்திரபுரி அரசாங்கக் கல்லூரி யின் பிரின்ஸிபாலான ஆஸ்வால்டு கௌல்ட்விதான். இந்தப் பண்பாடு படைத்த ஆங்கிலேயரின் கூட்டுற வால், பாலராஜுகவி, கொண்டல

வெங்கட்டராவ், தாமேர்லா ராம ராவ் முதலியவர்கள் மேம்பட்டார்கள்.

மறுமலர்ச்சி யுகத்தை ஏற்படுத்தியவர்களில்விஸ்வநாதாவுக்கு பெரும் ஸ்தானம் உண்டு. அவர் சகல விதமான இலக்கியத்துறையிலும் பாடுபட்டுப் பார்த்திருக்கிறார். கவிதை, காதல் பாட்டு, நாடகம்,நாவல்,சிறுகதை, கட்டுரை முதலிய எல்லாவற்றிலும் பரிச்சயம் உண்டு. ஒவ்வொன்றிலும் திறமைசாலியாகவும் இலங்கினார். இப்போது ராமகதையை வைத்து ஒரு காவியம் இயற்றிக் கொண்டிருக்கிறார், அவர். அவருடைய அணிப் பொருள் போன்ற எழுத்திலும், செழுமையும் கொழுமையும் நிறைந்து விளங்குகிறது. பாலராஜுவும் சத்யநாராயணுவும் ஒருவரை யொருவர் எஞ்சி மிஞ்சாமல் செல்லுவதால், ஆந்திர சர்வகலா சாலை ஒரு பரிசை இருவருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டியதாயிற்று. சமீபகாலத்தில் இவர்கள் இருவரே சிறந்த நாவலாசிரியர்கள்.

இன்றைய தெலுங்கு இலக்கியத்தில், சிறு கதை அம்சம் குர்ஜாடா அப்பாராவிடமிருந்துதான் தோன்றுகிறது என்றாலும், சிந்தா தீக்ஷித்துவின் தலைமையில் எழுதும் பல்வேறு எழுத்தாளர்களும் நவீனச் சிறு கதையை வளர்த்தவர்கள் என்று சொல்ல வேண்டும். அவருடைய கதைகள் ஹாஸ்யத்திலும், ஆண் பெண் இதயப் பண்பை விளக்குவதிலும் கன்னட எழுத்தாளரான மாஸ்தி வேங்கடேஸ ஐயங்காரை ஒத்து நிற்கும். குடிபதி வெங்கடாசலம் பெண்களின் அடிமைத்தனத்தைப் பற்றி எழுதுவார்; அவர் இலக்கியத்தைப் பச்சையாகச் சொல்ல வேண்டும் என்று விருப்புவர்; அதிலும் பாலுணர்ச்சி சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒளிவு மறைவு கூடாது என்பவர். சமயங்களில் அவர் யதார்த்த நிலையை வருணிப்பதை உண்மை வழியென்று கருதி தவறிப் போவதுண்டு.

ஓரங்க நாடகங்கள் எழுதுவதில் விஸ்வநாதக் கவிராஜுவும், ஜஸ்டிஸ் ராஜமன்னார், நார்லா வேங்கடேஸ்வரா முதலியவர்களும் முன்னணியில் நிற்கிறார்கள். எனினும் வெங்கடராய சாஸ்திரியின் “பிரதாபருத்ரயம்” போலவோ அப்பாராவின் “கனியா சுல்கம்” போலவோ நாடகம் வெளிவரவில்லை.

1933-ம் வருஷத்திலிருந்து தெலுங்கு இலக்கியத்தில் இடதுசாரிக் கருத்து நுழைந்திருக்கிறது. ஸ்ரீரங்கம் சீனிவாச ராவ் ராயப்புரோலு சுப்பாராவின் மூலம் இந்தப் புரட்சியைத் துவக்கி வைத்தார். வரப்போகும் சமுதாயம், வயலிலும் ஆலையிலும் உழைக்கும் தொழிலாளர்களின் சுகத்தைப் பொறுத்தது என்று சீனிவாச ராவ் கருதினார்.

தாஜ்மஹாலின் மனோகரத்தைப்பாராட்டுவதில் அர்த்தமில்லை; அதைக் கட்டி முடிக்கச் சிந்திய வியர்வையை, உழைப்பை எண்ணிப்பார் என்றார்கள். இந்த ஆகர்ஷம் இப்போது அதிகமாகியிருக்கிறது. இவர்கள் இப்படிப் பெருகிவர, மல்ல வரப்பு விஸ்வேஸ்வரராவ், கணபதி சாஸ்திரி முதலியவர்கள் கிருஷ்ண சாஸ்திரி

"இதோ... புதிய லக்ஸ் டாய்லட் சோப்!"
LUX
LUX TOILET SOAP
"மனதுக்கினிய புதிய பரிமளம்!"
"புதிய ரோஜாநிற காகிதத்தில் சுற்றப்பட்டது!"
LTS. 195-50 TM.
★ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

உங்கள் எதிர்காலத்தைப்பற்றி

உங்களுக்கு 1949ல் என்ன நடக்கும் ?

எதிர்காலத்தில் உங்களுக்கு என்ன நடக்கப்போகிறதென்றும், நீங்கள் என்ன காரியங்கள் செய்வீர்களென்றும் அறிய விரும்பினால் ஏதாவது உங்களுக்குப் பிரியமான புஷ்பத்தின் பெயரைக் கடுதாசியில் எழுதுங்கள். நீங்கள் எழுதும் தேதி, வேளை, விபரங்களையும் குறித்து உங்கள் சரியான விலாசத்தையும் உடனே எழுதியனுப்புங்கள்.

ஜோதிட சாஸ்திரப் பிரகாரம் நாம் கணித்து உங்கள் கார்டு எழுதப்பட்ட தேதியிலிருந்து 12 மாதங்கள் வரையில் உங்கள் அதிர்ஷ்டம் லாபநஷ்டங்கள் ஜீவிக்கும் வழி, எந்த வேலையில் உங்களுக்கு வெற்றிகிடைக்கும், உங்கள் உத்தியோகத்தில் உயர்வு, தாழ்வு முதலான மாறுபாடுகள், ஆரோக்கியம், வேறுதேசங்களுக்கு யாத்திரை, புண்ணிய தீர்த்த யாத்திரை, விவாகம், ஸ்திரீயினாலுண்டாகும் சௌக்கியம், சந்தானம், புதையல் முதலானவைகள் கிடைக்குமிடம், லாட்டரீ, எதிர்பாராத விதமாய் திரவியம் கிடைத்தல் இவைகளைப் பற்றி தெளிவாய் மாதப் பிரகாரம் எழுதி ரூ. 1—4—0 க்கு வி.பி. யில் அனுப்புவோம் (வி பி. சார்ஜ் வேறு) துஷ்ட கிரஹங்களுக்குச் செய்யவேண்டிய சாந்திமுதலானவைகளைக் குறிப்பிடுவோம். நாங்கள் விவரங்களுக்கு பொறுப்பாளிகள் நாங்கள் அனுப்பும் விவரங்கள் உங்களுக்குத் திருப்தியளிக்காவிடில் பணம் வாபஸ் செய்யப்படும். ஒருதடவை பரீட்சிக்கவும்.

பண்டிட் தேவதத்த சாஸ்திரி,

ராஜ் ஜோதிஷி. (S. K. I.)

கர்த்தார்பூர் (E. P.)

Pt. DEV DUTT SHASTRI Raj Jyotishi (S. K. I.) Kartarpur (E. P.)

யின் மரபிலேயேதான் எழுதி வருகிறார்கள்.

அறிவிலக்கியம் அதிகம் வளர்ந்து விட்டது. உண்மையில் சரித்திர நூல்கள் எழுதிய சோம சேகர சர்மாவுடன் கிருஷ்ணராஜூ வும் பாராட்டுக் குரியவர்கள். ஸ்ரீ பிரகாசத்தின்சுயசரித்திரம் உண்மை யில் சிறந்த இதய சரித்திரம். ஆந் திரப் பத்திரிகையாசிரியரில் சிறந்த வரான முத்தூரிகிருஷ்ணராவ் (ஆசி ரியர்: கிருஷ்ணபத்திரிகா) நிறைய தெலுங்கு வசனம் எழுதினர்.

தெலுங்கு இலக்கியம் வளர்ந்து வரும் இலக்கியம். தெலுங்கு மொழியோடு சமஸ்கிருதம் கலந் திருப்பது அதற்கு இனிமை தந்திருக்கிறது. இந்திய இலக் கியங்களின் சரித்திரத்தை எழுதும் காலம் வரும்போது தெலுங்குக் கும் அதில் ஸ்தானம் உண்டு. நன்னய்யாவின் காலந் தொட்டு வரும் இலக்கிய மரபு அறுந்து விடவில்லை. தெலுங்கின் உடன் பிறப்பு மாதிரி விளங்கி வருகிறது கன்னட இலக்கியம்.

✲

வெற்றி

பிஜோர்ண்ஸன் என்பவர் நோபல் பரிசு பெற்ற நார்வே நாட்டுக் கவிஞர். அவரிடம் ஒரு பத்திரிகை நிருபர் போய், “உங்கள் வாழ்க்கை யில் மயிர்க் கூச்செறியக் கூடியதாகவும், ஆனல் உங்களுக்கு வெற்றியாக வும் அமைந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுங்கள்” என்று கேட்டார்.

பிஜோர்ண்ஸன்: என் வீட்டை ஒருதடவை என் அரசியல் விரோதி கள் முற்றுகையிட்டு வீட்டு ஜன்னல்களை எல்லாம் உடைத்தெறிந்து விட் டார்கள். அப்போது ‘ஆம், எங்கள் நாட்டை நாங்கள் நேசிக்கிறோம்” என்ற பாட்டைப் பாடிக்கொண் டிருந்தார்கள். இந்தச் சம்பவமே எனக்கு வெற்றியாகவும், மயிர்க் கூச்செறியச் செய்யக்கூடியதுமாகவும் அமைந்த சம்பவம்.

நிருபர்: இப்படிப்பட்ட பயங்கரமான சம்பவம் உங்களுக்கு வெற்றியாக எப்படி இருக்க முடியும்?

பிஜோர்ண்: அவர்கள் பாடிக்கொண்டிருந்த பாட்டு, நான் எழுதியது.

—எங்ரியன் ஆண்டர்ஸன்

கடன் கொடுத்திருந்தால்......

(கடன் வாங்கியவன் அதனைத் தவணைப்படி தீர்க்க முடியாமல்) அவன் கஷ்டத்திலிருந்தால் (அவனுக்கு) வசதி ஏற்படும்வரையில் எதிர் பார்த்திருங்கள். மேலும் (இதிலுள்ள நன்மைகளை) நீங்கள் அறிந்தவர்க ளாக இருந்தால், (அதை அவனுக்கே) நீங்கள் தானம் செய்துவிடுவது (பிறருக்குத் தானம் செய்வதைவிட) உங்களுக்கு மிகவும் நன்மை (பயக்கும்.)

—குர் ஆன்

காகதாலியம்!

ஸெவில் ஹண்ட் என்பவர் எழுதிய ‘எனது ரத்தக் குழல்களில் மையோட்டம்’ என்ற புத்தகத்தின் விளம்பரத்துக்காக, பிரசுரகர்த்தர்கள் கார்டுகள் அச்சடித்தார்கள்.

அந்தக் கார்டுகளில் தபாலாபீஸ்காரர்கள் “ரத்த தானம் பண்ணுங் கள்” என்று முத்திரை குத்தினர்கள்.

—டெய்லி ஹெரால்ட்

குழந்தைகள் தனிராஜ்யம் நடத்துகின்றனர் என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். இது கனவல்ல; இன்றும் நடந்து வரும் ஒரு அதிசயம்! இதைப் படித்த பின்பும் நீங்கள் குழந்தைகளை "அறியாப் பசலைகள்' என்று சொல்ல முடியுமா?

குழந்தை நகர்

○

சி. ந. வைத்தீஸ்வரன்

மகாயுத்தம் நின்றுவிட்டது—ஆம்—பேச்சளவில் நின்றுவிட்டது. உலகப் பேரறிஞர் மகாநாடுகள் கூடுகின்றனர். ஆனால் இங்கு கூடுகின்றவர்கள் பழைய செல்லறித்த லட்சியங்களிலிருந்து தோன்றியவர்கள். இந்த நிலையில் பெரியவர்களுக்கு வழிகாட்டிகளாகப் பல துறைகளில் குழந்தை உலகம் முன்வருகிறது. சமூகம் அமைதி பெற வழிகாட்ட முன்வந்த முயற்சியே குழந்தை நகர். நேச தேசப் படைகள் ரோமா புரியை 1944 ஆகஸ்ட் மாதத்தில் தாக்கியது. நொந்துபோன இத்தாலியப் படை பின்வாங்கிற்று. பொதுமக்கள் என்ன செய்வார்கள்? வருகின்ற படையை வரவேற்றனர். சண்டை ஒழியும், பஞ்சம் நீங்கும், நற்காலம் பிறக்கும் என்று வரவேற்றனர். தெருக்களில் எண்ணற்ற குழந்தைகள்; அநாதைகள்; வீடுவாசலற்றவர்கள்; தாய் தந்தையை இழந்தவர்கள்; உணவில்லாது வாடியவர்; கந்தை அணிந்தவர்; யுத்த வெறி இன்னும் தெளியாதவர்; எதையும் துவம்சம் செய்வதில் கங்கணம் கட்டிக்கொண்டவர்-முதலியோர் திரிந்தனர். உண்மையான சமாதானத்தையும் உலக முன்னேற்றத்தையும் வேண்டுவோரின் மனம் இந்த அகதிகளின்மேல் சென்றது. "இவர்களல்லவா வருங்கால சமுதாயம்? இவர்கள் சீர்ப்படாவிடில் மறுபடியும் மறுபடியும் அல்லவா யுத்த எரிமலை பொங்கிக் கொண்டிருக்கும்?" என்று எண்ணினர். அரசியலையும் அது சம்பந்தப்பட்ட மற்றதுறைகளையும் சீர்திருத்தம் செய்ய ஒரு சாரார் முன்வந்தனர். ஆனால் அதனினும் பயன்தரக் கூடிய இந்தப் பாழடைந்த மக்களைப் பண்படுத்துவதில் வேறு சிலர் இறங்கினர். அன்னாருடைய அனுபவங்களையே இக் கட்டுரை ஆராய்கிறது.

குண்டுகளின் தாக்குண்டு பல கட்டடங்கள் வீழ்கையில் பல குழந்தைகளை மண்ணோடு மண்ணாக்கியது. இந்தக் கொடுமையைவிட அநேக குழந்தைகளின் மனப்போக்குக்கு விளைத்த பேராபத்து பன்மடங்கென்றே கருத வேண்டும். குழந்தைகளின் அந்தரங்க உள்ளத்தை தகர்த்தெறிந்துவிட்டது. உடலைக் கேவலமாக்கியது, படபடப்பை அதிகரித்துவிட்டது. எங்கும் கண்ட கோரக் காட்சிகள் மக்கள் மேல் ஒரு பொறாமையும் சமுதாயத்தின்மேல் ஒரு வெறுப்பையும் உண்டாக்கிவிட்டது. அநேகர் "இந்தத் தறுதலைகளை என்ன சீர்திருத்த முடியும்?" என்று நையாண்டியும் செய்தனர். ஆனால் இந்தத் தொண்டில் இறங்கியவர் நம்பிக்கையைக் கைவிடவில்லை. விடாமுயற்சியும் தளரவில்லை.

இந்தக் குழந்தைகளை நேர்மையான வழிக்குக் கொண்டுவருவது எப்படி?

சமூகத்துக்கே விரோதமாக நடந்து கொள்ளும் இவர்களை எவ்வாறு சமூகத்தின்மேல் பற்று உண்டாக்குவது? எப்படி ஒவ்வொருவனையும் பொறுப்புள்ள பிரஜையாக்குவது? என்ற பிரச்னைகள் இவர்கள்முன் தோன்றின.

பத்து வயதிலிருந்து பதினேழு வயது வரையுள்ள பையன்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு கிராம வாழ்க்கையை அமைக்க ஆரம்பித்தனர். இந்தக் கிராமம் ஏதோ இளமையில் திருடடுத்தனம் செய்தவர்களுக்கென்று செங்கல்பட்டு போன்ற இடங்களில் அமைத்திருக்கின்றார்களே அதுபோன்ற ரிபர்மேட்டரி (Reformatary)கள் அல்ல. அல்லது யுத்த காலக் கைதிகளை அடைத்துவைக்கும் "கான்சென்ட்ரேஷன் கேம்பும்" (Concentration Camp) அல்ல. வெறும் அன்ன சத்திரமும் அல்ல. அல்லது சாதாரண சட்டதிட்டப்படி நடைபெறும் பள்ளிக்கூடமும் அல்ல.

இந்தப் பரிசோதனையை நடத்த முன் வந்தவர்கள் உள இயல் ஞானம் பெற்றவர்கள். குழந்தை உள்ளம் அறிந்தவர்கள். எல்லா சமுதாயத்திலும் முக்கிய ஸ்தானம் பெற வேண்டியது குழந்தை என்று அறிந்தவர்கள். இந்தக் குழந்தைகளுக்குள் பதிந்து கிடக்கும் பல உணர்ச்சிகள் மலர இடம் தர வேண்டும். அவ்வாறு தரும் பொழுது அவனவன் தன் உள்ளப் போக்கை அறிந்து கொள்ள முடிகிறது. அப்பொழுது அவனே தன் நடத்தைகளுக்குப் பொறுப்பாளி ஆகிறான். அதிலும் பலபேருடன் கூடி வாழும் பொழுது பிறர் நன்மையையும்தன் நன்மையோடு கலந்து சிந்தனை செய்து நடந்து கொள்கிறான். அப்பொழுது சமூகத்தில் ஒரு பயன்தரும் பங்காளி ஆகிறான். வெறும் புல்லுருவி அல்ல என்றெல்லாம் அறிந்தவர்கள்.

இந்தச் சிறு நகரின் அடிப்படையான லட்சியம் சுதந்திரம். உள்ளும் சுதந்திரம்; புறமும் சுதந்திரம். கட்டுப்பாடுகள் கிடையாது. வேலிகள் இல்லை. காம்பௌண்டுச் சுவர்கள் இல்லை. ஆனால் ஒப்பந்தப்படி அவரவர்களே அமைத்துக் கொண்ட உள இயல் கட்டுப்பாடுகள் மாத்திரம் உண்டு. பையன்கள் இந்த நகரில் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற சட்டமும் இல்லை. ஓடிப் போனவர்களை இழுத்துக் கொண்டு வந்து மொட்டை அடித்து மானத்தைக் கெடுப்பதும் இல்லை. அல்லது அவன் மறைவதை எளிதில் . எல்லோரும் கண்டு பிடிக்கும்படி இவனுக்கு வெள்ளைக் கால்சாராய் கொடுப்பதும் இல்லை. ஒருவகையான தண்டனையும் இல்லை. பன்னிரண்டு வயதில் அநேக குழந்தைகள் போக்கிரித்தனம் செய்கின்றனர். பணத்தைத் திருடிக் கொண்டு சொல்லாமல் ஓடிப் போகின்றனர். இன்னும் எத்தனையோ சமூகச் விரோதச் செயல்கள் செய்கின்றனர். இந்த பால்யக் குற்றவாளிகள் (Delinguent) தோன்றுவதற்கு அவர்களின் குடும்பத்தில் போதிய அன்பும் பெற்றோரிடம் ஒற்றுமையும் இல்லாததே ஒரு காரணம் என்பது உலகத்து உள இயலார் கண்ட உண்மை. இதற்காகவே இந்த நகரில் இக் குழந்தைகளைப் பாதுகாப்பவர் அன்பு ததும்பும் தம்பதிகள் இருவர். எல்லாப் பையன்களும் இருவரையும் மாமா மாமி என்று மொய்த்துக் கொள்வர். அவரவர் மனக் கஷ்டங்களுக்குப் புகலிடம் மாமியும் மாமனும் யுத்தம் பாழ்படுத்திய இக் குழந்தைகளின் உள்ளத்தை இத் தம்பதிகளின் அன்பு சீர்படுத்துகிறது. இக் குழந்தைகளிடம் ஓர் சுய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. தங்களுடைய வருங்கால வாழ்க்கையைத் தாங்களே திட்டப்படுத்திக் கொண்டு அதற்குத் தாங்களே பாடுபட முன் வருகின்றனர்.

நகர் அரசியல் எல்லாம் குழந்தைகளே பார்க்கின்றனர். ஒவ்வொரு

அங்கத்தினருக்கும் ஒரு வோட்டு உண்டு. அந்த வோட்டினுல் ஒவ்வொரு மாதமும் ஒரு மேயரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த வோட்டு இரகசிய வோட் முறைப்படியே நடைபெறுகிறது. (Secret ballot) மேயர் பதவிக்கு யார் வேண்டுமானுலும் நிற்கலாம். அதற்காக விளம்பரங்கள், சொற்பொழிவுகள், கையால் எழுதப்பட்ட பத்திரிகைகள் எல்லாம் நடைபெறுகின்றன. மேயரைத் தேர்ந்தெடுத்த பிறகு அவர் தனக்கு அமைச்சர்களாகப் பல இலாகாக்களை நடத்தி வைக்கத் தேர்ந்து எடுத்துக் கொள்கிறுர். சுகாதாரம், கல்வி, பொது வேலைகள் நிதி, முதலியவைகளின் பொறுப்பை தினசரி வாழ்க்கையில் இவர்கள் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

குற்றங்களை விசாரித்து நீதி நிலை நாட்டுவதற்கு ஒரு நீதிபதியும், மாதம் ஒரு முறை வோட்டு மூலமாக நியமிக்கப் படுகிறுர். அநேக சில்லரைக் கேஸ்களை நீதிபதியே தீர்த்துவிடலாம். அல்லது கோர்ட்டைக் கூட்டி ஜூரியை நியமித்து பப்ளிக் ப்ராசிகூட்டர் கேசை நடத்தவும் செய்விப்பார். அப்பொழுது பிரதிவாதி தானே நின்று வாதாடலாம் அல்லது வேறு ஒரு அட்வகேட்டைக் கொண்டும் வாதாடலாம். நகரின் ஒவ்வொரு அங்கத்தினரும் அட்வகேட்டுகளாக ஆஜராக உரிமை யுடையவர்கள். குற்றவாளிக்கு அப்பீல் செய்யவும் உரிமை யுண்டு. இத்துணை பொறுப்பு வாய்ந்த ஒரு சமூகம் எளிதில் குற்றம் தான் செய்துவிடுமா?

எங்கோ தெருவில் திரிந்துகொண்டிருந்த பையன்கள் பன்னிரண்டு, பதினுன்கு வயதுப் பையன்கள், காளைப் பருவம் வாய்ந்தவர்கள், சாதாரணமாகவே எல்லாக் கட்டுப்பாடுகளையும் மீறவேண்டும் என்ற உணர்ச்சிப் பருவம் வாய்ந்தவர்கள்—இவர்கள் இந்த நகரின் வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமானுல் வேறெந்த வழிகளை எல்லாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆலோசித்தனர். சுயநலம் என்ற ஒரே தூண்டுகோலைத்தான் இதுவரை இக் குழந்தைகள் உணர்ந்திருந்தனர். இப்பொழுது பொதுநலமும் மலர ஆரம்பித்திருக்கிறது. எனினும் அந்த சுயநலச் சக்தியையும் இங்கு பயன் படுத்தினர். இந்த நகரில் "சன்மானம்" என்ற பணம் நோட்டு நோட்டாக அடிக்கப்பட்டது. நகரில் ஒரு "பாங்கு" அமைக்கப்பட்டது. இந்த பாங்குக்குத் தலைவரும் ஒரு பையன் தான். எவ்வளவு நோட் அச்சாக வேண்டும், எவ்வாறு கைமாற வேண்டும் என்ற திட்டங்களையும் நிர்ணயிப்பவர் இவரே. இந்த நகரின் ஒவ்வொரு அங்கத்தினரும் செய்தஎல்லாத்தொழில்களுக்கும் கல்வி கற்றதற்கும் இந்த சன்மான நோட்டு வழங்கப்பட்டது. இந்த நோட்டைப் பெறுவதற்காக அவர்களின் ஊக்கம் மேன்மேலும் வளர்ந்தது. இந்த நோட்டு வெறும் காகிதம் அன்று. இதை அங்குள்ள கடையில் கொடுத்தால் வேண்டிய தின்பண்டங்களோ, அல்லது விளையாட்டுச் சாமான்களோ அல்லது சோப்பு வகையராக்களோ கிடைக்கும். இந்தத் தூண்டுதலுக்கும் அசையாத சில மந்தமான பேர்வழிகளும் இருந்தனர். அவர்களுக்கு பொருத்தமான சன்மான நோட்டுகள் வழங்கப்பட்டன. அதைக் கொண்டு அவர்கள் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டினர், சாப்பாடு முதலியவற்றுக்கும் கட்டினர். சில்லரைச் சாமான்கள் வாங்கிக் கொண்டனர். மீதியை பாங்கில் ரிசர்வ் பண்ணினர். இப்படிப் பணத்தை பெரியவர்கள் போல் புழங்குவதில் அவர்களுக்கு ஒரு தனிப்பிரியம். தாங்களும் பொறுப்பு வாய்ந்த பிரஜைகள்; ஏதோ தண்டப் பிண்டங்கள் அல்ல என்ற உணர்ச்சியையும் பெறுகின்றனர். சோம்பேறித்தனத்தை ஒழித்து சமூகத்தில் ஒத்

துழைத்தனர். நகரபாங்க் இந்த "சன்மான" நோட்டுக்கு சர்க்கார் நோட் எக்சேஞ்சு செய்யவும் ஏற்பாடு செய்தது. ஆதலால் இது வெறும் நாடகம் அல்ல. உண்மையான வாழ்க்கை என்று உணர்ந்தனர் இந்த அநாதைகள்.

இந்த நகரில் பல கைத்தொழில் சாலைகள் அமைக்கப் பெற்றன. தச்சு வேலை, யந்திர வேலை, தோல் வேலை, சட்டிபானை வனைதல், கடைசல் வேலை, இன்னும் பல சித்திர வேலைகளை ஏற்பாடுசெய்தனர். ஒவ்வொருவரும் இவற்றுள் ஒன்றில் திறமை அடைந்தனர். ஒன்ருவது கட்டாயப் பாடமே இல்லை. சீக்கிரத்தில் கடற்கரை ஓரமாக இன்னும் ஒரு நகர் அமைக்க ஏற்பாடாகிக்கொண் டிருக்கிறது. அதில் படகு கட்டுவதும், மீன் பிடிப்பதும், கடலில் மூழ்குவதும் இன்னும் கப்பலில் செய்ய வேண்டிய பல கைத்தொழில்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆகிக்கொண் டிருக்கின்றன. வேறு ஒரு தகுந்த இடத்தில் விவசாய நகர் ஒன்று அமைக்க ஏற்பாடாகி வருகிறது. அங்கு காய்கறித் தோட்டம் பயிரிடுவது, பழவர்க்கங்கள் ஏற்றுமதி செய்வது, பால்பண்ணை வைப்பது, இன்னும் இவற்றை ஒட்டிய பல கைத்தொழில்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த நகரில் ஒரு ஆஸ்பத்திரிஉண்டு. அங்கே ஒவ்வொரு பையனின் உடல் வளர்ச்சியும் போக்கும் நன்ருகப் பரிசோதனை செய்யப்படுகிறது இத்துடன் நில்லாமல் உளப் போக்கையும் நன்கு ஆராய்கின்றனர். பெரிய பெரிய உள இயலார் கண்டறிந்த உண்மைகளைத் தெரிந்தவர்களே இங்கு தலைமை வகிக்கின்றனர். இந்த அறிவாளிகளின் உதவியில்லாமல் இந்தக் குழந்தைகளுக்கு அவரவர் போக்குப் போல் பயன்தர முடியாது. இது சாதாரணப் பள்ளிக்கூடம் அல்ல; ஹாஸ்டலும் அல்ல. எல்லாக் குழந்தைகளும் நகரில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் கற்று வருகின்றனர். இவர்களுடைய கல்வியை சர்க்கார் டிபார்ட்மெண்டின் சட்டதிட்டப்படி இல்லை என்று ஆரம்பத்தில் அங்கீகரிக்க மறுத்தது. ஆனல் வரவர இது ஓர் புது முறைக் கல்வி என்று வேண்டிய சலுகைகள் கொடுக்க மனம் உவந்துள்ளனர். இந்த நகரில் முக்கிய பிரச்னை ஒன்று உளது. அது தான் புதுமை. ஆசிரியர் பழைய செல்லரித்த கொள்கைகளில் நம்பிக்கைவைத்தவர்கள் இத்தகைய முயற்சிகளுக்கு லாயக்கற்றவர்களாவர். நாளுக்கு நாள் கருத்துக்களும் லட்சியங்களும் முன்னேறிக் கொண்டிருக்கின்ற இந்நாளில் புதுமை மனப்பான்மையுள்ள ஆசிரியர்தான் இத்தகைய தொண்டுகளில் இறங்கிப் பயன்பெற முடியும். எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அளவற்ற அன்பு வேண்டும். இது ஒன்றிருந்தால், இல்லாத மற்றெல்லாம் வந்து கூடும். இந்த அன்பில்லையேல் மற்றெல்லாமிருந்தும் விழலுக்கிறைத்த நீராகும்.

*

ஒரு சொல் காந்தி

ஒருதடவை ஒருஏழை காந்திஜியிடம் வந்துகையெழுத்து கேட்டான்:

"கையெழுத்துக்கு ஐந்து ரூபாய் கொடு" என்ருர் காந்திஜி.

"ஐந்து ரூபாய்க்கு எங்கு போவேன்? ஒரு ரூபாய் தருகிறேன்" என்ருன் அவன்.

உடனே காந்திஜி அவனிடமிருந்து அந்தக் கையெழுத்துப் புத்தகத்தை வாங்கி ஏலம் போட்டார். அது ஆறு ரூபாய்க்குப் போயிற்று.

காந்திஜி அதை எடுத்துக்கொண்டு அவனுக்கு ஒரு துண்டுத்தாளில் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார்.

'தந்திரம் பாதி, மந்திரம் பாதி' என்பார்கள். அவளைக் காப்பாற்றியது ஜானின் ரத்த சக்தியா? அல்லது டாக்டரின் யுக்தியா? இது நடந்த விஷயமென கூறப்படுகிறது.

மருந்தும் மனமும்

○

ஹால்போர்லண்ட்

நான் அவரை டாக்டர் கேஸ் என்றுதான் அழைப்பேன். அவர் ஒரு பழங்கால வைத்திய பண்டிதர்; இருபது வருஷத்துக்கு முன்னதாக எனது நெருங்கிய சிநேகிதராகவு மிருந்தார். எப்போதாவது நான் அவருடைய ஊருக்குச் சென்றால், அவரைச் சந்தித்து அளவளாவுவேன். இருவரும் இருவருக்கும் இனந்தெரியாத நபர்களைப் பற்றியெல்லாம் பேசிக்கொள்வோம். அப்போதுதான் அவர் ஜானைப் பற்றியும் லூசியைப் பற்றியும் பிரஸ்தாபித்தார்.

ஜான் ஒரு ஆடு மேய்ப்பவன்; தற்குறி, கட்டுமஸ்தாக, பந்தயக் குதிரை மாதிரி இருப்பவன். முதலில் அவனிடம் ஐம்பது ஆடுகளே இருந்தன; அவனுடைய ஓயா உழைப்பும் முயற்சியும் சேர்ந்து, அவனுடைய கால் நடைச்செல்வத்தைப பத்தே வருஷத்தில் இரண்டாயிரமாக்கிற்று. அதன் பின் அவன் ஒரு பண்ணை நிலத்தையும் விலக்கு வாங்கி, தனது மந்தையைக் கவனித்து வந்தான். அப்போது அவனுக்கு வயசு நாற்பத்தைந்து. செல்வமும் செழிப்பும் அவனுக்கு நிறைந்திருந்தன.

அதன்பின்தான் அவன் கல்யாணம் செய்துகொண்டான். லூசி ஒரு நாட்டுப்புறப் பெண்; பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஒரு ஹோட்டலில் பரிசாரக வேலைபார்த்து வந்தாள். ஜான் அவளை அங்குதான் சந்தித்தான்; அப்போது அவளுக்கு வயது இருபது. தினசரி பத்து மணிக்கு அந்த ஹோட்டலுக்கு காப்பி சாப்பிட வருவான் ஜான் அவன் வரும் நேரத்தைக் கொண்டு உங்கள் கைக் கடிகாரத்தின் மணியைக்கூட துல்லியமாகத் திருப்பிக் கொள்ளலாம். அவ்வளவு கணக்காக அவன் வருவான்.

லூசி அவனிடம் கால நிலையைப் பற்றியோ ஊர் விவகாரம் பற்றியோ பயிர் பச்சையைப் பற்றியோ ஏதாவது பேசுவாள். ஜான் அவள் சொல்வதை வெறுமனே புன்னகை பூத்தவாறே கேட்டுக் கொண்டிருப்பான்; தலையை ஆட்டுவான். கடைசியாக, "சரி. நேரமாகிவிட்டது. நான் வருகிறேன்" என்று கிளம்பிவிடுவான்.

இப்படியே மூன்று மாசகாலம் நடந்தது. ஒரு நாள் டாக்டர் கேசம் அங்கு காப்பி சாப்பிடச் சென்றிருந்தார். அப்போது ஜான், லூசியிடம் "லூசி, நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று சொன்னான். லூசி திடுக்கிட்டு, கையிலிருந்த காப்பியைக்கூட சிந்தப் பார்த்தாள். அவர்கள் இருவருக்கும் ஒரு மூன்றாவது ஆள்—டாக்டர்—இருப்பது தெரியவில்லை. லூசியும் பதிலுக்கு, "ஜான் எனக்கும் எண்ணந்

தான். எனினும் இன்னும் ஒன்றிரண்டு நாளில் முடிவு சொல்கிறேன்'' என்றாள். ஜான் வழக்கம்போல் தலையை ஆட்டிவிட்டு, "சரி. நேரமாகி விட்டது. நான் வருகிறேன்'' என்று கிளம்பிவிட்டான்.

இரண்டு வார காலத்தில் அவர்கள் இருவருக்கும் கல்யாணம் நடந்தேறியது. சில நாளில் அவர்கள் இருவரும் அந்தப் பண்ணையில் குடியேறிவிட்டனர். புதிதாக ஒரு வீடு கட்டி வெள்ளையடித்து அழகுபடுத்தி அதில் குடியிருந்தார்கள்.

டாக்டர் கேசுக்கு இவர்கள் வாழ்க்கை சரியான முறையில் செல்லவில்லை என்று ஒரு சந்தேகம். இரண்டு தடவை ஜான் டாக்டரை லூசியைப் பார்ப்பதற்காக அழைத்துக் கொண்டு போனான். லூஸி சந்தோஷமற்றிருப்பதாக அவருக்குப் பட்டது. அவளுக்கு உடல் நலமும் சரியில்லை. அடிக்கடி தலைவலி; எனினும் அது என்ன சீக்கு என்று டாக்டரால் உணர முடியவில்லை. இரண்டாம் தடவை அவளை அவர் பார்க்கச் செல்லும்போது ஜான் அவளைச் சரியாக நடத்துகிறானா என்ற விஷயத்தையே கேட்டு விட்டார். "ஜான் அருமையான புருஷன்தான் எனினும் அவர் எதுவுமே பேசுவதில்லை; பெண்களோ பேச்சைத்தானே விரும்புவார்கள்'' என்றாள். அதன் பின் டாக்டருக்கு ஒவ்வொன்றும் தெளிவாக ஆரம்பித்தன. பிறகு சில வாரம் கழித்து டாக்டர் லூசியைப் பார்த்த போது, "எனக்கு உள்ள தலைவலியும் திருகுவலியும் எனது மன உளைச்சலால்தான் என்று நினைக்கிறேன். டாக்டர், நானும் ஜானைப் போல், பெரியவளாக, பலசாலியாக இருக்க விரும்புகிறேன்'' என்றாள்.

அதன் பின் ஒன்றரை வருஷ காலம் கழிந்துவிட்டது. அதற்கிடையில் டாக்டருக்கு அவர் கேஸ் பற்றி எதுவும் தெரியாது. ஒரு நாள் ராத்திரி கடைச்சாமத்தில் டாக்டர் வீட்டுக் கதவை யாரோ தட்டினார்கள். கதவைத் திறந்து பார்த்தால், ஜான் நின்று கொண்டிருந்தான். "டாக்டர், லூசிக்கு ரொம்பவும் முடியவில்லை. வந்து எதாவது செய்யுங்கள்'' என்று சொன்னான். லூசியும் ஜான் வந்த காரிலேயே இருந்தாள். அநேகமாக அவள் பேச்சு மூச்சற்றுத்தான் கிடந்தாள். முந்திய நாள் மாலையிலிருந்தே அவளுக்கு உடம்பு வலி அதிகமென்று சொன்னான். மேலும் முப்பது மைல் காரில் வந்ததால் மூர்ச்சையடைந்திருந்தாள்.

டாக்டர் அவளை தமது சிகிச்சை அறைக்கு கொண்டு, சிகிச்சை நடத்தினார். அவளுடைய குடல் வெடித்துப் போயிருந்தது; எனினும் டாக்டருக்கு நம்பிக்கை போகவில்லை. "இருபத்தி நாலுமணிநேரம் கழித்துத்தான் நிச்சயம் சொல்லமுடியும்'' என்று டாக்டர் சொன்னார். ஜானோ சிறு குழந்தையைப்போல் விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டான். "டாக்டர், அவள் எப்படியும் பிழைத்தாக வேண்டும். பிழைத்தாக வேண்டும்'' என்று கதறினான்.

அன்று மாலைக்குள் அவள் நிலைமை மேலும் மோசமடைந்தது. இரவில் டாக்டர் அவளுக்குஇரண்டு பிளாஸ்மா இஞ்செக்ஷன் கொடுத்தார். "எனக்கு பலம் போதாது'' என்று அவள் ஏதோ முனகினாள்.

"என்ன சொல்கிறாய்? நீ ஜானைப் போல் பலம் பொருந்தி வருவாய் என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்றார் டாக்டர்.

லூசி வெறுமனே சிரித்தாள். "ஜான் மிகவும் பலசாலி; ஆகவே என்னை விரும்ப வில்லை. வாய்திறந்து சொல்லாவிட்டாலும்...''

"லூசி, ஜான் உன்னைவிரும்பத்தான் செய்கிறான். அவன் சொன்னாலும்

சரி, சொல்லாவிட்டாலும் சரி" என்ருர் டாக்டர்.

அவள் தலையை ஆட்டிவிட்டு, கண்களை மூடினுள்.

பிறகு டாக்டர் ஜானிடம் வந்து, "ஜான், அவளுக்குப் பிழைத்தெழவே விருப்பமில்லை" என்ருர்.

" அவள் பிழைத்தாகவேண்டும். அதற்காக நான் ரத்ததானம் கொடுக்கிறேன்" என்ருன் ஜான்.

அதன்பின் டாக்டர் தாம் அவளுக்கு பிளாஸ்மா ஊசி போட்டிருப்பதைத் தெரிவித்தார்.

"நான் ரத்தம் தருகிறேன்—என்னுடம்பில் உள்ள இரத்தம் எங்கள் இருவருக்கும் போதுமானது" என்ருன்.

" நீ அவளைக் காதலிக்கிருயா ஜான்?" என்று கேட்டார்.

" இல்லாவிட்டால், நான் அவளைக் கல்யாணம் செய்திருப்பேனு?"

" சரி. நீ காதலிப்பதாய் அவளிடம் எப்போதாவது வாய்விட்டுச் சொன்னதுண்டா?"

" என்னுடைய சகல உடமைகளையும் அவளுக்கே கொடுத்துவிட்டேனே! ஒரு மனிதன் வேறு என்னதான் செய்யமுடியும்?"

" இருந்தாலும், நீ அவளிடம் சொல்லிப் பார்"

" நான் வெறும் வாய்ப் பேச்சுக்காரனல்ல டாக்டர். அது அவளுக்கே தெரியும். அவளுக்கு என் ரத்தத்தைக் கொடுங்கள்" என்று சொன்னுன்.

டாக்டர் ஒரு கணம் சிந்தித்தார். பிறகு அவனை அறைக்குள் அழைத்துச் சென்று ரத்தப் பரிசோதனை நடத்தினுர். பிறகு " சரி, ஜான், இன்னும் பத்தே நிமிஷத்தில்," என்று கூறினுர்.

பிறகு டாக்டர் லூசியிடம் சென்று ஜான் ரத்த தானம் பண்ணத் தயாராயிருக்கும் விஷயத்தைச் சொன்னுர். அதில் அவளுக்கு அதிக அக்கறை இல்லாததுபோல் தோன்றியது. அவளுடைய நாடி இறங்கித் தளர்ந்து அடித்துக்கொண் டிருந்தது. பிறகு காலங் கடத்தாமல் நர்ஸைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னுர்.

பிறகு ஜானை லூசியின் அறைக்குள் அழைத்துச் சென்ருர். ஆபரேஷன் மேஜையின் பக்கம் அவள் படுத்துக் கிடந்தாள். படுக்கைக்கும் மேஜைக்கும் இடையில் ஒரு திரை தொங்கவிடப் பட்டது. ஜான் மேஜைமீது படுத்ததும் நர்ஸ் திரையை விலக்கினுள். ஜான் கையை நீட்டி, லூசியின் கையைப் பிடித்துக்கொண்டு, " உன்னை நான் குணமாக்கப் போகிறேன் லூசி"

அவனைத் திரும்பிப் பார்க்காமலே " ஏன்?" என்ருள்.

" ஏன் அப்படிக் கேட்கிருய்?" என்ருன் ஜான்.

" எனக்கே தெரியாது" என்ருள் அவள்.

" நீ என் மனைவி யல்லவா?" என்ருன். பதிலில்லை. நர்ஸ் திரையை விட்டு விட்டு, ஜானின்கையில் ஊசியை ஏற்றினுள். ஜான் பெருமையோடு கையை நீட்டிக் கொடுத்தான். "இதோ வருகிறது லூசி," என்று கூறி விட்டு, டாக்டரிடம், " டாக்டர் என்ன,எப்படி இருக்கிருள்?"என்ருன்.

திரைக்கு அந்தப்புறம் டாக்டர் லூசியின் உடம்பில் ஊசியை ஏற்றினுர். அவருடையகை அவளது நாடியைப் பரீட்சை செய்து கொண்டிருந்தது.

" சரி, ஜான்" என்ருர்.

"இப்போது எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் ஜான்.

" சரியாய் விட்டது" என்ருள் அவள்!

" இன்னும் கொஞ்சம் ரத்தம் சென்ருல், நீ உரத்துப் பேச முடியும்" என்ருன்.

- குழந்தைகள் முன்னேற்றத்திற்காக உலகத்திலேயே பெரு முயற்சி எடுத்துக் கொண்டவர் ஸ்ரீமதி மாண்டிசோரி.

- இந்த வருடத்தில் சமாதானத்திற்கான நோபல் பரிசை மாண்டிசோரி அம்மையாருக்குத்தான் கொடுக்கும்படி உலகப் பேறிஞர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி மாண்டிசோரி

எழுதிய

குழந்தைமை ரகசியம்

★

விரைவில் வெளியாகும். ஸ்ரீ சி. ந. வைதீஸ்வரன் தமிழாக்கியது. ஸ்ரீ வைதீஸ்வரன் ஸ்ரீமதி மாண்டிசோரி கூட நெடுநாள் பழகி அனுபவம் பெற்றவர்.

★

இது சக்தி வெளியீடு

அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

உங்கள் வாழ்க்கை, ஆஸ்திகள், மரியாதை முதலியவற்றை திடீரென எதிர்க்கும் முரடர்களிடமிருந்தும் கொடிய விலங்குகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்

வீட்டிலும், வனபோஜனம் அல்லது பிரயாணத்திலும், உறுதியும் இலேசானதுமான இந்த ரிவால்வர் எப்பொழுதும் உங்கள் உற்ற துணைவன் என்பதை நிரூபிக்கும். தானாகவே சுற்றிவரும் 6 ரவைகள் வைக்கக்கூடிய அறையுடன் கூடியது. அமெரிக்காவில் செய்யப்படும் உண்மைப் பிஸ்டலைப் போலவே தோற்றமளிக்கிறது. இதன் எடை 15 அவுன்ஸ்கள். நீளம் 9 அங்குலம். அதிபயங்கரமான சப்தத்துடன் நீளமாகக் கோடுபோல் ஒளி கக்கிக்கொண்டு வெடிக்கிறது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் அனுப்புங்கள். செலவில்லாத இம் மெய்க்காப்பாளன் இல்லாதிருக்காதீர்கள்.

விலை ரவைகளுடன்

நெ-111 ரூ. 5/- நெ-333 ரூ. 7/8-
நெ-222 ரூ. 6/8 நெ-444 ரூ. 8/8
B-555 ஸ்பெஷல் வெள்ளி முலாம் விலை ரூ. 10—0—0

அலாதியாக 4 டஜன் ரவைகள் விலை ரூ. 4—8—0

பிஸ்டல் பெட்டி பில்டுடன் விலை ரூ. 5—0—0

உபயோகிக்கும் எண்ணெய் புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0

HINDUSTAN TRADERS
P. Box No. 286—KANPUR (U. P)

★ வழக்கமாக எமது சோப்புகளை உபயோகித்து வரும் நண்பர்கள், அவைகளின் அருங்குணம், நறுமணம் ஆகியவைகளை மற்றவர்களும் அனுபவித்து மகிழ அவைகளை ஏன் பிரபல்யப்படுத்தக் கூடாது என எம்மைக் கேட்டு வருகின்றனர்.

★ ஆகவே, இப்பொழுது நாம் சிறிதளவு விளம்பரத் துறையில் இறங்கி "காவே" (GAWO) "க்யூரால்" (CUROL) "நீபா" (NEEPA) ஆகிய எமது வாசனை சோப்புகளின் குணவிசேஷங்களை அனுபவித்து ஆனந்திக்க அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கிறோம்.

கங்கா ஒர்க்ஸ், அடையாறு, மதராஸ்-20

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுகளைவிட அதிக நாள் உழைக்கும்.



மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-1076

அவளுடைய நாடி உரத்து அடிக்க ஆரம்பித்தது.

"ஜான்!" என்றாள் லூஸி.

"ஏன்?"

"நான் உம்மைக் காதலிக்கிறேன்"

ஒரு கண மௌனம். பிறகு ஜான் சொன்னான். "லூசி, நான் குணமாக வேண்டும்."

"ஏன்?"

"எனக்காகத்தான், எனெனில்... நானும் உன்னைக் காதலிக்கிறேன்!" என்றான்.

அவள் நாடி துடித்தது.

"இதை நீங்கள் என்னிடம் சொல்லவே இல்லையே!"

"சொல்ல வேண்டிய அவசியமிருந்ததாகத் தெரிய வில்லை."

அவள் நாடி சமனப்பட்டது.

"இன்னொரு தடவை சொல்லுங்கள், ஜான்!"

இவன் ஒரு கணம் திகைத்து விட்டு "நான் உன்னைக் காதலிக்கிறேன், லூசி, இந்த உலகில் நீதான் எனக்குப் பெரிது. நீ எனக்கு வேண்டும். கடவுள் கிருபை எனக்கு உதவட்டும். என்றான்.

டாக்டர் ஊசியை எடுத்தார். பாட்டில்களையும் அப்புறப்படுத்தினர். பிறகு நாடியைப் பரீட்சித்தார். நாடி ஒழுங்காக, அடித்துக்கொண்டிருந்தது. பலமாக அடித்தது.

"உனக்கு இப்போது எப்படியிருக்கிறது?" என்று கேட்டான் ஜான். அவள் பதில் சொல்ல வில்லை; கண்ணீர் வடித்தாள்.

"அவள் தேறி விட்டாள்" என்றார் டாக்டர்: "உன்னால்தான்! ஜான்!"

நர்சும் ஊசியை உருவினாள். பிறகு டாக்டரும் நர்சும் அங்கிருந்து அகன்றனர். சிறிது நேரம் கழித்து டாக்டர் திரும்பி வந்தபோது காதலர் இருவரும் கை கோத்து உட்கார்ந்திருந்தனர்.

இந்தக் கதையைச் சொல்லி முடித்து டாக்டர் என்னிடம் "அவள் பிழைத்துக் கொள்வாள் என்று எனக்குத் தெரியும்" என்றார்.

"சரி அவர்களிடம் உண்மையைச் சொல்லி விட்டீர்களா?" என்றேன் நான்.

"அதிசயம் நடந்ததே போதாதா? ஜானின் ரத்தம் அவள் உடம்புக்கு எற்றதல்ல; அது தப்பான, நேர்முரணை ரத்தம். அது அவளைக் கொன்று விடக்கூடும். ஆனல், அவள் உடம்பில் பிளாஸ்மாவைத்தான் எற்றினேன் என்பதும், ஜானுடைய ரத்தம் தனியாக வேறு ஜாடியில் வடிக்கப்பட்டது என்பதும் அவளுக்கு எப்படித் தெரியும்? லூசிக்கு வேண்டியது ஜான்தான். அவன் அவளுக்குக் கிடைத்துவிட்டான்!" என்று கதையை முடித்தார், டாக்டர்.

*

நயவஞ்சகம் கூடாது

ஆணாயினும் பெண்ணாயினும், நயவஞ்சகர் அனைவரும் ஒரே இனத்தவரே! அவர்கள் (யாவருமே) பாபமான காரியங்களைச் செய்யும்படி தூண்டுவார்கள்; நன்மையான காரியங்களைத் தடை செய்வார்கள். (செலவு செய்ய அவசியமான சமயங்களில்) தங்கள் கைகளை மூடிக் கொள்ளுவார்கள். இவர்கள் அல்லாஹ்வை மறந்துவிட்டார்கள்; ஆதலால் அல்லாஹ்வும் அவர்களை மறந்துவிட்டான். நிச்சயமாக இந் நயவஞ்சகர்கள்தான் (சதி செய்யும்) கொடிய பாபிகள்.

—குர் ஆன்

புத்தாண்டு

o

'கலைவாணன்'

பந்தி பந்தியாய் மீன்கள்
பார்த்த படி நின்றிருக்க
சந்திர னோர் நட்டு வனாய்ச்
சார்ந் தருகே பாட்டி சைக்க
சிந்தை தடுமாறிய தால்
செங்கதி ரோன் தலை சுழல
சுந்தரமாய் வான மரர்
சொக்கி விழும் பேரழகாய்க்
கந்த மலர் சூடி வருங்
கட்ட ழகி மண்ணரசி
வந்து நின்றிங் கோராட்டம்
வான ரங்கி லாடிய பின்
உந்தி விட்ட தாள் தூக்கி
உளந் துடிக்க மீண்டுமதோ
அந்தரத்து மேடை மிசை
ஆடத் தொடங்குகிறாள்—
தோழா புத் தாண்டின்
தோற்ற மிதில் இன்புறு வோம்.
வேம் பின் மலர் குலுங்கி
விந்தை மணம் சிந்திடவும்
காம் பூஞ்ச லேறிய மாங்
கனிகள் அசைந் திடவும்
கூம்பிக் கிடந்த மலர்க்
குமுதம் இதழ் விரிந்து
பூம் புனலின் மத்தியிலே
புஷ்பவதி யாகிடவும்

தேம்புகிற வண்டவனைத்
தேடிவந்து கூடிடவும்
தாம்புதுமை கண்ட துயில்
தனித் தமிழில் பாடிடவும்
நாம் புதுமை காண் கின்றோம்
ரசிக்கும் பழமையிலே
ஆம்! புதுமை காட்ட அதோ
அருணன் உதித்து விட்டான்!
நண்பா புது வருஷ
நாளி தனை வாழ்த் திடுவோம்
உடுத் தோம்; வயி றார
உண வுண் டோம்; உண்ட லுத்துப்
படுத் தோம்; துயின் றிருந் தோம்;
பாரி டை நம் வாழ்க் கையினை
விடுத் தோம்; விழலிரைத் தோம்.
வீணிதுவே என்றா லும்
அடுத் தடுத்து நாள் மலர்கள்
அழகழ காய்ப் பூத் தொளிர
எடுத்த வற்றை ஈராறு
இழை களிலே கோத் தொன் றாய்த்
தொடுத் தொடுத்த கூடை யினைத்
தூக்கி வைத் துத் தோள் கனக்க
உடுத்த துகில் சோர்ந்து விழ
உடல் துவளக் காலப் பெண்
அடுத்த இடந் தனை நோக்கி
ஆடியா தோ வருகின்றாள்
அன்பா! புதுமை தரும்
அழகி தனில் மகிழ்வுறு வோம்.

நிலம் யாருக்குச் சொந்தம்? தனிப்பட்ட நபர்களுக்கு நிலம் சொந்தமாகப் போனதினால் சமூகத்தில் நாம் எப்படிப்பட்ட கொடுமைகளைக் காண்கிறோம்? இவ் விபரங்களைக் கட்டுரை கூறுகிறது. தினசரியிலிருந்து.

நிலம் சமூகத்தின் சொத்து

○

ஜே. சி. குமரப்பா

இயற்கையுடன் ஒத்துழைப்பவர்கள்தான் உண்மையில் செல்வத்தை உற்பத்தி செய்கிறவர்கள். இயற்கை சக்திகளை இவர்கள் பயன்படுத்திக் கொண்டு, மனிதனுக்கு உடனடியாக அத்யாவசியமாக இருப்பவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்கும் முறையில் இயற்கையில் கிடைப்பவைகளை மாற்றியமைக்கின்றனர். இந்த ரக வேலைதான் சாதாரண விவசாயம். குடியானவன் நிலத்தைப் பண்படுத்துகிறான்; விதை விதைக்கிறான்; வளமிட்டுப்பாதுகாக்கிறான்; கடைசியில் அறுவடை செய்கிறான். இவன்தான் உண்மையில் செல்வத்தை உண்டுபண்ணுகிறவன். மனிதனும் இயற்கையும்—பிறகு காற்று, தண்ணீர், பூமி முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்--இந்த நடவடிக்கையில் ஒத்துழைக்கின்றனர்.

பண்டைக் காலத்தில், மனிதன் பூரணமாக தனித்து வாழ்க்கை நடத்துகையில் இயற்கை மீது சட்டபூர்வமான உரிமை இருக்கவில்லை. ஆனால், காலக் கிரமத்தில் மனிதன் நிலத்தில் பாத்யதை கொண்டாடத் தொடங்கினான். ஜனத்தொகையும் அதிகமாகி வர, சமூகம் நிலத்திற்கு மதிப்பு வைக்க ஆரம்பித்தது. நிலத்திற்கு விலை வைக்கும் இந்தப் பழக்கம் சமூகத்தால் ஏற்பட்டதாகையால், நிலம் சமூகத்திற்கே சொந்தமாக இருக்கவேண்டும் என்றும், சமூகத்தின் பொது நன்மைக்காக அது பயன்பட வேண்டுமே தவிர, தனிப்பட்டவரின் லாபத்திற்காக இருக்கக் கூடாதென்றும் ஏற்படுகிறது. இதிலிருந்து ஒரு நபர் நிலத்தை தமதுசொந்த உபயோகத்திற்குச் சாகுபடி செய்து எஞ்சியிருப்பதை சமூகத்தின் உபயோகத்திற்குக் கொடுத்து விட வேண்டுமென்றும் ஏற்படுகிறது. ஆகையால் நிலம் தனிப்பட்டவருக்குச் சொந்தமாக இருப்பது சமூகத்திற்கே விரோதமான முறை என்பது மட்டுமின்றி, இயற்கைக்கு முற்றிலும் முரணான நிலைமையும் ஆகும்.

இப்பொழுதுள்ள சமூக அடிப்படை நிலத்தைத் தவறாக ஆர்ஜிதம் செய்து கொள்வதற்கு அனுமதித்ததோடல்லாமல், சுயநலத்திற்கும், சிலர் நன்மைக்கு மட்டும் நிலத்தைத் தனிப்பட்டவர்கள் உபயோகித்துக் கொள்வதற்கும் அனுமதி யளிக்கிறது. இதன் விளைவாக

எளியோரை வலியோர் வாட்டும் அநேகவித அதர்மமான, அநியாய மான பழக்கங்கள் ஏற்பட்டுவிட் டன. அநேக சந்தர்ப்பங்களில், நிலத் தில் பாடுபடும் பாட்டாளிக்கு, விவ சாயத்திற்கு உபயோகிக்கப்படும் கால் நடைகளின் அந்தஸ்துகூட கொடுக்கப் படுவதில்லை. நடை முறையில் இருக்கும் பழக்கத்தைப் பார்த்தால், இந்த பாட்டாளி மக் கள் அற்ப தொகைக்கு நிலச்சுவான் தார்களால் வாங்கப்பட்ட அடிமை கள் என்றே கூறிவிடலாம். சட்டப் படி இவர்களை அடிமைகள் என்று கூறமுடியாது. இவர்கள் கடனாளி கள் என்றுதான் அழைக்கப்படு கிறார்கள். கடன் தொகை எவ் வளவு என்றால், ரூ 40 அல்லது 50 தான் இருக்கும். அநேகமாக இந்த கடனை கடனாளி கலியாணத்திற் காகவாங்கி யிருப்பான். இந்த அற் பத்தொகையைக் கொண்டு நிலச்சு வான்தார், மணமகன், மணமகள், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை எல்லோர் மீதும் ஆயுள் பரியந்தம உழைக்கும் உரிமையை விலைக்கு வாங்கி விடுகிறார். பெருவாரியாக இந்த கடன்கள் திரும்பிக் கொடுக் கப்பட்டதாகக் கருதப்படுவதே இல்லை. கடனாளி எழுத்து வாசனை யறியாதவன். திருப்பிக் கொடுக்கப் பட்டிருக்கும் தொகைக்கு அவ னுக்கு ரசீது கொடுக்கப்படுவதே இல்லை. இதனால் அவன் நிலச் சுவான்தாருக்கு அடிமைப்பட்டவ னாகி விடுகிறான். கடனைத் தீர்க்கக் கூடிய தொகையொன்றையும் இந்த கடனாளியின் சார்பாக நிலச்சுவான் தார் வரவு வைத்துக் கொள்வதே இல்லை. கடனாளி வருஷம் போவது தெரியாமல் உழைத்து உழைத்து மாள வேண்டியதுதான். நன்றி யற்ற நிலச்சுவான்தார் உழைப் பிற்கு ஒரு அற்பகாசை விட்டெறி வார். வருஷத்தில் ஏதாவது ஒரு சமயத்தில், அநேகமாக தீபாவளி யின் போது, இந்த தொழிலாளிக்கு புதுத் துணி வாங்கிக் கொடுக்கப் படும். உழைப்புக்கு ஊதியம் ஒவ் வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரி. தொழிலாளியின் குடும் பத்தை ஆரோக்கிய நிலைமையில் வைத்திருக்க உணவு அளிக்க இந்த சம்பளம் போதியதாகவே இருக் காது. கோரக்பூரில் கோபிரிகள் என்ற தொழிலாளர்களின் பரிதாப நிலைமைதான் இதன் விளைவு.

இந்த கோபிரிகள் வருஷத்தில் சில குறிப்பிட்ட காலங்களில் பசுச் சாணியைச் சேகரித்து அதிலிருந்து ஜீரணமாகாத தானியங்களைக் கழுவி எடுப்பர். பிறகு இந்தத் தானியங் களை உலர்த்தி மாவாக்கி உணவு தயாரிக்கின்றனர். 6 கால்நடை களிலிருந்து, சுமார் ஒரு மணங்கு அல்லது ஒன்றரை மணங்கு தானி யங்களை இவர்கள் எடுப்பார்கள். இந்தத் தானியத்திலிருந்து தயாரிக் கப்பட்ட உணவுக்கும், இயற்கை யாக தானியத்திலிருந்து தயாரிக் கப் பட்ட உணவுக்கும் ருசியில் வித்தியாசம் இல்லையென்றும், ஆனால் உஷ்ணம் அதிகமாக இருக் கிறதென்றும் இவர்கள் கூறுகின்ற னர்.

✲

காரண—காரியம்

வேதனை, பாவத்தின் விளைவு.

—புத்தர்

புத்தக உலகம்

சித்ரா: [ஆசிரியர்: ரவீந்திரநாத டாகுர். மொழிபெயர்ப்பு: கே எஸ். அப்பாசாமி ஐயர். கிடைக்குமிடம்: சந்திரா பப்ளிஷிங் ஹவுஸ், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 1-8-0]

இது வங்கக் கவி ரவீந்திரர் எழுதிய நாடக நூல்; மகா பாரதத்திலுள்ள மூலக் கதைக்கு வழிமுறையாக வந்த வாரிசு.

பெண்கள் தங்கள் அழகைப் பற்றியோ, தங்கள் காதலன் தங்கள் மீது செலுத்த வேண்டிய விருப்பத்தைப்பற்றியோ சந்தேகம் கொண்டு விட்டால் அது பெண்களின் குறைபாடாக மனத்தை உறுத்தி விடுகிறது. இதைச் 'சித்ரா' மூலம் விளக்கிக் காட்டுகிறார் ரவீந்திரர். பாத்திர சிருஷ்டிதான் நாடகத்தின் ஜீவநாடி என்பதை மறந்துவிட்டுப் பார்ப்போமானால் நாடகத்தில் எவ்விதக் குறையும் தட்டுப்படாது. ஒவ்வொரு இடத்திலும் சம்பாஷணை நீண்டு கொண்டே போகிறது. அது நாடகத்திற்குரிய வலுவையும், வேகத்தையும் கம்மியாக்குகிறது. மற்றப்படி குறையே இல்லை. ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம்.

மொழிபெயர்ப்பு சுமாராக இருக்கிறது. எழுத்துப் பிழைகள் அதிகம்.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

மாயா விநோதினி: [ஆசிரியர்: ரவீந்திரநாத டாகுர். மொழிபெயர்ப்பு, ஸ்ரீமதி தஞ்சம்மாள். கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர் சென்னை. விலை ரூ. 4-0-0]

கிழக்கு, மேற்கு என்ற இரண்டு திசைகளிலும் கௌரவிக்கப்பட்டவர் ரவீந்திரர். தமிழிலுள்ள பாசுரங்களைப் போல அவருடைய கவிதைகள் ஆத்ம உறவோடு மனோ எழுச்சியையும் சுட்டிக் காட்டும். ஆனால் அந்த ஆத்ம உறவுகளையும் மனோ எழுச்சிகளையும் அவருடைய வசன இலக்கியத்தில் அதிகமாகப் பார்க்க முடிவதில்லை.

சமூகக் கொடுமையால் ஏகாந்த வாழ்வில் சிக்கித் தவிக்கும் ஒரு விதவையின் உள்ளப் பொருமலை, மன ஓட்டத்தை, இந்த நாவல் தெளிவுபடுத்துகிறது. அந்த விதவையின் ஒவ்வொரு உணர்ச்சிகளும் நம்மை அனுதாபப்படவைக்கின்றன. மகேந்திரன் என்ற இளைஞனுடைய சஞ்சல புத்திகள், பிஞ்சிலே பழுத்த நாகரிகக் கொள்கை—இவைகள் எல்லாம் பல்வேறு சுழிப்புக்களாக இருந்து கொண்டு நாவலை அழகு படுத்துகின்றன. ராஜலட்சுமியினுடைய பிள்ளைப் பாசமும் விஹாரியினுடைய சிநேக இயல்பும் கொஞ்சம் விறைப்பாகவே செல்லுகின்றன. சிறிது குழைவு நெளிவோடு அவை வந்திருந்தால் நாவல் மேலும் சோபித்திருக்கும். சமூக இயல்பின் குறிப்பிட்ட அம்சத்தை இந்த நாவல் நன்கு பிரதிபலிக்கிறது. கதைப் போக்கை விஸ்தாரப்படுத்தி, சமூகத்தின் கோணல்மாணல்களையெல்லாம் ஊடாட விட்டிருக்கிறார் ரவீந்திரர்.

மொழி பெயர்ப்பு குற்றமில்லை.

மாப்பிள்ளைத் தோழன்: [ஆசிரியர்] ய. மகாலிங்க சாஸ்திரி. கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2-0-0:

கல்யாணத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, வரதட்சிணை என்கின்ற சமூகக் கொடுமையால் எப்படியெல்லாம் இரண்டு குடும்பத்தார்கள் அவஸ்தைப்

படுகிறார்கள் என்பதை இந்த நாவல் தெளிவு படுத்துகின்றது.

வாழ்க்கையிலுள்ள பிரச்னைகளைச் சுட்டிக் காட்டுவதோடு நின்றுவிடாமல் அதற்குப் பரிகாரம் தேடத்தூண்டுவதில்தான் நாவலின் முயற்சி முடிவடைகிறது. இதை இலக்கியத்தின் உள்ளோசையாக வைத்துப் பார்க்கும் பொழுது, நாவலினுடைய போக்கு முதல் அம்சத்தைத்தான் காப்பாற்றுகிறது. பாத்திர சிருஷ்டியும், கதைக் கட்டுமானமும் உருவாகி வந்த ஒரு சில தமிழ் நாவல்களில் இதுவும் ஒன்று; முதன்மையானது என்றுகூடச் சொல்லலாம். யாவரும் படிக்கலாம். இதைப் படிக்கும் முயற்சி வீண் போகாது. ஆனால் வருகிற பதிப்பில் திருத்திக்கொள்ள வேண்டிய விஷயங்கள் இரண்டு இருக்கின்றன: ஒன்று, முக்கியமான சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் அநியாயமாகச் சுருக்கி இருப்பது. அவற்றிற்குரிய நீள அகலங்களோடு திருத்த வேண்டும். வாக்கியங்கள் அளவுக்கு மீறி நீள நீளமாகக் கையாளப்பட்டுள்ளன. பல இடங்களில் மைல் கணக்கில் பிரயாணம் செய்கின்றன வாக்கியங்கள். அவற்றைத் தக்க தக்க அளவோடு குறுக்கி அமைக்க வேண்டும்.

சர்க்கா: [ஆசிரியர்: பி. எம். ராஜகோபாலன். கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2-12-0]

தேசத்தொண்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு மண வாழ்க்கையிலும், தாம்பத்ய வாழ்க்கையிலும் சிதறிப் போன உள்ளங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது நாவல். சூதறியா வயதிலிருந்தே கருக்கூடி வந்த ஒரு பெண்ணினுடைய காதலுணர்ச்சிகள், அவற்றை அறிந்தும் அறியமறுத்துவிடுகின்ற தேவநாதனுடைய வாழ்க்கை, அந்த வாழ்க்கையினுடைய முடிவு இவற்றை நன்றாகச் சித்தரித்திருக்கின்றார் ஆசிரியர். கிராமியப் பண்பாடு, கிராம மக்களின் ஆசாபாசங்கள் இவைகளைத் தமிழ் நாவலில் காணவே முடியாது. ஆசிரியர் இந்த நாவலில் மேற்படி கிராம இயல்பையும் உணர்ச்சியையும் சவிஸ்தாரமாகச் சித்தரித்துள்ளார். பாராட்ட வேண்டிய அம்சம் இது.

விஷயத்தை விளக்கமாகப் பெருக்கிக் கொண்டுபோனாலும் உரிய இடத்தில் வளைத்து மடக்கச் சிரமப்படுகிறார் ஆசிரியர். அது காரணமாக லட்சிய உருவாகி வர முயன்ற இந்த நாவல் வெறும் பொழுது போக்காகவே மாறி விட்டது. "விஷயத்தைக் கவிஞன் தான் அடக்கி ஆளவேண்டுமே ஒழிய, விஷயம் கவிஞனை அடக்கி ஆண்டு விடக்கூடாது." என்ற கார்லைலினுடைய கொள்கை இலக்கிய முழுமைக்கும் ஒரு தத்துவத் தீர்ப்பு.

லி. ச.

காந்திமகான் சரித்திரம்: [ஆசிரியர்: வித்வசிகாமணி கே. நட்டார். கிடைக்குமிடம்: ஹிந்துஸ்தானி மஹால், தூத்துக்குடி. விலை ரூ. 2-0-0.]

காந்திமகான் இந்நூற்றாண்டின் தவப்பெரியார். அவருடைய சத்திய சோதனைகளை பாமரமக்கள் எல்லோரும் படித்தறியவேண்டியது அவசியம். காந்திஜியின் அரிய சாதனைகளின் வரலாறுகளை இது வரைக்கும் அநேகர் எழுதியிருக்கின்றனர். ஸ்ரீ நட்டாருடைய இந்நூல் எல்லோருமே படித்தறியும் முறையில் எளிய இனிய நடையில் அம்மானையாக எழுதப்பட்டிருப்பது. பாராட்டத் தக்கது.

காந்திஜி தென்னாப்பிரிக்காவில் ரயிலில் செல்லும்பொழுது நடு இரவில் பனிவேளையில் கீழே இறக்கிவிடப் பட்ட சம்பவத்தையும், கோச்சு வண்டியில் செல்லும்பொழுது ஒரு வெள்ளையன் காந்திஜியை கன்னத்தில் அடித்ததுபற்றியும், பஞ்சாப் படுகொலையின் கோரத்தைப் பற்றியும் ஆசிரியர் பாடி இருப்பதைப் படித்

தால் ஆதிக்கவெறிகொண்ட வெள்ளையன்பேரில் நமக்கு ஆத்திரமும் கோபமும் பொங்கி எழும்.

எளிய முறையில் கருத்தடங்கியுள்ள இந்நூல் படிக்கப்படிக்க நன்ருகவே இருக்கிறது. தென்னப்பிரிக்காவில் நடந்த சத்தியாக்கிரக இயக்கத்தில் காந்திஜியே புகழ்ந்து போற்றிய தமிழ்நாட்டின் வீராங்கனை வள்ளியம்மையின் வரலாற்றையும் இந்நூலில் சேர்த்திருக்கவேண்டும். ஒரு சில இடங்களில் எழுத்துப் பிழைகளும், இசையில் கூடுதல் குறைவுகளும் இருந்தாலும் அடுத்த பதிப்பில் இக்குறைபாடுகள் நீங்கிவிடுமென நம்புகிருேம்.

க. வ. க.

ஹிந்தி போதினி: [ஆசிரியர்: ஆக்கூர் அனந்தாச்சாரி. கிடைக்குமிடம்: கிட்டப்பா பிரசுராலயம், வாலாஜாப்பேட்டை. (S. I. Ry.) விலை ரூ. 1-8-0]

இதுவரையில் வெளிவந்திருக்கும் புத்தகங்களுக்கும் இப் புத்தகத்துக்கும் கொஞ்சம் வித்தியாசம் உண்டு. இப் புத்தகத்தில் கண்டுள்ள வாக்கியங்களைக் கற்றுக் கொண்டால் சாதாரணமாக ஹிந்தியைப் பேசத் தொடங்கிவிடலாம். கடைசிப் பக்கங்களில் சிறு கதைகளையே ஹிந்தி பாஷையில் எழுதுவதை விட்டுவிட்டு, டாக்டர் ரங்காச்சாரியார் ஜீவியச்சரித்திரத்தையும் மற்றுமுள்ள கட்டுரைகளையும் எழுதியிருப்பது பொருத்தமாக இல்லை.

பூ. ஆ. தி.

புதிய பாதை: [ஆசிரியர்: குயிலன். கிடைக்குமிடம்: முற்போக்குப் பிரசுரம், தேவகோட்டை. விலை அணுஐந்து]

விவசாயிகளின் பிரசினையைப்பற்றி எழுதப்பட்ட கதை. சரிவாரம் கேட்கும் விவசாயிகளின் போராட்டத்தின் சில அம்சங்களைக் கதை தொட்டுச் செல்லுகிறது. நல்ல முயற்சி.

நலமைத் திருக்குறள்: [ஆசிரியர்: அ. நடேச முதலியார். கிடைக்குமிடம்: மாவட்டத் திருவள்ளுவர் கழகம், நந்திகோவில் தெரு, தெப்பக்குளம், திருச்சி. விலை அணு எட்டு]

குறள் அதிகாரங்களின் முதற்குறளைமட்டும் எடுத்து 133 ஆகத் தொகுத்து அதற்குச் சுருங்கிய அளவில் விளக்கமும், அர்த்தமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் லகுவான, வழக்கத்திலுள்ள சொற்களால் விளக்கியிருந்தால், நூல் மிகவும் பயன்படும். பாடல்களையும் பதம் பிரித்துப் போட்டிருத்தல் வேண்டும். சாதாரண முயற்சி.

அஹிம்சா சமதர்ம கிராமக்குடியரசு: [ஆசிரியர்: வடுகபட்டி மு. சொ. நாட்டராயன். கிடைக்குமிடம்: நாட்டராயன், வடுகபட்டி, அரச்சலூர் போஸ்ட், ஈரோடு வழி. விலை ரூ. 1-8-0]

சமதர்ம சமுதாயத்தை அஹிம்சா பூர்வமான முறையில்தான் நிர்மாணிக்க முடியும் என்கிருர் நூலாசிரியர். தாம் எந்தக் கட்சி வாதியுமல்ல; ஒரு லட்சிய வாதி என்கிருர். இந்த நூலும் அவரது லட்சிய வாதத்தைத் தான் பிரதிபலிக்கிறது. மார்க்சுக்கு முன்பே தாமஸ்மூர் உட்டோபியன் சோஷியலிஸத்தைக் கனவுகண்டார். அது எவ்வளவு தூரம் அஸ்திவாரம் அற்றது என்பதை மார்க்ஸ் விஞ்ஞான பூர்வமாய் விளக்கினுர். இந்த நூலில் சமதர்மக் குடியரசை நிறுவுவதற்கான திட்டவட்டமான வழிகளையோ பாதைகளையோ சரியாக வரையறுக்கவில்லை. எனவே இது ஆசிரியரின் ஆர்வத்தில் பிறந்த சொப்பனமாகத்தான் படுகிறது. மேலும், புத்தகம் முழுவதும் காரசாரமான மேடைப் பிரசங்க பாணியில் இருப்பதால், படிப்பதற்கு ஏற்றதாகவும் தோன்றவில்லை.

தொ. மு. சி.

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

88893
சென்னை-600 008


மிகவும்
ருசிகரமானது
மாத்திரமல்ல-
இது
நல்லது !
Cadbury's
BOURN-VITA
THE IDEAL
FOOD DRINK
BY CADBURYS
ALISTS IN FOOD
S FOR 100 YEARS
முக்கியமாக
குழந்தைகளுக்கு
போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும், வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்கமளித்து ஜீவசக்தி ததும்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.
காட்பரி என்பது சிறந்த ரகத்திற்கு அறிகுறி

சக்தி வெளியீடுகள்

செல்வம் — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம். 1 8 0

லெனின் பிறந்தார் — ஆர். ராமநாதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப் புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும். 3 8 0

உலோகங்களும் நாமும் — மு. அருணசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ரூ. 5 0 0

உணவுப் பஞ்சம் — மு. அருணசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வாராதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 8 0

ஐந்தாவது சுதந்திரம் — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினான்கு கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக்கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமை தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள்தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

சக்தி காரியாலயம், சென்னை 14

சக்தி வெளியீடுகள்

இனி நாம் செய்ய வேண்டுவது யாது? — டால்ஸ்டாய்
உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம். ரூ. 3 0 0

அபேதவாதம் — ராஜாஜி
பொது உடமைத் தத்துவத்தை இந்திய முறையில் ராஜாஜி விளக்கி இருக்கிறார். ரூ. 1 0 0

அறிஞர் மார்க்ஸ் — ஆர். ராமனுதன்
உலகத்தை உய்விக்கத்தோன்றிய மகான் மார்க்ஸின் கொள்கையும் வரலாறும் ரூ. 1 8 0

ஏசுநாதர் போதனை — ஜே. ஸி. குமரப்பா
ஏசுபெருமான் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனையால் மக்கள் அடையக்கூடிய பயன்களையும் விளக்குகிறது இந்நூல். மகாத்மாவின் அருமையான முன்னுரையும் இருக்கிறது. ரூ. 1 8 0

ரத்தக் களரி — நேதாஜி
இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அவ்வப்பொழுது பேசிய பிரசங்கங்களின் தொகுப்பு, உக்ரமிக்க பேச்சுக்கள் சக்தி மோஹன் மொழி பெயர்த்தது. ரூ. 1 8 0

சூரிய நமஸ்காரம் — டி. வி. திருவேதி
சூரிய நமஸ்கார முறைகள், மந்திரங்கள், நியமங்கள் இவைகளால் ஏற்படும் நன்மைகள் அடங்கியிருக்கின்றன. ரூ. 1 0 0

பாரதியார் சரித்திரம் — செல்லம்மா பாரதி
மகாகவி பாரதியாரைப் பற்றி அவருடைய மனைவி சொல்லும் வரலாறு. ரூ. 2 0 0

சக்தி காரியாலயம் சென்னை, 14

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

○

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

○

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

உங்களுடைய நாவல்

•

பெண் மனம்

•

ஸ்ரீமதி 'லக்ஷ்மி' எழுதிய இந்த அருமையான நாவலைப் பற்றி நாங்களா சொல்ல வேண்டும்? ஆனந்த விகடனில் இந்த நாவல் தொடர்பாக வெளிவந்தபோது தமிழறிந்த வீடுகளிலே இதைப்பற்றித்தான் பேசினார்கள். நீங்களும் படித்துத்தான் பாருங்களேன். சுமார் 300 பக்கங்கள் உள்ள இந்தப் புத்தகத்திற்கு நீங்கள் கொடுக்க வேண்டியது மிகவும் குறைவான விலைதான்.

★

விலை ரூ. இரண்டேகால்

தபால் செலவு தனி

★

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை - 14.



அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்